8

வசந்தம்

பார்த்திப, மாசி. -/8

JL
m211, N42vm
N46.4.11
197240

கோயமுத்தூர்

பைனுன்சிங் கார்ப்பரேஷன்

பேங்கர்ஸ்,

ராஜ வீதி, கோயமுத்தூர்.

★ செல்வத்தை சேகரித்து வைக்க சிறந்த வழி

லாபம் தரும் ஏலச்சீட்டுகள்

(ரூ. **10,000**; ரூ. **7,500**; ரூ. **5,000**; ரூ. **2,500**)
நடைபெற்று வருகின்றன

புதிய செட்டும் விரைவில் ஆரம்பிக்கப்படும்

★ சந்தாதாரர்களுக்குத் தேவையானுல செலுத்தியுள்ள
தொகையில் ரூ. 100-க்கு 90 வீதம்
கடன் கொடுக்கப்படும்.

பேங்க் சம்பந்தமான சகல வரவு சிலவுகளும் நடத்தப்படும்.

விவரங்களுக்கு :—

N. R. லிங்கப்ப கவுடர்,
மேனேஜிங் பார்ட்டனர்,
கோயமுத்தூர் பைனுன்சிங் கார்ப்பரேஷன்,
கோயமுத்தூர்.

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ, 25.

வசந்தா மில்ஸ்

லிமிடெட்.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

1934-ஹு கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சிப் பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல்:

20 நெ. முதல் 44 நெ. வரை, ஒத்தை, முறுக்கு, காரம் சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:

வேஷ்டிகள், லாங்கிளாத்,
டவல், சர்ட்டிங்,
மல், சதர்,

தயாரிக்கிறோம்.

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.

600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.

10 APR 1946

உச்ச தொகை வரை
சாத்தியமானதையெல்

என்று ரிஸெர்வ் பாங்க்

"எதிர்காலத் தேவைகளுக்காகக் கொஞ்சம் சேர்த்து வைக்க விரும்பும் ஒரு எளியவரைப் பொறுத்தவரையில், இந்தியா கவர்ன்மென்டாரால் வெளியிடப்படும் நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளைவிடச் சிறந்ததும் பத்திரமானதுமான பணச் சேமிப்புச்சாதனம் வேறொன்றுமில்லை. உண்மையிலேயே, பணத்தை வட்டிக்குப் போட்டுவைப்பதற்கு அவை மிகச்சிறந்த சாதனங்களாகும். அதனால்தான், 5,000 ரூபாய் மதிப்புக்குமேல் இந்த ஸெர்டிபிகேட்டுகளை வாங்க யாரும் அனுமதிக்கப்படுவதில்லை. இந்த எல்லைவரையில் உங்களுக்குச் சாத்தியமானதை யெல்லாம் வாங்குங்கள் என்பதே நான் சொல்லக் கூடிய ஆலோசனையாகும்."

C. D. Deshmukh

ஸ்ரீ சிந்தாமன் தேஷ்முக்
ஸி. ஐ. இ., இந்திய ரிஸர்வ்
பாங்க் கவர்னர்.

நாஷனல் ஸேவிங்ஸ்

AC-IA-TM

Vasant

யில் உங்களுக்குச்
லாம் வாங்குங்கள்
கவர்னர் சொல்லுகிறார்

பார்த்ததும் தெரிந்து கொள்ளக்கூடிய விஷயங்கள்

1. நீர் நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை 5, 10, 50, 100, 500, 1,000 . அல்லது 5,000 ரூபாய்களுக்கு வாங்கலாம்.

2. எந்த ஒரு நபரும் 5000 ரூபாய்க்கு மேல் வாங்க முடியாது. இவை மிகச் சிறந்தவைகளான படியால், எல்லாருக்கும் கிடைக்கும்பொருட்டு ஒருவருக்கு அவைகளை இன்ன மதிப்புவரையில்தான் கொடுக்கலாமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இரண்டுபேர் கூட்டாக 10,000 ரூபாய்க்கு வாங்கலாம்.

3. இவைகளின் மதிப்பு 12 வருஷங்களில் 50 சதவீதம் உயருகிறது. வட்டிக்குப்போட்டு வைக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாயும் ஒன்றரை ரூபாய் ஆகி விடுகிறது.

4. உரிய காலத்தில் இவைகளினால் கிடைக்கும் லாபம் $4\frac{1}{6}$ சதவீதம் தனிவட்டியாகும்.

5. சம்பாதிக்கப்பட்ட வட்டிக்கு இன்கம் டாக்ஸ் செலுத்தவேண்டியதில்லை.

6. இவைகளை 2 வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட்டுகள் விஷயத்தில் 18 மாதங்களுக்குப் பிறகு) ரொக்கமாக மாற்றிக்கொள்ளலாம்; ஆனால், நீர் இவைகளை முழு காலம் முழுவதும் வட்டிக்கு விட்டு வைத்திருந்தால், உமக்கு நல்ல லாபம் கிடைக்கும்.

7. சிறு தொகைகளைச் சேர்த்து வைப்பவர்கள் 1 ரூபாய், 8 அணா அல்லது 4 அணாவுக்கு ஸேவிங்ஸ் ஸ்டாம்புகள் வாங்கலாம். சேர்க்கப்பட்ட ஸ்டாம்புகளின் மதிப்பு 5 ரூபாயானதும், அவைகளைக்கொடுத்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக ஒரு ஸெர்டிபிகேட் பெற்றுக் கொள்ளலாம்.

8. இந்த ஸெர்டிபிகேட்டுகள், ஸ்டாம்புகள் ஆகிய இரண்டையும், தபாலாபீஸுகளிலாவது கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம்பெற்ற ஏஜெண்டுகளிடமாவது, ஸேவிங்ஸ் பீரோக்களிலாவது பெற்றுக்கொள்ளலாம்.

உமது பணத்திலிருந்து 50 சதவீதம் லாபம் கிடைக்கும்படிச்செய்துகொள்ளவும்

ஸெர்டிபிகேட்டுகள் வாங்கவும்

1946

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

★

ஆர்யவைத்தியர்

பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய பார்மஸி

திருச்சி ரோடு :: கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

THE VASANTHA DYEING WORKS,

181. Oppanakara Street
Coimbatore.

Phone No. 155. **Estd., 1921.**

Proprietor
C. M. Subramanya Chettiar
CONTRACTOR
To
THE VASANTHA MILLS, LIMITED.
SINGANALLUR.

For all kinds of dyeing border yarn and tie yarn etc., undertakes any variety of colour dyeing at reasonably cheap rates for dyeing all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

The Fashionable
Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', Gents', Children's
Underwear Sport Shirts etc.

S. BEEMIAH CHETTY,

"WHITE SHOP"

இந்தியன் பாங்கு லிமிடெட்

தலைமை ஆபிஸ்: 'இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்'

நார்த் பீச் ரோடு :: மதராஸ்

லோகல் ஆபிஸ்கள் :

எஸ்பிளனேட்
மயிலாப்பூர்
புரசவாக்கம்
எக்மோர்
திருவல்லிக்கேணி
தியாகராயநகர்
மவுண்டுரோடு

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபிஸ்களுமுள்ளன.

வழங்கி வாக்களிக்கப்பட்ட
மூலதனம் ரூ. 68,71,800
செலுத்தப்பட்ட ,, ,, 44,42,662
ரிஸர்வ் நிதி ,, 49,50,000
டிபாஸிட்டுகள் 31—12—45 முடிய
ரூ. 13½ கோடிக்கு அதிகம்

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும்
ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விபரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபிஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர், செக்ரடரி

IBN 101

Amenities and Relief Fund

NEEDS HELP

If it is to serve the
Indian and British Forces on
Occupational duties as
**the Governor's War Fund served them
during the War**

PLEASE SUBSCRIBE GENEROUSLY AND QUICKLY.

Please send your remittance to the Honorary Treasurer,
H. E. THE GOVERNOR'S AMENITIES & RELIEF FUND,
C/o Imperial Bank of India, 1st Line Beach,
MADRAS.

தி சென்டரல் பேங் ஆப் இந்தியா, லிமிடெட்.

(இந்தியாவிலேயே மிகப் பெரிய இந்தியன் ஜாயின்ட் ஸ்டாக் பேங்)

(ஸ்தாபிதம்: டிசம்பர் 1911)

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ.	5,25,00,000
வாக்களிக்கப் பட்ட மூலதனம்	ரூ.	5,04,39,600
செலுத்தப் பட்ட மூலதனம்	ரூ.	2,51,02,200
ரிசர்வும் மற்ற நிதிகளும்	ரூ.	2,54,72,000
டிபாசிட்டுகள் 31–12–1944ல் இருந்தபடி ...	ரூ.	94,48,67,000

தலைமை ஆபீசு:

மகாத்மா காந்தி ரோடு, போர்ட், பம்பாய்.

இந்தியா முழுவதிலும் 180க்கு மேற்பட்ட கிளை ஸ்தாபனங்களும், வளங்கும் ஸ்தாபனங்களும் பெற்றது.

மானேஜிங் டைரக்டர்:- Mr. H. C. கேப்டன், J. P.

டைரக்டர்கள்:-

Sir. H. P. மோடி K. B, E. (தலைவர்)
ஹரிதாஸ் மாதவதாஸ
ஆர்டிஷ B. துபாஷ்
டின்ஷா D. ரோமர்
நூர்முகமத் M. சினய்
பாபுஜி தாதாபாய் லாம்
தரம்ஷே முல்ராஜ் காட்டாவ்
ஹார்மஜி பிரேம்ஜி கனிஷாரியட்
விதல் தாஸ் கான்ஜி

லண்டன் ஏஜண்டுகள் :- மெஸ்ர்ஸ், பார்க்லேஸ்பேங் லிமி மிட்லண்ட்பேங் லிமி.,

நியூயார்க் ஏஜண்டுகள்:- தி காரன்டி டிரஸ்ட் கம்பனி ஆப் நியூயார்க்

எல்லாவிதமான பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும். விண்ணப்பம் செய்து விவரங்களை ஊர்ஜிதம் செய்து கொள்ளலாம்.

தென் இந்தியாவின் கிளை ஸ்தாபனங்கள்:—

அடோனி, ஆலப்பிலை, ஈரோடு, பங்களூர், பெஜவாடா, கள்ளிக் கோட்டை, கொச்சி, கோயமுத்தூர், கட்பபை, தோணி, எர்ணாகுளம், குண்டக்கல், கோவில்பட்டி, கர்நூல், மதராஸ், மதுரை, நந்தியால், பொள்ளாச்சி, சேலம், திருப்பூர், திருச்சூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, உடுமலைப்பேட்டை, விருதுநகர்.



நெ. 5. சித்திர விளக்கச் சிறு நூல்கள்

உங்கள் நிர்மாண திட்டங்களில் உதவக் கூடிய எங்கள் 50-ரக சித்திர விளக்கச் சிறு நூல்களில் ஐந்து இவை. முழு ஜாபிதா வேண்டுவோர் இந்தக் கூப்பனை உபயோகிக்கவும்.

தி கான்க்ரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா
199, மௌண்ட்ரோட், சென்னை.

தயவு செய்து, ஆங்கிலத்திலுள்ள தங்கள் 50-ரகச் சிறுநூல்களின் முழு ஜாபிதா ஒன்று எனக்கு அனுப்பவும்.

பெயர்...

தொழில்...

விலாசம்...

V (தெளிவாக எழுதவும்)

ஸி.எம்.ஐ டிஸ்டரிப்யூட்டர்ஸ் ஆப்

தி ஸிமெண்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா

C.M.P.A

வசந்தம்

மலர் 4	பார்த்திப ஸூ மாசி மீ	இதழ் 11

பொருளடக்கம்

மலர் மணம்	...	... ...	... 1
பூகம்பம்	...	ஆர். கே. விசுவநாதன்	... 2
எழுத்தாளர் ஒற்றுமை	...	ரா. நா	... 6
இளந்தென்றல்	...	"விசுவம்"	... 8
இதய ஒலி	...	டி. எஸ். சங்கரன்	... 17
கலைக் கோயில்	...	சுவாமி சுத்தானந்த பாரதியார்	... 19
கொங்கு நாடு	...	வித்வான் அ. கிருஷ்ண மூர்த்தி	... 25
விடுதலை	...	கே. சி. எஸ். அருணாசலம்	... 29
சேவை	...	"பாலகவி"	... 33
செய்யுளும் வசனமும்	...	சி. ஆர். ராமசாமி	... 34
சம்பாஷணையும் ஒரு கலையே	...	ரா. பா. தியோதர்	... 37
பெண்	...	ஜெயலக்ஷ்மி ஆர். ஸ்ரீனிவாசன்	... 41
அன்பு மலர்	...	கு. பா. சேது அம்மாள்	... 57
ஏய் ரிக்ஷா	...	"சுகி"	... 63
தேவி	...	ஆர். சுப்பையன்	... 68
சாவித்திரி	...	ஆர். ஷண்முகசுந்தரம்	... 69
புத்தக ஆராய்ச்சி	...	... ...	... 75
வேய்ங் குழல்	...	"செந்தாமரை"	... 76
விமர்சனம்	...	கோமதி சுவாமிநாதன்	... 77
வாழ்க்கை விசித்திரம்	...	என். சுப்பிரமணியம்	... 80

'வசந்தத்'தில் வெளிவரும் கதைகள், கட்டுரைகளில் காணப்படும் பெயர்களெல்லாம் கற்பனை.

தோப்பு விருந்து

பொதுவாகக் குறிப்பிட்ட சிலருக்காக நடத்தப்பட்டு வந்த சில சம்பவங்கள் இப்போது ஒரு காரியத்தில் ஈடுபட்ட பலர் ஒருவரையொருவர் அறிமுகம் செய்து கொள்ளும் விசேஷ தினமாகி விட்டது. கலாசாலைகளும் இதர ஸ்தாபனங்களும் ஆலைத்தொழிலிலீடுபட்டவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தேனீர் விருந்தளிப்பதுண்டு.

வேறு சந்தர்ப்பங்களில் சுலபமாக நெருங்க முடியாத பலருடன் பழகவும், தேனீர் அருந்திக் கொண்டே ஜாதி மத பேதமில்லாமல் ஒருவரோடொருவர் பேசிப் பல விஷயங்களைக் கிரஹிக்கவும் உதவுவது இத்தகைய உல்லாசமான விருந்துகளே.

இது போன்ற விருந்துகளில் பலரும் கூடுவதுண்டு. எவ்வூரிலிருந்து வந்தவராஞலும் தன் சொந்த ஊரில் கிடைப்பதும் எப்போதும் புது மணம் நிறைந்த ப்ரூக் பாண்ட் தேயிலையைக் கட்டாயம் கண்டு கொள்வார்.

புத்தப் புதுமை • குறைந்த நேரமே — தோட்டத்திலிருந்து தொண்டைக்கு.

ப்ரூக் பாண்ட்

" இரு இலையும் ஒரு மொட்டும் "



நீண்ட தமிழால் உலகை

நேமியின் அளந்தான் — கம்பர்

மலர் மணம்

இயற்கையாக அமைந்த ஒரு உயிரோவியம் முகப்புக்கு சோபை தருகிறது. இந்த இதழில் பல ரசனைக்கும் ஏற்ற விதவிதக் கதை, கட்டுரை, சரித்திரம், விஞ்ஞானம், இலக்கிய ஆராய்ச்சி, கவிதைகள் முதலான அம்சங்கள் அலங்கரிப்பதை அனுபவிக்கலாம்.

தமிழ்நாட்டுக் கலைஞர்கள் கூடிய இந்தச் சந்தர்ப்பத்தில் உலகக் கலைஞர்கள் கூடிய ஒரு அற்புதக் காட்சியை சுவாமி சுத்தானந்தர் கற்பனை செய்து தந்திருக்கிறார். அது ஒரு ஆனந்தக் காட்சி.

இயற்கை நிகழ்ச்சிகளில் பூகம்பம் ஒன்று. அந்த அதிசயத்தை விளக்குகிறார் திரு விஸ்வநாதன்.

ஸ்ரீமதி சேது அம்மாள் சித்திரித்துள்ள "அன்பு மலர்" உள்ளத்திலே உயரிய எண்ணங்களைத் தூண்டுகிறது.

சம்பாஷணையும் ஒரு கலையே,' 'கலைக் கடிதம்,' 'விமர்சனம்' முதலியன சிந்தைக்கு ஏற்ற நல்ல விருந்துகள்.

—ஆசிரியர்.

192240

பூகம்பம்

ஆர். கே. விசுவநாதன்

இயற்கை விநோதங்களைக் கண்டு களித்துப் பாடாத கவிகள் இல்லை. ஆனால் பூகம்பம், எரிமலைகள், புயற் காற்று, வெள்ளம் முதலிய இயற்கை சம்பவங்களை நினைத்தாலே நாம் நிகிலடைகிறோம். இவற்றைத் தடுப்பது என்பது மனிதனால் முடியாத காரியம்.

இருந்தாலும் அவை உண்டாகும் விதத்தை விஞ்ஞான துணை கொண்டு அறியலாம். பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் பீஹார் மாகாணத்திலும், நேபாளத்திலும் ஒரு பெரிய பூகம்பம் ஏற்பட்டது. மூன்றே நிமிஷத்தில் மாங்கியர், காட்மண்டு, பாட்னா, டார்ஜிலிங் முதலிய ஜனபெருக்கமுள்ள நகரங்கள் பிணக் காடுகளாக ஆயின. பெரிய கட்டிடங்கள் எல்லாம் இடிந்து தவிடு பொடியாகி விட்டன. தரை அனேக இடங்களில் வெடித்தது. வெடித்த இடங்களிலிருந்து தண்ணீரும், மணலும் கட்டுக் கடங்காமல் வெளிப்பட்டன. இது ஏற்பட்டு சில காலத்துக்குள்ளேயே பலுஜிஸ்டானில் உள்ள குவெட்டா என்னும் பெரிய நகரத்தில் மற்றொரு பூகம்பம் உண்டாயிற்று. இது இரவில் ஏற்பட்டதினால் ஜன சேதம் ஏராளமாக நேர்ந்தது. அன்றிரவு சுமார் இருபதினாயிரம் பேர் இறந்ததாகக் கூறப்படுகிறது பீஹாரில் ஏற்பட்டதைப் போல அவ்வளவு விஸ்தீரணத்துக்கு இங்கு பூகம்பம் ஏற்படாவிட்டாலும் ஜன சேதம், பொருள் சேதம் இரண்டும் பீஹாரில் ஏற்பட்டதைபோல இருந்தது. பீஹாரில் மேடு பள்ளங்கள் மாறி பயிர் நிலங்கள் எல்லாம் பாழாகி விட்டன. இதனால் பல வருஷங்களுக்கு சாகுபடி செய்ய முடியாமல் போய் விட்டன.

பூகம்பம் எவ்வாறு உண்டாகிறது என்பதை அறிவதற்குமுன் பூமி எவ்வாறு உண்டாயிற்று என்பதைப் பற்றி சிறிது கூற வேண்டியிருக்கிறது. பூமி சூரியனின்று பிரிந்த விதத்தைப் பற்றி விஞ்ஞானிகளினிடையே இரண்டு சித்தாந்தங்கள் இருந்து வருகின்றன. கோடிக் கணக்கான வருஷங்களுக்கு முன் சூரியன் தன்னைச் சுற்றி யாதொரு கிரகமும் இல்லாமல் தனியே வானத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் போது ஒரு சமயம் திடீரென்று மற்றொரு நக்ஷத்திரம் அதை நெருங்கி வந்திருக்க வேண்டும். அப்பொழுது இரண்டுக்குமிடையே கவர்ச்சி ஏற்பட்டு அதன் விளைவாக சூரியனிடமிருந்து சில பாகங்கள் தெறித்து வந்திருக்க வேண்டுமென்றும் அவைகளில் ஒன்றுதான் நாம் வசிக்கும் பூமி என்றும் கூறுகிறார்கள். இது ஒரு சித்தாந்தம். மற்றொரு சித்தாந்தத்தில் சூரியன் தன்னைத்தானே சுற்றி வரும் போது அதன் விளிம்புப் பிரதேசத்தில் உள்ள பாகங்களின் கதி அதிகரிக்க அப்பாகங்கள் சூரியனின் கவர்ச்சியை மீறி தெறித்து

வெளிப் படவே கிரகங்கள் உண்டாயிற்று என்று கூறுகிறார்கள். காரணம் எப்படி இருந்த போதிலும் பிரிந்த சமயத்தில் பூமியும் சூரியனைப் போல நெருப்புப் பிழம்பாக இருந்திருக்க வேண்டுமென்றும் காலப் போக்கில்தான் பூமியின் மேற்பரப்பு குளிர்ந்திருக்க வேண்டுமென்றும் அனைவரும் ஒப்புக் கொள்கிறார்கள்.

பூமியின் மேற்பரப்பு குளிர்ந்த போது ஆங்காங்கே உள்ள பொருளின் திண்மைக்குத் தகுந்தவாறு சில இடங்களில் மலைகளும், சில இடங்களில் பள்ளத் தாக்குகளும், மற்றும் சில இடங்களில் சமவெளிகளும் உண்டாயின. பூமியின் மேற்பரப்பு குளிர்ந்ததேயொழிய பூமியின் உட்புறம் குளிரவில்லை. இதன் காரணமாக சில சமயம் பூமி வெடித்து எரிமலைகளைக் கக்குவதுண்டு. பூமி அவ்வாறு வெடிக்கும் போது உண்டாகும் அதிர்ச்சி மற்ற பாகங்களுக்குப் பரவும்- எனவே பூகம்பம் உண்டாவதற்கு எரிமலைகள் ஒரு காரணம். பெரிய மலைத் தொடர்களின் அடிவாரத்தில் அவற்றின் பளு தாங்க மாட்டாமல் பூமியில் விரிசல் (Fault) ஏற்படுவதுண்டு. இதன் விளைவாக மலைப் பிரதேசங்கள் சரியும். சரியும் போது உண்டாகும் அதிர்ச்சி மற்ற இடங்களுக்கு பரவி தீங்கை விளைவிக்கும். சரிவு நிதானமாக ஏற்பட்டால் அதிர்ச்சி கடுமையாக இருப்பதில்லை. சரிந்தது காலப் போக்கில்தான் தெரிய வரும். சரிவு திடீரென்று ஏற்படும் போது அதிர்ச்சியின் சக்தி அதிகம். இதனால் அதிர்ச்சி அதிக தூரமும் பரவுகிறது. பூகம்பம் ஏற்படுவதற்கு இது மற்றொரு காரணம். இக்காரணத்தினால் தான் பூகம்பங்கள் அடிக்கடி நிகழ்ந்து வருவதாக கூறப்படுகிறது. விஞ்ஞானிகள் கூறும் மூன்றாவது காரணத்தை கவனிப்போம். பூமியின் மேற்பரப்பின் பெரும் பகுதி கடல். கடலின் அடிவாரம் சில சமயம் சில இடங்களில் அமுங்கி விடுகிறது. இதனால் கடலில் பெருத்த அலைகள் உண்டாகி அருகிலுள்ள பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கி விடுகின்றன. அப்பொழுது பூமிக்கு ஏற்படும் அதிர்ச்சி மற்ற இடங்களுக்கும் பரவுகிறது. சற்றேறக் குறைய இருநூறு வருஷங்களுக்கு முன் ஐரோப்பாவிலுள்ள போர்ட்சுகல் என்னும் நாட்டில் இது போன்ற பூகம்பம் ஏற்பட்டது. அந்நாட்டின் தலை நகரான லிஸ்பனு (Lisbon) க்கு அருகாமையிலுள்ள கடலில் நாற்பது அடி உயரத்திற்கு அலைகள் கிளம்பி நகரத்தின் பெரும் பகுதியை அழித்து விட்டதாகக் கூறப்படுகிறது. அப்பொழுது ஏற்பட்ட பூகம்பத்தின் விளைவாக அங்கிருந்து வெகு தூரத்துக்கு அப்பாலுள்ள ஏரிகளின் நீர் மட்டம், குடத்தில் தண்ணீர் ஆடுவதுபோல இரண்டு மூன்று அடி உயரம் கிளம்பி ஆடிக் கொண்டிருந்ததாம். தமிழ் நாட்டில் ஒரு காலம் பிரசித்தி பெற்ற 'புகார்' என்னும் பட்டிணமும் இத்தகைய கதியைத்தான் அடைந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது.

அதிர்ச்சி பரவும் விதத்தை இப்பொழுது பார்ப்போம். குளத்தில் ஒரு கல்லைப் போட்டவுடன் வட்டம் வட்டமாக அலைகள் நாற்புறமும் பரவிச் செல்வதை அனைவரும் கவனித்திருக்கலாம். கல் விழுந்த இடத்திலிருந்து கிளம்பிய இவ்வலைத் தொடர் சிறிது தூரம் சென்றவுடன் மறைந்து விடுவதையும் பார்க்கலாம். மறையும்

தூரம் கல் விழுந்த இடத்தில் நீருக்கு ஏற்பட்ட அதிர்ச்சியின் சக்தியைப் பொருத்திருக்கும். கல் விழுந்த இடத்துக்கு அருகில் ஒரு கெட்டித் துண்டு அல்லது மரத் துண்டு மிதப்பதாக வைத்துக் கொள்வோம். அலைகள் பரவி செல்லும் போது இத்துண்டு மேலும் கீழுமாக ஆடுவதைக் கவனிக்கலாம். இத்தகைய அலைகளுக்கு குறுக்கலைகள் (Transverse waves) என்று பெயர். அலைகளில் மற்றொரு விதமுண்டு. இவற்றுக்கு அமுக்கு அலைகள் (Compressianal waves) என்று பெயர். அறுவடை ஆவதற்கு ஒரு மாதத்துக்கு முன் நெற்பயிர் மணிகளை தலையிலேந்திய வண்ணம் நிமிர்ந்து நிற்கும் காக்ஷி அனைவர் மனதையும் கவர்ந்திருக்கலாம். இத்தகைய நிலைமையில் நெற்பயிர் இருக்கும் போது வயலின் ஒரு புரத்திலிருந்து காற்று வீசுவதாக கொள்வோம். அப்பொழுது பயிரில் ஒரு அலை இயக்கம் தோன்றுவதைக் காணலாம். மணிகள் முன்னும் பின்னுமாக ஆடி இவ்வலைத் தொடரை முன்னேறிச் செல்லச் செய்யும். மற்றும் இது செல்லும்போது சில இடங்களில் மணிகள் நெருங்கியும் சில இடங்களில் விலகியும் இருப்பதை பார்க்கலாம். இத்தகைய அலைத் தொடருக்குத்தான் அமுக்க அலைகள் என்று பெயர்.

பூகம்பத்தினால் இரண்டுவித அலைகளும் உண்டாகின்றன. விரிசல் ஏற்பட்ட இடத்திலிருந்து அலைகள் உற்பத்தியாகிப் பரவுகின்றன. இவ்விடத்தை (Focus) என்றும், இதற்கு நேர் உயர பூமியின் மேற்பரப்பிலுள்ள இடத்தை (Epicentre) என்றும் கூறுவார்கள். இவ்விரண்டுவகை அலைகளும் வெவ்வேறு வேகத்துடன் பரவும். அமுக்க அலைகள் குறுக்கலைகளைக் காட்டிலும் வேகமாக பரவுவதால் ஓரிடத்தில் முதல் அதிர்ச்சி அமுக்க அலைகளினால்தான் உண்டாகும்.

சற்று நேரம் கழித்து குறுக்கலைகளினால் அதிர்ச்சி உண்டாகும். இவ்விரண்டுவகை அலைகளும் Focus என்னும் இடத்திலிருந்து நேராக வருபவை. இவற்றைத் தவிர அதிக சக்தி வாய்ந்த மற்றொரு அலைத் தொடர் ஒன்று பரவுகிறது. இதற்கு "Rayleigh waves" "ராலே அலைகள்" என்று பெயர். இவை Focus என்னுமிடத்திலிருந்து நேராக வராமல் பிரதி பலனத்தினால் மேற் பரப்பின் மூலமாகவே பரவி செல்லுவதால் இவ்வலைத் தொடருக்கு பரப்பு அலைகள் (Surface waves) என்றும் பெயர். முன்னர் கூறிய இரண்டுவித அலைகளைக் காட்டிலும் இவ்வலைத் தொடர் தாமதமாகச் செல்லும். ஆனால் இதன் அதிர்ச்சிதான் கன கடுமையாக இருக்கும். எல்லா விபத்துக்களும் இவ்வலைத் தொடரினால்தான் ஏற்படுகிறது. இவ்வலைகள் எல்லாவற்றின் வன்மையை அறிவதற்கு (Seismograph) 'சீஸ்மோ கிராப்' என்னும் ஒரு கருவியை அமைத்திருக்கிறார்கள். பல இடங்களில் சோதனைச் சாலைகளை ஏற்படுத்தி இக்கருவிகளை அமைத்து உலகில் எல்லா இடங்களில் ஏற்படும் பூகம்பங்களைப் பற்றிய விவரங்கள் அறியப் படுகின்றன. ஓரிடத்தில் ஏற்படும் முதல் இரண்டு அதிர்ச்சிகளின் இடைக் காலத்தை அளந்து அலைகளின் உற்பத்தி ஸ்தானத்தை நிர்ணயிக்க முடிகின்றது. மற்றும் அதிர்ச்சியின் பலத்தை இக்கருவியினால் அளந்து இவ்வலைகள் எவ்வளவு தூரம் பரவிச் செல்லுகின்றன என்றும் அறிய முடிகின்றது. எப்பொழுதும் உலகின்

ஏதாவது ஒரு பாகத்தில் பூகம்பம் இருந்து கொண்டே இருக்கிறது என்று கூறுகிறார்கள். ஆனால் அவை எல்லாம் கடுமையாக இருப்பதில்லை என்றும், சிலவற்றினால் தான் சேதம் உண்டாகிறது என்றும் கூறுகின்றார்கள். பிலிப்பைன் தீவுகள், இதாலி, சீனா, ஜப்பான், மெக்ஸிகோ முதலிய இடங்களில்தான் பூகம்பம் அடிக்கடி உண்டாகிறதாக அறிந்தார்கள். உலகில் பூகம்பம் ஏற்படக்கூடிய எல்லா இடங்களையும் அறிந்து அதிலிருந்து ஒரு முடிவை கண்டார்கள். அதாவது பூமியின் மேற் பரப்பில் இடங்கள் எல்லாம் இரண்டு பட்டைகளில் (Belts) அடங்கி விடுவதாக கூறுகிறார்கள். ஒன்றுக்கு Circum Pacific Belt என்றும், மற்றொன்றுக்கு Mediterranean Belt என்றும் பெயர். இவற்றிலும் இவற்றுக்கு சமீபத்தில் உள்ள நாடுகளுக்கும்தான் பூகம்பத்தினால் சேதம் அதிகமாக உண்டாகும். மற்றும் இச்சோதனைகளின் விளைவாக பூமியின் உள் அமைப்பைப்பற்றிய அனேக விவரங்கள் தெரிய வந்தன. எனவே பூகம்பத்தினால் ஏற்படும் உயிர்ச் சேதம், பொருள் சேதம் ஏராளமாக இருந்த போதிலும் பூமியின் அமைப்பைப் பற்றிய நமது அறிவு அதிகரிப்பதைக் கொண்டு நாம் ஒருவாறு மனதைத் தேற்றிக் கொள்ளலாம்.



எழுத்தாளர் ஒற்றுமை

ரா. நா.

சில எழுத்தாள நண்பர்கள் போக்கைப் பற்றி வருந்தி நண்பர் கடிதம் எழுதினார். வருத்தமடைந்தாலும் ஆச்சரியப்படவில்லை. இலக்கிய சிருஷ்டிகள் சொந்தக் கற்பனையல்ல என்று அவர்கள் கூறுவதாக வருத்தம் கொண்டார். இலக்கிய உலகில் பிரசித்தி பெற்ற ஆசிரியர்கள் இம்மாதிரி அபவாதத்திற்கு விலக்காகவில்லை என்பது ஆறுதலளிக்குமானால் ஆறுதலடையலாம்.

எழுத்தாளர்கள் யாவரும் உன்னத நோக்கம் படைத்தவர்கள். உலகத்தை உய்விக்கும் மேன்மையான சேவையில் ஈடுபட்டிருக்கின்றனர். சகோதரத்வம், சமத்வம், சுதந்திரம் இவற்றை உலகத்தில் ஸ்தாபிப்பதற்காக அவர்கள் உயிர் வாழ்கிறார்கள். அவர்களுடைய ஒவ்வொரு சிருஷ்டியும் இவ்வுன்னத நோக்கங்கள் நிறைவேறுவதற்கே சமர்ப்பணம் செய்கின்றனர்.

ஆனால் இவ்வளவு உயர் நோக்கம் கொண்டவர்கள் தங்களுக்குள்ளே இந்த சகோதரத்வத்தை அனுஷ்டிக்கத் தயங்குகிறார்கள். ஒவ்வொரு எழுத்தாளனும்தானே சிறந்த எழுத்தாளனாக மதிக்கப்பட வேண்டும் என ஆசைப்படுகிறான். இந்த ஆசையில் தவறில்லை. ஆனால் பிற எழுத்தாளனுக்கும் இந்த ஆசை இருக்கும் என்பதை அறிந்து அதை மதிக்க மறந்து விடுகிறான். ஒவ்வொருவனும் தன் மேதையை உபயோகித்து இலக்கியங்களைச் சிருஷ்டிக்கிறான். அது சில சமயம் சிறந்ததாகத் திகழலாம். சில சமயம் சாமான்யமாக இருக்கலாம். ஆனால் ஒருவர் சிருஷ்டியை மற்றொருவர் குறைகூற வேண்டும் என்பது அவசியமன்று.

ஏன் எழுத்தாளர்களுக்குள் ஒற்றுமையில்லை? காரணம் அவர்களுடைய பொருளாதார நிலை. இலக்கியங்களுக்கு இயல்பாக ஏற்பட வேண்டிய மதிப்பு இன்னும் அதற்கு அளிக்கப்படவில்லை.

படித்தவர்கள் எண்ணிக்கை குறைவு. அவர்களில் பெரும்

பாலோர் செய்திப் பத்திரிகை களையே படிக்கிறார்கள். சஞ்சிகைகளைப் படிப்பவர்கள் குறைவு. ஆகையால் சுத்த இலக்கியங்களை ரசிப்பவர்கள் குறைவாக இருக்கிறார்கள்.

ஆனால் எழுத்தாளர்கள் எண்ணிக்கை மட்டும் வளர்ந்து வருகிறது. எழுத்தாளர் எண்ணிக்கை பெருகுவது போல் அவர்கள் இலக்கியத்தை மதிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. இந்த நிலையில் எழுத்தாளர்கள் ஒருவரையொருவர் கண்டு பொறாமைப்படுவதுகூட அவ்வளவு ஆச்சரியமல்ல. இந்த எழுத்தாளர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கும் ஆசிரியர்களைத் தங்களுக்கு விரோதிகளாக மதிக்கின்றனர். ஒரு ஆசிரியரைப் பற்றி மற்றொரு ஆசிரியரிடம் குறை கூறுகின்றனர்.

உயர்ந்த இலக்கியமுள்ள எழுத்தாளர்கள் இந்நிலை கண்டு கவலைகொள்ளலாகாது. தங்களுடைய மேதையையும் திறமையையும் அபிவிருத்தி செய்துகொண்டு இலக்கியப் பணியில் ஈடுபட வேண்டும். புகழைக் கண்டு தலை கர்வம் கொள்ளலாகாது; தூற்றலைக் கண்டு கலங்கலாகாது. உண்மையான உழைப்புக்குக் கண்டிப்பாகப் பலனுண்டு.

ஆசிரியர்கள் புது எழுத்தாளர்களைக் கண்டுபிடித்து அவர்களைக் கை தூக்கிவிட வேண்டும். எழுத்தாளர்கள் பணம் சம்பாதிப்பதற்காக எழுதுகிறோம் என்பதை மறந்துவிட வேண்டும். இலக்கிய சேவை செய்வதையே பிரதானமாகக் கருத வேண்டும். சகோதர எழுத்தாளன் நம்மைவிடச் சிறப்பாக எழுதினால் அதைக் கண்டு நாம் பெருமைப்பட வேண்டும். முயற்சி செய்தால் நாமும் சிறப்பாக எழுத முடியும் என்ற நம்பிக்கை வேண்டும்.

நம் கடமை, நாம் முன்னேற வேண்டும் என்கிறதை மட்டும் மனதில் வைத்துக்கொண்டு பிறர் பற்றிப் பொறாமைப் படாத மனப்பாங்கை வளர்க்க வேண்டும். கடவுள் நம்மை சகோதரர்களாக இருந்து பணி புரிவதற்காகத்தான் படைத்திருக்கிறார் என்பதை மனதை விட்டகலாமல் வைத்துக் கொண்டால் எழுத்தாளர் உலகத்தை ஜோதியுறச் செய்து விடலாம். சிறந்த லட்சியம் என்றுமே சிறப்படைய வழி காட்டும்.

★

இளந் தென்றல்

"வீசுவம்"

மனித வாழ்க்கை சுகமுள்ளதாய் இருக்க வேண்டுமென்றுதான் இயற்கையில் இளந்தென்றல் கலந்திருக்கிறது. ராதா தன் வாழ்க்கைப் பூங்காவில் நிரந்தரமாக இளந்தென்றல் வீசிக்கொண்டிருக்கும் என்று நம்பியிருந்தாள். ஆனால் அந்த இளந்தென்றல், பின்னால் பெரும் புயலாக மாறி, மனதை நிலை தடுமாறச் செய்யும் என்பதை அவள் கனவிலும் கருதவில்லை.

ராதாவுக்குப் பதினேழு வயது. களங்கமின்றி செழித்திருந்த அவளுடைய மேனியின் இளமையின் ஜீவகளை ஒவ்வொரு அங்கத்திலும் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. மெய்நிறைந்த யௌவனத்தின் சுழிப்பிலே ஒரு துள்ளலும், துடிப்பும் இருந்தன. அந்த வயதிலே யார் மீதாவது தீவிரமான அன்பைச் செலுத்தினாலொழிய மனம் திருப்தியடையாது! முகில் நிறைந்த வானம் என்றாவது மழை பொழியத்தானே வேண்டும்? ஆனால் காதலை விரும்பிய கன்னி ஒருத்திக்குக் கண்ணீர்தான் கைம்மாறு போலும்!

அந்தச் சமயத்தில்தான் கண்ணன் தன் காலேஜ் படிப்பை முடித்துக் கொண்டு பட்டணத்திலிருந்து அந்தக் கிராமத்திற்கு வந்து சேர்ந்தான். அதிகாலையில் காவிரி நதியிலே புனித நீராடி, இடுப்பில் தண்ணீர் குடத்தை ஏந்திக் கொண்டு வழியிலிருக்கும் சமாதி தோட்டத்திற்குள்சென்று பூஜைக்காக ராதா மலர் கொய்து வருவது வழக்கம். அன்று தற்செயலாக அங்கு வந்திருந்த கண்ணனைச் சந்தித்தாள். அவனுடைய கம்பீரத் தோற்றமும், கண்களின் வசீகரமும் அவளை அந்தரங்க பூர்வமாக அவனோடு ஐக்கியமாக்கி விட்டன. காதல் ஸ்பரிசத்தினால் உண்டாக வேண்டுமா? சாதாரண கடைக்கண் பார்வையிலும் அது வெளியாக முடியும். கண்ணனும் அக்காதலை ஸ்வீகரித்துக் கொண்டான். வாலிபத்தின் மயக்கத்திலிருந்த அவனுடைய வாழ்க்கையில் காலியாக, நிரம்பாமலிருந்த ஓரிடத்தை ராதா நிரப்பி விட்டாள்.

சமாதித் தோட்டத்தில் ஜனித்தது காதல்! பின்னர், அதே இடத்தில் அநேக சமயங்களில், இளங் காதலர்கள் சந்தித்தார்கள். அவர்களுடைய காதல் வளர்பிறை மதியைப்போல உருவாகிக் கொண்டிருந்தது. கண்ணனின் தந்தை, விஜயரங்க முதலியார் தன் பிள்ளைக்கு அந்த வருஷம் கல்யாணம் செய்ய வேண்டும் என்று எண்ணி ஒரு பெரிய இடத்தில் நிச்சயம் செய்து வைத்திருந்தார். ஆனால் ராதாவின் கண் நிறைந்த எழிலைக் கண்டவுடன், தனக்கு ஏற்பாடாகியிருந்த கல்யாணத்திற்கு கண்ணன் இணங்கவில்லை. ஆனால் ராதாவை அவன் மணக்க முடியுமா?

மிட்டாதார் விஜயரங்க முதலியார் ஒருகாலும் இந்தத் திருமணத்திற்கு இசையமாட்டார். ராதா

வின் ரோஜா அழகு, வறுமை முள்ளில் விரிந்து மலர்ந்திருந்தது ஒரு காரணம்! தவிர இன்னும் பல காரணங்கள் காட்டவும் முன் வருவார். இதெல்லாம் கண்ணனுக்கு நன்கு தெரியும். ஆயினும் அதனுலென்ன, எல்லாவற்றையும் எப்படியாவது சமாளித்துக் கொள்ளலாமென்று அந்த மயக்கத்திலே தோன்றியது அவனுக்கு. கண்ணன் காதலிக்கும் போது, ராதாவுக்கு என்ன குறை? அது கிடைப்பதற்கரிய பாக்கியமென்றே கருதினுள். ஆகவே, அவர்களுடைய காதல் வாழ்க்கையும் நறுமணமும், நன் மலருமாகப் பூத்துத் தழைத்துக் கொண்டிருந்தது.

★

உலகம் பூதக் கண்ணுடி கொண்டு பார்த்துப் பிறர் நடவடிக்கைகளை விமர்சனம் செய்கிறது. சமாதித் தோட்டத்திலே கொடிப் பின்னல்களுக்கு மறைவில் சந்தித்தாலுங்கூட, அதன் ஊடுருவிப் பாயும் கண்களுக்கு இளங்காதலர்கள் எவ்வாறு தப்ப முடியும்? அவர்களைப்பற்றி ஊரில் பேச்சு எழுந்தது ஆனல் பெரிய இடத்து விவகாரம் நமக்கு எதற்கென்று சும்மா இருந்துவிட்டனர் இந்த அரைகுறைப் பேச்சுகள் காதில் விழுந்தபோதிலும், ராதாவின் பாட்டி அவைகளை நம்பவில்லை. கண்டிப்பு கட்டுமானத்துடன், தான் கண்காணித்து வரும்போது, ஒரு பேச்சு சொல்லிவிட முடியுமா என்று நினைத்தாள். ராதாவிடம் அவ்வளவு நம்பிக்கை அவளுக்கு! அதைப்பற்றி ராதாவிடம் பிரஸ்தாபித்தபோதுகூட, "அது உண்மைதான்" என்று பாட்டி எதிர்பார்க்கவே இல்லை.

"காதலாவது, கத்தரிக்காயாவது. காதல் எங்கேயடி இருக்கிறது? எல்லாம் பசப்பு வார்த்தைகள். அவைகளை நம்பி மோசம் போகாதே. புருஷர்கள் அப்படித்தான் பேசிப் பேசிக் கவிழ்த்து விடுவார்கள்" என்று எவ்வளவோ எடுத்துக் கூறினாள். ஆனால் வெறி கொண்ட கண்ணனின் காதல் மொழிகள் ஒலித்துக் கொண்டிருக்கும் ராதாவின் காதுகளில் பாட்டியின் வார்த்தைகள் ஏறுமா?

பழைய நினைவுகள், பத்து வருஷங்களுக்கு முன்னால் நிகழ்ந்த சம்பவங்கள் பாட்டியின் மனத் திரையிலே சலனப்படம்போல தோன்றவாரம்பித்தன. "ராதா, உனக்கு உன் தாயாரை நினைவிருக்கிறதா?", என்று கேட்டாள் பாட்டி.

"ஏதோ மங்கலாக ஞாபகம் இருக்கிறது. என்?" என்றாள் ராதா.

"அவளும் இப்படி, உன்னைப் போலத்தானடி, பித்துப் பிடித்து அலைந்து, தன்வாழ்க்கையைப்பாழ் படுத்திக் கொண்டாள். உலகத்தில் காதல் இருந்து விட்டால், அதுதேவலோகமல்லவா. மனித உலகத்தில் காதலுக்கு இடமில்லை. இங்கு இருப்பதெல்லாம் சரீர சுகத்திற்காகத் துடிக்கும் வேட்கைதான்! உன் தாயார் நல்ல இடத்தில்த்தான் வாழ்க்கைப் பட்டாள். ஆனால் எல்லாவற்றையும் இருந்து, ஆண்டு அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை. மணமான சில வருஷங்களுக்குள் அவள் நெற்றிக் குங்குமம் அழிந்து விட்டது. உனக்கு அப்பொழுது ஏழு வயதிருக்கும். உன்னை அழைத்துக் கொண்டு இங்கு வந்து சேர்ந்தாள். அந்தக் காலத்தில் அவள் தன்னுடைய கணவனை நினைத்துப் புலம்பியதும், அவள் சொரிந்த கண்ணீரும் அப்பா! இப்பொழுது நினைத்துக் கொண்டாலும், தேகம் சிலிர்க்கிறது. இங்கு வந்து வெகு நாட்களுக்குப் பிறகும், அவளுக்கு சதா அழுகை முகம் தான். தெருவாசலைக் கூட மிதிப்பதில்லை. எப்பொழுதும் உள்ளுக்குள்ளே அடைத்துக் கொண்டு கிடப்பாள். அப்படியெல்லாம் துயரத்தில் ஆழ்ந்திருந்த மனசு, எப்படித்தான் திரும்பினதோ, எனக்கு இன்னும் வியப்பாகவே இருக்கிறது. அவளுடைய மலர்ந்த முகத்தைக் கண்டு, நானும் சந்தோஷமடைந்தேன். அந்த மட்டிலாவது அவள் தன் துக்கத்தை மறந்தாளே, என்று திருப்தி உண்டாயிற்று எனக்கு. ஆனால் உண்மை என்ன? அவளுடைய மலர்ச்சிக்குக் காரணம் வேறு!

அதேகணம் ராதாவுக்கும் மனம் திக்கென்றது. 'அன்றொரு நாள், சமாதித் தோட்டத்திலே கண்ணனின் அன்பணைப்பிலே......' அந்த நினைவு மனதை உறுத்தவாரம்பித்தது. இளமைக்குப் புத்தி கூறும் காலம் கடந்து விட்டதென்பதை உணராமல், பாட்டி மேலே சொல்லத் தொடங்கினாள்.

"நான் புழுப் போலத் துடித்தேன். அந்த அவமானத்திற்கு என்ன செய்வதென்றே புரியாமல் தவித்தேன். ஊருக்குத் தெரியாமல் இருக்க வேண்டுமே என்ற கவலையால், இரவு பகலாய்த் துடி துடித்தேன். பாவி அற்ப சுகத்தை நாடித் தன் வாழ்வைக் கெடுத்துக் கொண்டாள். அவளைக் கெடுத்த அந்த பாவிப் பயல் பிறகு அவளைத் திரும்பிப் பார்க்கவில்லை. அவனும் செத்தான், பத்து வரு

ஷம் ஓடி விட்டது. அந்த நினைவையும் ஊர் மறந்திருக்கிறது. அதை நினைவு படுத்தி விடாதே, ஜாக்ரதை!'' என்று கூறிய வண்ணம், தன் மகளை எண்ணிக் கண்ணீர் வடித்தாள் பாட்டி. ராதாவின் கண்களிலும் நீர் தளும்பியது. அவள் அதை அடக்கிக் கொண்டு, "பாட்டி என் காதலன் அப்படிப் பட்டவரல்ல. என்னைக் கைவிட மாட்டார்'' என்று தீர்மானமாகக் கூறினாள்.

"கண்ணன் பெரிய இடத்துப் பிள்ளை. நம்முடைய நிலைமைக்கு ஒத்து வருமா? முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போலிருக்கிறது உன் கதை. வீண் ஆசைப்பட்டு அவன் வலையில் விழுந்து விடாதே. அந்த எண்ணத்தை விட்டு விடு'' என்று பாட்டி சற்று கடுமையாகவே சொல்லி முடித்தாள்.

ஆனால் ராதாவின் மனம் நம்பிக்கை இழக்க வில்லை. காதல் நம்பிக்கையில் தானே உயிர் வாழ்கிறது! ஆயினும், தன் காதல் விளையாட்டும் ஒரு வேளை வெறுங்கனவாக முடியுமோ என்றும், தன் தாயாருக்கு ஏற்பட்ட அதே அனுபவம் தனக்கும் ஏற்பட்டு, வாழ்க்கை கசந்து விடுமோ என்ற சந்தேகம் எழுந்த போதெல்லாம், கண்ணனின் மலர்ந்த முகம் அவள் மனக் கண்ணில் தோன்றி, அவளுடைய பயத்தை யெல்லாம் போக்கி விடும். கண்ணனைத் தவிர, வேறு எதுவும் அவள் உலகத்தில் தென்படுவதில்லை. அவனோடு பேசுவதும், அவனையே பார்த்துக் கொண்டிருப்பதும், எங்காவது தனிமையில் அவன் கையைக் கோர்த்துக் கொண்டு, அந்த இன்ப வெறியிலே இந்த உலகை மறந்து போவதும் அவள் கண்ட ஸ்வர்க்கானு போகங்கள்! நாள் முழுவதையும் கண்ணனின் சகவாஸத்திலேயே கழிக்கவேண்டுமென்று ராதா நினைப்பதுண்டு. சதா அவனுடைய தியானம்தான்; மற்றதெல்லாம் அவள் மறந்தாள்.

★

மனிதனின் மனம் ஒரே இடத்தில், ஒரே சிந்தனையிலே ஆழ்ந்து நிலைத்து விட்டாலும், காலச் சக்கரம் மட்டும் ஒவ்வொரு வினாடியும் உருண்டு ஓடுவதைநிறுத்துவதில்லை. ஓடும் கதிரவனின் பின், நாட்களும் பறந்தோடின. கண்ணன் தன் காலேஜ் படிப்பு முடிந்து, சட்டக் கல்லூரியில் சேருவதற்காகப் புறப்பட வேண்டிய தினமும் வந்தது.

சமாதித் தோட்டத்தில் ரகசியமாக இளங் காதலர்கள் சந்தித்தார்கள். அன்று பௌர்ணமி. அவர்களுடைய காதலும் பூர்ணப் பொலிவுடன் திகழ்ந்தது. ஆனால் பிரிவு? அந்தப் பிரிவை நினைத்து, ராதா குழந்தை போல அழுதாள். அவளைத் தன் பரிவு கலந்த ஆறுதல் மொழிகளால் ஆச்வாசப் படுத்திக்கொண்டிருந்தான் கண்ணன். பிரிந்து, வெகு நாள் கழித்துக் கூடப்போவதாக நினைக்கும், இரு உள்ளங்களின் சம்பாஷணை, காட்டில் படரும் கொடிகளைப் போன்றது. அவை எங்கெங்கே, எப்படியெல்லாம் தாவிச் செல்லும் என்பதைத் தீர்மானிக்க முடியாது. கண்ணனும் ராதாவும் வெகு நேரம் அளவளாவிக் கொண்டிருந்தார்கள். கடைசியாக, கண்ணன் ராதாவைத் தன்னோடு அணைத்துக் கொண்டு, ஆதரவு மிகுந்த சொற்களில், "ராதா, நீ கவலைப்படாதே. என் பெற்றோர்களை நம் கல்யாணத்திற்கு இணங்கச் செய்கிறேன். இன்னும் கொஞ்ச காலம்

பொறுத்துக் கொள், உன்னை உலகறிய கைப்பிடிக்க ஏற்பாடு செய்கிறேன்'', என்று கூறி, இன்னும் என்னென்னவோ சபதங்கள் செய்து விட்டுப் பின்னர், விடை பெற்றுக் கொண்டான். இனி தன் கதி என்னவாகுமோ என்று பீதியினால் ராதாவின் தேகம் நடுக்கமுற்றது. கண்ணனை அணைத்துக் கொண்டபோது கூட, அவளுடைய இதயம் புறாவின் மார்புபோல அடித்துக் கொண்டதாக உணர்ந்தாள்.

கண்ணன் பிரிந்து சென்ற பிறகு, பாலைவனமாகத் தோன்றிய ராதாவின் வறண்ட வாழ்க்கையில் இன்ப ஊற்றுகளாக எழுதிய காதற்கடிதங்கள். தன் உள்ளத்தெழுந்த காதலின் வேகத்தையெல்லாம் கொட்டி வரைந்திருந்தான். அவைகளை ராதா திரும்பப் படித்து உளம் மகிழ்ந்தாள். தனக்கு பிரியமான பொம்மைகளைக் குழந்தை தன் பக்கத்தில் வைத்து அணைந்துக்கொண்டு உறங்குவது போல, ராதா அவைகளை எப்பொழுதும் தன் பக்கத்திலேயே பதுக்கி வைத்திருப்பாள். பாட்டியிடம் சிலவற்றைப் படித்துக் காட்டிப் பெருமையடைவாள். ''நீ எப்படியாவது சுகமாய் வாழ்ந்தால் போதுமடி, ராதா. ஏதாவது விபரீதம் நேர்ந்து, பிறகு கண்களைக் கசக்கிக் கொண்டிருக்கக் கூடாதென்று தான் அவ்வளவு தூரம் சொன்னேன்'' என்பாள் பாட்டி.

வாழ்க்கையில் சுகம் என்பது தாமரை இலையில் தண்ணீர் மிளிர்வது போலும்! அந்த அற்ப சுகம் கூட ராதாவுக்கு இல்லாமல் செய்து விட்டது விதி. வாரம் தவறாமல் வந்து, அவளைக் களிப்படையச் செய்து கொண்டிருந்த கடிதங்கள் இப்பொழுது நின்று விட்டன. ஒருகால் படிப்பின் மும்முறத்தினால் தான் எழுதவில்லையோ? ஆனால் முன்பெல்லாம் என்ன வேலை இருந்தாலும் எழுதத்

தவறியதில்லையே. ஒருவேளை, அவருடைய மனம் மாறிவிட்டதோ? பட்டணத்தில் அழகும் படிப்பும் வாய்ந்த பல நாகரீகப் பெண்கள் இருப்பார்கள். அவர்களில் ஒருத்தியை......' இந்த சிந்தனைக்கோவை அத்துடன் அறுந்து விட்டது. இதயமே வெடித்து விடும் போலிருந்தது அவளுக்கு. பேதை மனம் கேள்விகளும் மறு கேள்விகளும் போட்டுக்கொண்டு கடலலை போலப் பொங்கிக் கொண்டிருந்தது.

நாட்கள் செல்ல, இன்பமயமாகத் தோன்றிய வாழ்க்கை கண்ணுங் கண்ணீருமாக முடிந்தது. இனி எவ்வாறு காலம் தள்ளுவதென்று அவளுக்குத் திகைப்பு ஏற்பட்டது. இதுவரை அவளுடைய இதயப் பூங்காவில் வீசிக் கொண்டிருந்த இளந் தென்றல், இப்பொழுது புயலாக மாறிவிட்டது. பயங்கரமான பல எண்ணங்களும் சந்தேகங்களும் அவள் மனதிலே வந்து குமையலாயின.

கண்ணாடி போன்றதுதான் வாழ்க்கையில் சகல அம்சங்களும் இன்பக் காட்சி களாகவே பிரதிபலிக்கும். ஆனல் அதேகண்ணாடி உடைந்து, அதன் தூள் காலிலும் ஏறிவிட்டால் எத்தகைய வேதனை உண்டாகும்?

ஒருவழியும் புலப்படாமல், இரவு பகல் சிந்தனையிலாழ்ந்தாள். இதயத்திலே பொங்கிக் கொண்டிருக்கும் எரிமலையின் ஜ்வாலையை வெளிக் காட்டாமல் எவ்வளவு நாளைக்குத் தான் மூடிவைக்க முடியும்? அழுகையினல் சிவந்திருந்த ராதாவின் கருவிழிகளில் அருவியிடும் கண்ணீரைக் கண்டு, பாட்டி பதறிப்போனள்.

"அழாதே, பாட்டி. நான் என்ன செய்வேன்? என் அறிவு அந்த கணத்தில் மழுங்கிவிட்டது. என் வசமிழந்தேன்! ஆனல் அவர் என்னைக் கைவிடமாட்டார். இது நிச்சயம். அவர் வந்து என்னை ஏற்றுக் கொள்ளும் வரையில், இன்னும் கொஞ்சகாலம் என்னை வைத்துக் காப்பாற்று, பாட்டி," என்று கெஞ்சினள் ராதா. கோபத்தில் குழந்தையை அடித்து விட்டு, அது விசித்துக் கொண்டே

படுத்துறங்கும்போது, தாய் எவ்வளவு பச்சாதாபம் அடைவாள்! அதே நிலையை அடைந்தாள் பாட்டி. தான் ராதாவைத் தேற்றுவதைவிட்டு, அவளை இன்னும் மனமுடையப் பேசிவிட்டோமே என்ற அனுதாபம் பொங்கி வந்தது.

★

மனிதன் வகுக்கும் திட்டங்களெல்லாம் ஒருபொழுதும் ஒழுங்காக நடைபெறுவதில்லை. சில நாட்களுக்குள்ளாகவே, தான் எழுப்பிய மனமாளிகை தகர்ந்து தூளாகிவிடும் என்பதை ராதா சற்றேனும் எதிர்பார்த்திருப்பாளா? வீட்டுக்குள் நுழைந்த பாட்டி, "ராதா, உன் நம்பிக்கையில் மண் விழுந்துவிட்டதடி!" என்று பிரலாபித்துக் கொண்டே வந்தாள். "என்ன பாட்டி, என்ன விஷயம்?" என்று பதறினாள் ராதா.

"கண்ணனுக்கு கல்யாணம் நிச்சயமாகி விட்டது. அவன் வேண்டாமென்று உதறித் தள்ளிய, பழைய பெண்ணேதான். இனி உன் கதி என்னவாகுமோ" என்று சொல்லி கண் கலங்கினாள் பாட்டி.

"பாட்டி அந்தக் கல்யாணம் நடக்காது, பார்" என்றாள் ராதா உறுதியாக.

"போடி போ. தேதி கூட குறித்தாகி விட்டதாம். அடுத்த வாரம் கல்யாணமாம்; கண்ணன் கூட இங்கு வந்து பத்து நாளாகிறது. இனியும் கனவு காணாதே."

"அவர் எனக்கு துரோகம் செய்யமாட்டார் என்றே தோன்றுகிறது, பாட்டி. என்னவோ பார்க்கலாம்" என்று சமாதானமாகச் சொன்னாலும், அவளுக்கே மனம் உள்ளூர மருகிக்கொண்டிருந்தது. 'கண்ணன் உன்னை ஏமாற்றிவிட்டான்' என்று அவளுடைய மனம் அடிக்கடி குத்திக் காட்டுவது போலிருந்தது அவளுக்கு. 'அடிவானத்திலே பூமியும் ஆகாயமும் சந்திப்பதுபோல் தோன்றுகிறதல்லவா? உங்கள் காதலும் அதே போலத்தான்' என்று யாரோ நகைப்பது போல பிரமை தட்டி நிற்பாள்.

அவளுடைய கண்ணன் வேறொருத்தியின் கணவனாகப் போகிறானா?

'அந்திப் பொழுதில் சமாதித் தோட்டத்தில், எந்த இதழ்கள் அவளுடைய செவ்விதழ்களிலே மழைமுத்தம் பொழிந்தனவோ அந்த இதழ்கள் இனி வேறொருத்திக்குச் சொந்தமாவதா?' இம்மாதிரியான சிந்தனைக் கனவில் அவள் மனம் அகப்பட்டு உருகிக் கொண்டிருந்தது. தகிக்கும் வெயிலில் கொடிகள் துவண்டு போவது போல, ராதா நாளுக்கு நாள் மேனி குன்றினாள்.

கலியாணம் நிச்சயம் என்று தெரிந்தது. ராதா இதைக் கேட்டதும், கண்ணீர் சிந்தவில்லை; மனம் பதைக்கவில்லை. எவ்வளவுகாலம் தான் கண்ணீர் உகுத்து மருகுவாள்? இடைவிடாத மன உளைச்சலாலும், ஆழ்ந்த ஏமாற்றத்தாலும், அவளுடைய மனம் உறுதி பெற்றது. வாழ்வின் எல்லைக் கோட்டிலே உலகம் பிதற்றும் வசை என்னும் சுழற்காற்றினூடே நிற்கிறோமென்பதை அவள் நிதர்சனமாகக் கண்டு கொண்டாள். அதனால் இனி எது வந்தாலும் வரட்டும், சகித்துக் கொண்டு போவதென்ற தீர்மானத்திற்கு வந்துவிட்டாள்.

கண்ணனுடைய கல்யாண தினம் நெருங்கிக்கொண்டே வந்தது. பாட்டி தன் விதியை நினைத்து விசித்துக்கொண்டிருந்தாள். அந்த ஊரைவிட்டுக் கிளம்பி வேறெங்காவது செல்ல வேண்டுமென்று தீர்மானித்தாள். மறுநாள் பொழுது புலர்வதற்குள் மங்கலான இருள் உலகத்தை மூடியிருந்தபோது, அவள் வீட்டு வாசலில் ஒரு வண்டி வந்து நின்றது. அது விஜயரங்க முதலியாரின் வண்டிதான். தன் மகனுடைய கல்யாணம் விக்கினமின்றி நடைபெறுவதற்கு, ராதாவை அந்த ஊரிலிருந்து வெளியேற்ற வேண்டிய அவசியத்தை நன்கு அறிந்துகொண்ட முதலியார், தன் வண்டியை அனுப்பியிருந்தார். அதன்பேரில் பாட்டியும் பேத்தியும் பிரயாணத்திற்கு ஆயத்தமானார்கள்.

சாலையில் மரங்கள் அடர்த்தியாக இருந்தபடியால், எங்கும் இருள் மயமாக இருந்தது. ராதாவின் மனதிலும் அந்தகாரம் கவிழ்ந்திருந்தது. சிறிது நேரத்தில் பொழுது விடிந்துவிடும். ஆனால் அவளுடைய துயரங்களுக்கு விடிவுண்டா? சில சமயங்களில் மரங்களினூடே தேய்பிறை மங்கலாகத் தோற்றமளிப்பதை ராதா வண்டிக்குள்ளிருந்தே கவனித்தாள். அது, ‘சந்திரன் வளர்ந்து தேய்வதைப் போலத்தான் காதலும்! அன்று சமாதித் தோட்டத்தில்பூர்ணநிலவினிலே பொலிவுற்ற காதல்தான், இன்று இப்படித் தேய்ந்து பிறைபோலாகிவிட்டது’ என்று அறிவுறுத்துவதாக எண்ணினாள் ராதா.

பித்துப் பிடித்துப் பதுமைபோல உட்கார்ந்திருந்தாள் ராதா. ஆனால் அவள் பாட்டி? விடிவதற்கு இரண்டு நாழிகைப் பொழுது இருக்கலாம். வண்டி ராஜன்வாய்க்கால் பாலத்தைக் கடந்து, அதன் கரையோரமாகப் போகும் சாலையில் திரும்பிச் செல்லவாரம்பித்தது.

ராதா வாய் திறந்து ஒன்றுமே பேசவில்லை. வெப்பம் தாங்காமல் தலைசாய்த்துத் துவளும் அல்லிக் கொடியைப்போல் அவள் வண்டிக்குள்ளே சோர்ந்து படுத்திருந்தாள்.

“படுபாவி, என் தலையில் மண்ணை வாரிப் போட்டுவிட்டானே, அவன் உருப்படுவானா?” என்று உரக்க, பாட்டி சொன்னதைக் கேட்ட ராதாவுக்கு சற்று ரோசமாகத்தான் இருந்தது. “அவரை என் பாட்டி சபிக்கிறாய்? நான்தான் வலுவற்றவள். இயற்கை வெள்ளத்தை எதிர்த்து நீந்துவதற்கு என்னிடம் சக்தியில்லை. அதற்கு அவர் என்ன செய்வார்? நம் விதி; அனுபவிக்கிறோம்” என்றாள்.

“இன்னுமா உனக்கு சந்தேகம்? உன்னை சந்தி சிரிக்க வைத்து விட்டானே, பாவி, துரோகி!” என்று தன் ஆத்திரத்தையெல்லாம் கொட்டினாள் பாட்டி. கண்ணன் நேசத்தில் இன்னும் நம்பிக்கை இழக்காத ராதாவிற்கு அவனைச் சபிப்பது நாராசம் போலிருந்தது.

அப்பொழுது ‘கணகண’ வென்று மணியோசை கேட்க, அவர்களருகே ஒரு சைக்கிள் வந்து நின்றது.

“ராதா, என்ன இது?”

அவள் நிமிர்ந்து பார்த்தாள். கண்ணன்!

“தாங்கள் எங்கு வந்தீர்கள்?”

“உன்னைத் தேடித்தான்.”

"நாளைக்கு நடக்கப் போகும் கல்யாணம்?"

"அது நின்றுவிட்டது, நடக்காது."

"உண்மையாகவா?"

"சத்தியமாக."

ராதாவின் முகம் மலர்ந்தது. கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் உதிர்ந்தது. "இவ்வளவு பிரியமுள்ளவர்தானா, இந்த ஊரில் இத்தனை நாளும் தங்கியிருந்து, என்னை வந்து பார்க்காமலிருந்தீர்கள்?"

நம் கல்யாணத்திற்கு என் தந்தையின் சம்மதம் பெற்ற பிறகுதான், உன்னை சந்திப்பது என்று நினைத்தேன். அதற்கு முன்னால் உன் முகத்தில் விழிப்பதற்கு எனக்கு வெட்கமாயிருந்தது."

"இப்பொழுது?"

"தந்தையுடன் போராடிப் பார்த்தேன். கண்ணீர் விட்டு மன்றாடினேன். அவர் என் கோரிக்கையை அங்கீகரிக்கவில்லை. நான் என் வழியைப் பார்த்துக்கொண்டு வந்துவிட்டேன்."

கண்ணன் கூறியதையெல்லாம் கேட்டு, அப்படியே பிரமித்து நின்றாள் பாட்டி. "பாட்டி, பார்த்தாயா?" என்று குறும்பாகக் கேட்டாள் ராதா. "நீ சொன்னது சரிதான், ராதா. நான் ஏதோ ஆத்திரத்தில் சொல்லிவிட்டேன்" என்று சிரித்தாள் பாட்டி.

அதே சமயம் கிழக்கே உதயமான சூரியனின் செங்கதிர்கள் அவர்கள் மேலெல்லாம் பட்டுத் தெறித்தன.

இனி தன் வாழ்க்கைப் பூங்காவில் இளந்தென்றலேதான் வீசிக்கொண்டிருக்கும் என்ற நம்பிக்கையும் ராதாவிற்கு உதயமாகியது.

வண்டி வந்த வழியே திரும்பி மேடுபள்ளங்களை யெல்லாம் கடந்து, ஒழுங்கான பாதையில் சென்று கொண்டிருந்தது.

இதய ஒலி

[டி. எஸ். சங்கரன் பி. எஸ். ஸி]

அருமை நண்பனுக்கு,

ரொம்ப நாளாகக் கடிதம் எழுதவில்லையே என்று கோபித்துக் கொள்ளுகிறாய். நன்றாகக் கோபித்துக் கொள்! அதற்குக் கூடவா உனக்கு உரிமை இல்லை? நமக்குத்தான் — அடிமை நாட்டில் (நாடு என்ன செய்யும்!) அடிமைகளான நமக்குத்தான் எத்தனையோ உரிமைகள் இல்லை. ஆனால் கோபிக்கும் உரிமையும், சுதந்திரமுமா பறிபோய் விட்டன. நன்றாகக் கோபித்துக் கொள்ளப்பா! கோபம் நல்லதா கெட்டதா — கோபத்தின் பலாபலன் என்ன என்பதுபற்றி இன்னொருதரம் சொல்லுகிறேன். இப்போது சொல்ல வந்த சங்கதி வேறு.

மனதிலே பலவித எண்ணங்கள்; அந்த எண்ணங்களுக்கு ஒரு உருவம் கொடுத்து வெளியிட்டுச் சொல்லா விட்டால் நெஞ்சமே வெடித்து விடும்போல் இருக்கிறது. எதை முதலில் சொல்வது எதை பிறகு சொல்வது என்றே தெரியவில்லை. இது சாமான்யச் சங்கதி அல்ல. தண்ணீர் குடிப்பது போலச் சுலபமான விஷயமும் அல்ல! உள்ளத்திலே சதா ரீங்காரமிடும் அற்புதத்தின் சாரம் இது. ஆனந்தத்தின் உச்சி இது!

உலகிலே மனித வாழ்க்கை உயர் நிலை அடைய வேண்டிப் பாடு பட்டார்களே, அந்த மகான்கள் இறுதியாக என்ன விஷயத்தைக் கண்டு பிடித்தார்கள் தெரியுமா? வாழ்க்கை மேம்பாடு அடைய வேண்டுமானால், அது தானே தனிப்படையாக அந்த நிலையை அடைய முடியாது. ஒருவருடைய வாழ்க்கையில் மற்றொருவர் கலந்து, தேன்கூடுபோல் ஒரே ஐக்கியமாகிவிட வேண்டும். அந்தத் துணைவர் யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். கடவுளாக இருந்தாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு இடமில்லை. இந்த இணைப்பில்தான் வாழ்வின் தத்துவமே பூராவும் அடங்கிக் கிடக்கிறது.

பக்த மீராவின் சரிதம் எப்படி? கண்ணன் மீது கொண்ட தீராத காதல் அவளைத் தெய்வீகத்தன்மை வாய்ந்தவளாகச் செய்து விட்டது. உள்ளம் உருகி உருகி, அவள் இதயத்து ஏக்கமே பக்தியின் சாரமாகப் பரிணமித்தது. அந்த அதீதக் காதல் நம் நெஞ்சையும் கொள்ளை கொண்டு விடுகிறது. மகான் ராமகிருஷ்ண பரமஹம்ஸர் காளி உபாசகர். அன்னை காளி ஆயிரம் ஆயிரம் வடிவங்களில் அவருக்குக் காட்சி அளித்தாள். காளி மீது கொண்ட காதல், மகானை உலகிற்கு மணிவிளக்காகக் காட்டிற்று. துளசிதாஸ் சரிதமும் அவ்விதமே. வீட்டில் பட்ட கஷ்டம் அவர் நெஞ்சை ஈசன் திருவடிகளில் அர்ப்பணித்தது. அவ்வளவுதான்.

சற்று யோசித்துப் பாரப்பா. எந்தப் பெரிய பண்பட்ட உள்ளத்தை எடுத்துக்கொண்டாலும், அந்த உள்ளத்தை ஊக்குவித்த 'பொருள்' அற்புத சக்தி படைத்தது என்பதை உணரலாம். அப்படி உள்ளத்துக்கு உயிரளிப்பது

உண்மைக் காதலியாக இருந்து விட்டால் அதைப்பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை! தமது அனுபவத்தை பிரபல ஆசிரியர் முன்ஷி ஒருதரம் வர்ணித்தார். பால்யப் பருவத்திலே, இளமையின் எழிற் கனவுகள் தம் உள்ளத்திலே வட்டமிட்ட சின்னஞ்சிறு அந்த பிஞ்சுப் பிராயத்திலே, தம்மோடு கைகோத்து விளையாடிய ஒரு பூப்பாலகி அவரது உள்ளத்தைத் தொட்டு விட்டாள். அந்த இளமலரோடு தம் வாழ்வு இணைந்து வாழ்க்கைச் சோலை மிக மணமுள்ளதாக இருக்கும் என்று கற்பனைக் கோட்டைகள் கட்டினார். ஆனால் இவர் எண்ணத்தைக் காலத்தின் திரைகூட மறைக்க இயலவில்லை. இந்த மண்ணிலே இனி சந்திப்பு இல்லையென்றாலும் கண் காணாத அந்த விண்ணிலாவது ஒளி தூவும் இரு சுடராகத் திகழ்ந்து ஜாஜ்வல்யமாக வாழலாம் என்று நம்பினார். அந்த நம்பிக்கையும், ஊக்கமும் அவருடைய பிற்கால வாழ்க்கைக்கு அஸ்திவாரமாக அமைந்ததாம். அந்த சக்தியே பக்கபலமாக நின்று 'எடுத்த காரியம் யாவினும் வெற்றி' விளங்கச் செய்ததாம்.

கேட்க நம்ப முடியாமல்கூட இருக்கலாம். ஆனால், சிறு பிராயத்திலிருந்து என்னோடு இரண்டற ஒன்றிப் பழகிவிட்ட உனக்கு அதை மறுமுறையும் ஞாபகமூட்ட வேண்டுமா? என் இதயக் கோயிலில் வழிபடும் அரசி இந்த வாழ்வில் என்னைச் சேர்ந்தவள் அல்ல என்பதைத் தெரிந்ததும், அவளை நினைந்து ஏங்குவதைக் காட்டிலும், அவள் எண்ணத்தால் அந்த இன்பகரமான நினைவால், எத்தனையோ மகோன்னதமான காரியங்களைச் சாதிக்கலாம் என்ற பேருவகை ஏற்பட்டது. அவள் தந்த ஆக்கமே அவ்வளவும். நான் பல பெரியார்களுடன் பழகினேன். நாட்டின் வருங்காலத் தொழில்களுக்கு திட்டம் அமைத்தேன். இன்னும் சிந்தித்து வருகிறேன். என் கனவுகள் நனவாகுமா? என் லட்சியம் சித்தி பெறுமா? அதெல்லாம் வருங்கால 'தொழில் உலகம்' தான் தீர்மானிக்க வேண்டிய விஷயம். ஆனால், அவ்வளவுக்கும் காரணமாயிருந்த 'பொருள்' என்ன என்பதைப் பற்றித் தானே இங்கே பேச்சு:

தன்னந் தனியாக எப்பவாவது நான் வீற்றிருக்கும் போது, மீராவின் இன்ப கீதம் என் இதயத்தில் ஒலிக்கும். அதே சமயம் என் தேவியின் இனிய சிந்தனையும் வட்டமிடும். ஆனால், முக்கியமான விஷயத்தையும் கவனிக்க வேண்டும். இந்த அபூர்வ நினைவுகளை சரியான பாதையில் செலுத்திச் சென்றால் தான் உலகம் உருப்படும். நீராவியின் சக்தியைப் பயன் படுத்தி ரயிலை ஓடச் செய்கிறோம். நீர் வீழ்ச்சியை மின்சாரமாகப் பயன் படுத்திக் கொள்கிறோம். இதே போல் மனிதனது ஆசாபாசங்களையும் அற்புதமான வழிகளில் பயன் படுத்த வேண்டும்.

மேலே சொன்ன பண்புகள் இதயத்தில் நிறையப் பெற்றால், உண்மையில் அதைப் போன்ற 'செல்வம்' உலகில் வேறு ஒன்றுமே கிடையாது. சரி... என்ன, கடிதம் நீண்டு விட்டதா? அப்படியானால் இதையே இன்னொரு தரம் படித்துப் பாரு: மறு கடிதத்தில் எல்லாம் விவரமாக எழுதுகிறேன்!

உனது

டி. எஸ். எஸ்.



கலைக் கோயில்

சுவாமி சுத்தானந்த பாரதியார்...

அத்தியாயம் இருபத்துநான்கு

உலகக் கலை மகாநாடு

தமிழ்மணி கலைக் குழுவுடன் அமெரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்து புகழ் பெற்றான். உலகியல்பையும், காலக்கொடுமையையும் பார்த்த பிறகு தமிழ்மணி தனது கலைக் கோயிலை விரைவாக எழுப்பி அருட்பணி தொடங்கத் துடி துடித்தான். கச்சேரி வரும்படியெல்லாம் அதற்கென்றே சேர்த்து வைத்தான்.

சிகாகோவைச் சுற்றிப் பார்த்தபோதெல்லாம் அவனுக்கு சுவாமி விவேகானந்தர் உருவமே முன்னின்றது. அவரைப்போல உலகிற்கு இந்தியாவின் புனிதப் பெருமையையும், தமிழின் அருட் கலையையும் விளக்க ஒரு வாய்ப்புறுமா என்று வாடி நின்றான்.

வந்தது வாய்ப்பு. அமெரிக்கப் புலவர்கள் சிகாகோவில் உலகக் கலை மகாநாடு நடத்த ஏற்பாடு செய்தனர். அதற்குப் பல நாடுகளிலும் பல மொழிகளிலும் புகழ் பெற்ற கலைவாணரை வரவேற்றனர். வரவேற்புத் தலைவரான கவி லாங்மேன் சிறந்த ரசிகர்; சர்வ தேச நண்பர். அவரை ஒருநாள் ஜெங்கின்ஸ் தம்பதிகள் விருந்திற்கு அழைத்து மணியை அறிமுகப் படுத்தினர். தமிழ்மணி கலையைப் பற்றி அளவளாவினான். தமிழ் என்ற ஒரு தொன்மொழி உயிரோடிருக்கிறது. அதில் கவியுண்டு, கலையுண்டு என்பதை அறிந்து லாங்மேன் வியந்தார். மணியின் பாட்டைக் கேட்ட பிறகு மகிழ்ந்தார். ஜெங்கின்ஸ் கலை மகாநாட்டில் தமிழ்க் கலைக்கும் இடம் தரவேண்டுமென்று வேண்டினான். லாங்மேன் உத்தரவு பெற்றுச் சொல்லுவதாகச் சொன்னார்.

கலைக் குழுவில் பலமொழி யறிஞர் இருந்தனர். வெள்ளைக் காரர் பாஷைகளெல்லாம் அதில் பிரதிநிதித்வம் வைத்தன. ஆசிய பாஷைகளில், சீனம், ஜப்பானியம், ஹிந்தி, வங்காளம் ஆகிய நான்கிற்கே இடம் தந்தனர். வங்காள கலையை விளக்க தாகூரே வர ஒப்புக் கொண்டு விட்டார். இந்திக்கு நாராயணலால் வருகிறார். "தமிழா – அது பழைய திராவிடர் பாஷை தானே! நமது பிஜி, மலேயத் தோட்டங்களில் வேலை செய்யும் கூலிகளே தமிழர். இவர்களுக்கொரு கலையுண்டா? உண்டானாலும் நாகரிக உலகம் ஒப்புப்படி சிறந்ததா" என்றெல்லாம் விவாதம் செய்து முடிவில் தமிழ்க் கலைக்குப் பதினைந்து நிமிஷம் பிரசங்கம் – பதினைந்து நிமிஷம் பாட்டு என்று நிகழ்ச்சி வரிசையில் முடிவுரைக்கு முன்னே சேர்த்தனர். அதுவும் நேரமிருந்தாலே. தமிழுக்கு இடம் என்ற நிபந்தனையும் செய்தனர்.

மணிக்கும் அழைப்பு வந்தது. "எனது தாய்மொழியை உலகம் கடைசியில் ஒதுக்குவதா? அது – முதன்மை பெறச் செய்வேன்" என்று மணி சாதனத்தில் முனைந்தான். விவேகானந்தரே அவன் உள்ளத்தில் உணர்ச்சியைத் தூண்டினார். "எனது தாய் நாட்டிற்கும் தாய் மொழிக்கும் மற்றொரு வெற்றி வருக" என்று தியானித்தான் மணி.

கலை மகா நாடு ஜூலை மாதம்; இன்னும் மூன்று மாதங்கள் உள்ளன. தமிழ்மணி உலகமே உணர்ச்சி பெறும்படியான இனிய தமிழ்ப் பாட்டுகள் மூன்றைத் தயாரித்து – ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து அச்சிட்டு, தக்க ரஸ பாவனையுடனும், அபிநயத்துடனும் பாடப் பயின்றான். யாழும், குழலும், முழவும் பாட்டில் லயித்துதவச் செய்தான். கச்சேரி செய்யப் போகும் இடங்களிலெல்லாம் பொன்னம்பலத்தைப் பேசச் செய்தான். தானும் தமிழ்க் கலையைப் பற்றிப் பேசினான். பத்திரிகைகளிலும் எழுதினான். நியூயார்க் ஹெரால்ட், சிகாகோ ட்ரிபூன், வாஷிங்டன் ரிவ்யூ, டெய்லி நியூஸ் போன்ற பிரபல பத்திரிகைகளில் அவன் படமும், கட்டுரையும், செய்தியும் வந்தன. ஜனங்கள் கலை மகா நாட்டை எதிர்பார்த்திருந்தனர்.

அத்தியாயம் இருபத்தைந்து

கலைக் காட்சிகள்

சிகாகோ கலைச்சந்தை (Art Fair) உலகப் புகழ் பெற்றது. நவநாகரிகத்தின் அழகே அங்கே லாவண்ய நடம் புரிந்தது. அதை உலகக் கலை என்பதைவிடக் கலையுலகம் என்பதே பொருந்தும். ஜர்மன் யுத்தமும் முடிந்து வேர்ஸேல்ஸ் உடன்படிக்கையும் கையெழுத்தாகி உட்ரோ வில்ஸனின் சர்வ தேச சங்கமும் ஜினிவாவில் ஊன்றிக் கொண்ட நாள் இது; அமெரிக்காவிற்கு உலகப்புகழ் கிடைத்த நாள். ஆங்கிலம் பேசும் பிரடனும் அமெரிக்காவும் வெற்றிச் செருக்குடன் தலை நிமிர்ந்த நாள். ஐரோப்பியப் போர்க்களங்களிலிருந்து ஜயகீதம் முழங்க அமெரிக்க வீரர் கப்பல் கப்பலாக வந்திறங்கித் தத்தம் வீடுகளுக்குச் சென்றனர். இரத்த வெள்ள

மான போர் வாழ்விற்குப் பிறகு அவர்கள் உள்ளம் உல்லாச வாழ்வை விரும்பியது.

போரில் அமெரிக்கச் செல்வர் கோடி கோடியாகச் சம்பாதித்தனர். நாடெங்கும் செல்வச் செருக்கி தங்கச் சதங்கை குலுங்க உல்லாச நடம் புரிந்தாள். பணம் நயகரா நீர்வீழ்ச்சி போலப் புரண்டோடியது. அட்லாண்டிக் சமுத்திர அலைகள் போல் அமெரிக்க ஜன சமுத்திரமும் இன்ப உணர்ச்சியால் கொந்தளித்தது. ஆதலால் சிகாகோ கலை மகா நாடு கண் கொள்ளா அழகு விருந்தாயிருந்தது. ஹார்லி நெசவுப் பொறி கண்ட நாள் முதல் எடிசனும், மார்க்கோனியும் ஒளி-ஒலி-விநோதங்கள் செய்த நாள் வரையில் என்னென்ன விஞ்ஞானப் புதுமைகள் உண்டோ அத்தனையும் கலைச் சந்தையில் காட்சி யளித்தன. மின்சாரமும், எலெக்டரனும் என்னென்ன அற்புதங்களைச் செய்யுமோ அத்தனை அற்புதங்களும் அங்கே அணியணியாக விளங்கின. ஐரோப்பிய போர் முனையில் இருபுறமும் பாய்ந்து பொருதிய ஆயுதங்கள், டாங்குகள், வியாபார வகைகள், குண்டுகள், பீரங்கிகள், சுரங்க வெடிகள், கண்ணிகள், காந்த வெடிகள், நாசகாரிகள், நீர்மூழ்கிகள், விதவிதமான கொலைக் கருவிகள், தொலை நோக்கிகள், போர்க் கருவிகள் செய்ய உதவும் சாதனங்கள் - எல்லாம் பயங்கரமான காட்சியளித்தன. நாகரிகத்தை வளர்க்கும், மோட்டார், ரயில், கப்பல், விமானம், தந்தி, டெலிபோன், மின்சார ஒளி, ஒலி, சூடு, பரப்பும் சாமான்க ளெல்லாம் ஒரு வரிசையில் சிறு அளவில் செய்து வைக்கப் பெற்றிருந்தன. மற்றொரு வரிசையில் நவநாகரிக வாழ்விற்கு வேண்டிய அடுப்பு முதல் துடுப்பு வரையில், எழுதுகோல் முதல் குண்டூசி வரையில் ஒரு பக்கம் கண்ணாடி பீரோக்களில் காட்சி யளித்தன. மின்சார சக்தியால் பயனுள்ள பல கைத்தொழில்கள் செய்யும் முறையை மற்றொரு புறம் நிபுணர்கள் விளக்கிக் கொண்டிருந்தனர். பூத பௌதிக ரசாயன தாவர, கணித யந்திர தந்திர சாத்திரங்களை விளக்கும் கருவிகளும், புதுமைகளும் ஒருபுறம் காட்சி யளித்தன. மனித உடலின் பகுதிகள், நோய்களின் வகை, அவற்றை மாற்றும் மருந்துகள், சிகிச்சைகள் எல்லாம் ஒரு வைத்திய சாலையில் காட்சி யளித்தன. தேகப்பயிற்சி முறைகள், இராணுவப் பயிற்சி முறைகளெல்லாம் ஸெலுலாய்ட் பொம்மைகளைக் கொண்டும் ஒரு பகுதியில் விளக்கப்பட்டன. மற்றொரு பகுதியில் செவ்விந்தியர் காலம் முதல் வில்ஸன் காலம் வரையில் அமெரிக்கா காடு திருத்தி நாடான கதையும், காட்சியும் விளங்கின.

இன்னொரு பகுதியில் ஆங்கில உலகின் அறிஞரும் வீரரும், புலவரும், கலைஞரும் நேரிருந்து பேசுவது போன்று உருக்களில் விளங்கினர். இன்னொரு பகுதியில் உலக வரலாறு தற்காலத்திலிருந்து இருபதாம் நூற்றாண்டு வரையில் படிப்படியாக உயர்ந்த கதை பளிச்சிட்டது.

அங்கே ஆங்கிலேயர் உலக நாகரிகத்தை ஆளுவதாகக் குறித்திருந்தது. அமெரிக்காவே உலகின் தொழிற்சாலை என்று கண்டவர் நம்பும் படியான காட்சிகள் துலங்கின. பிரெஞ்சுக்காரர், டச்சுக்காரர், ஜெர்மானியர், இதாலியர், நார்வேயர், ரஷ்யர், இருக்கர், பாரசீகர், யூதர், அராபி

யர், சீனர், ஜப்பானியர், அனைவருக்கும் படிப்படியாக இடம் அளிக்கப் பட்டிருந்தது; ஆப்பரிக்க நீக்ரோக்கள் கடைசிப் படியில் வெள்ளைக்கார பொம்மைக்குச் சலாம் போடுவதாக உருச் செய்து வைக்கப்பட்டிருந்தது. கடைசியாக ஒரு மூலையில் கண்ட காட்சிதான் பரிதாபம்! அக்காட்சி முன் மணி திகைத்து நின்றான். என்ன அநியாயக் காட்சி!

ஆப்பரிக்க ஹாடண்டாட்டுகளுக்கடுத்தபடி கோவணங் கட்டிய சில பஞ்சைப் பரதேசிகளின் உருக்கள் இருந்தன. அவ்வுருக்களின் உடலில் சாம்பல் அடித்திருந்தது. கீழே இந்தியர் என்றெழுதியிருந்தது. அடுத்த படியாக நீலகிரி தோட்டக் கூலிகளின் உருக்கள் – கீழே இந்திய திராவிடர்கள் என்ற பெயர். இந்த உருக்களின் எதிரே ஒரு ஐரோப்பிய பாதிரி சிலுவை பிடித்து நின்றான்; மற்றொரு வெள்ளைக்காரன் ஒரு அநாகரிக இந்தியனுக்கு வேட்டியும் பைபிளும் அளிக்கிறான். கீழே இந்தியரை நாகரிகப் படுத்தும் வெண் சிலுவை என்றெழுதியிருந்தது. இந்திய சரித்திரப் பகுதிக்கெதிரே அந்தந்த நாட்டு வரலாறுகள் அடுக்கடுக்காக வைக்கப் பெற்றிருந்தன. அவையெல்லாம் சுதேசிகள் எழுதியவை. இந்திய சரித்திரம் என்று வெள்ளைக்காரர் எழுதிய ஐந்தாறு நூல்களே இருந்தன. அவற்றில் தமிழர் பெயரே யில்லை; தமிழர் என்றால் யாரென்று கூட உலகிற்குத் தெரியாத நிலையைக் கண்டு மணி கண்ணீர் விட்டான். தமிழர் மட்டுமா, இந்திய சமுதாயமே அங்கே அநாகரிகப் பகுதியில் காட்சி யளித்தது. இந்தியா நாகரிகம்பெற வெள்ளைப் பாதிரிகளே சிலுவைத் தொண்டு செய்வதாக ஒரு பெரிய புத்தகம் இருந்தது. இந்தியாவில் பாதிரிமார் தியாகம் என்பது அதன் பெயர். அதில் இந்தியரை மிகக் கேவலமாகப் படம் பிடித்து அநாகரிகமாக வர்ணிக்கப் பெற்றிருந்தது. சந்தைக் கடைக்கு வரும் பட்டிக்காட்டு ஜனங்கள், திருவிழாக்களில் செடில் குத்தி, வேப்பிலை கட்டியாடும் ஜனங்கள், காவடிகள், பயிராகிகள், பிச்சைப் பட்டாளங்கள், தொம்மக் கூத்தாடிகள், பறை கொட்டிக் குதிப்பவர், பெருமாள் மாடு, குரங்கு, பாம்புகளைக் கொண்டு பிழைப்பவர், கரக மாடுவோர் முதலியோர் படங்கள் இருந்தன.

இந்தியர் பழக்க வழக்கங்கள் என்ற பகுதியில் உடன்கட்டை விதவைக் கோலம், குழந்தை மணம், முதலியவை படமாயிருந்தன. இப்படிப்பட்ட அநாகரிக ஜாதியையே பாதிரிமார் மெல்ல மெல்லத் திருத்துகிறார்கள். கிருஸ்துவின் ஒளியே இந்த அநாகரிக இருட் காட்டை ஊடுருவி வருகிறது – என்ற வர்ணனைகள் படித்தவர்கள் பல்லைக் கடிக்கும்படி யிருந்தன. பாதிரிமார் நடத்தும் பள்ளிகள், கல்லூரிகள், ஆஸ்பத்திரிகள், சர்ச்சுகள், அனாதை விடுதிகள், தொழிற்சாலைகள், கன்னி மடங்கள் எல்லாம் அழகான வர்ணப் படங்களில் இலங்கின. மதம் மாறிய இந்தியரின் சந்தோஷக் காட்சிகளுக்குப் பக்கம் பக்கமாக வியாக்யானங்கள் பொலிந்தன.

இதற்கு மேல் வர்ணனை தேவையில்லை; தமிழ்மணி அதற்குமேல் கலைக் காட்சி பார்க்கவில்லை; தன் இடத்திற்கு திரும்பிவந்து லாங்மானுடன் சிறிது நேரம் பேசிவிட்டு, ஜெங்கின்ஸ், பொன்னம்

பலம் இருவரையும் தனியாக அழைத்து நீண்ட நேரம் ஆலோசனை செய்தான்.

மணி : மிஸ்டர் ஜெங்கின்ஸ் இந்தியர்களை இவர்கள் ஏன் இப்படி அவமானம் செய்கிறார்கள். தமிழர் என்ற பெயரும் இவர்களுக்குத் தெரியவில்லையே. நாளை ஆவேசமாகப் பேச வேண்டும்.

ஜெங்கின்ஸ் : ஆம். வாயுள்ள பிள்ளையே பிழைக்கும். உங்கள் கலையும், நாகரிகமும் தெய்வத் தன்மை பெற்றது. ஆனால் குடத்துள் விளக்குப் போல் அது குறுகிய வட்டத்தில் சுழன்று [கொண்டிருக்கிறது. தமிழ் என்ற பாஷை இருப்பதாகவே எங்களுக்கு உன்னாலே தான் தெரியும். உன்னைப் போல் நூறுபேர் உலகிற்குப் பேசினால் பிறகு நிலமை மாறும். நாளை நீ ஆவேசமான ஆங்கிலத்தில் பேசு. பதினைந்து நிமிஷமே தருவார்கள். அதற்குள் திட்பநுட்பமாக விஷயங்களைச் சொல்லு – வெற்றி கிடைக்கும். மறுநாள் நீ தமிழில் பேசு. நாங்கள் மொழி பெயர்க்கிறோம்.

"பேசுகிறேன்; வென்றுலகை வெல்வேன்." இதுதான் மணியின் முடிவுரை.

பிறகு தமிழ்மணி தனியறையில் தியானித்துக் கொண்டே நாளைப் பிரசங்கத்தைத் தயாரித்தான் – எழுதவில்லை; மனதில் முறைப் படுத்தி வைத்துக் கொண்டான்.

மறுநாள் பதினொரு மணிக்கு உலகக் கலை மகா நாடு கூடியது. அதன் காட்சியே அற்புதம். புது உலக நாகரிகத்தில் என்னென்ன அழகுகள் உண்டோ, நடை யுடை பாவனைகளில் எத்தனை விசித்திரங்கள் உண்டோ அத்தனையும் அங்கே காட்சியளித்தன. தேச தேசக் கலைகளைப் பற்றிப் பேசத் தக்க புலவர் கூட்டங்கள் வரிசை வரிசையாக விளங்கின. ஒவ்வொரு தேசத்திற்கும், ஒவ்வொரு சமயத்திற்கும் பிரதிநிதிகள் இருந்தனர். அவரவர் சட்டைகளில் விதவிதமான பூக்கள் விளங்கின. சபை வானவிற் குழாங்கள் போலப் பல நிற ஆடையாபரணங்களால் விளங்கியது. இந்தக் கண் கொள்ளாக் காட்சியில் இந்திய நாகரிகத்தைப் பற்றிப் பேச ரவீந்திரநாத் தாகூர் வந்திருந்ததே பெரிய ஆறுதல். அவருக்குப் பின்னே தான் நமது தமிழ்மணி ஜெங்கின்ஸூடன் அமர்ந்தான். அச்சபையைக் கண்டதும் குருநாதன் அருளால் மணியின் உள்ளத்தில் ஒரு வீரக் கிளர்ச்சி யெழுந்தது; அவன் முன் விவேகானந்தரின் கனல் வடிவம் நின்றது. அவனுள் ஒரு சாந்த வுறுதியும், அறிவுச் சுடரும் எழுந்தன.

டிங்டாங் டிங்டாங் என்று மணியடித்தது; ஒரு பாதிரி தொழுகை நடத்தினார்; சுவிசேஷ கீதம் கம்பீரமாக ஒலித்தது; ஆயிரக் கணக்கான குரல்கள் பியானோவுடன் சேர்ந்து பாடிய போது மணிக்கு பரவசம் பொங்கியது; இப்படி நமது தமிழ்ப் பாடல்கள் ஒருநாள் ஒலிக்காதா என்றே அவன் நினைத்தான். பிரார்த்தனையானதும் லாங்மேன் அக்கிராசனரைப் பீடத்தில் அமர்த்திவிட்டு வரவேற்புரையைப் படித்து முடித்ததும் வரிசையாக மதாசாரக் கலைகள் பிறகு தேசீயக் கலைகள் ஒலித்தன. கிருஸ்தவக் கலை, ஆங்கிலக் கலை – இரண்டும் இரண்டுமணி நேரத்தை விழுங்கி விட்டன. பிறகு பிரெஞ்சு,

ஜர்மன், இதாலியன், ரஷ்யன், போலிஷ், ஸ்வீடிஷ்-டச்சு கலை விளக்கங்கள் நடந்தன. அதன்பிறகு பௌத்தம், இஸ்லாம் முதலிய சமயக்கலை விளக்கம்: இறுதியில் மாலை ஆறு மணிக்கு இந்தியக் கலைக்கு இடம் கிடைத்தது.

ரவீந்திரநாத தாகூர் கம்பீரமாக எழுந்து பேசினர்.

நண்பர்காள்

இந்தியக் கலையின் உயிர், ஆத்மஞானம்; அதற்கு சாதிமத பேதமில்லை; இந்தியா சர்வ சமயக் கோயில்; எங்கும் இறைவன், எல்லாம் இறைவன், எல்லா உயிர்களும் இறைவன் மயம் என்ற அகண்ட ஞானத்தின்மேல் சிந்திய நாகரிகம் எழுந்து விளங்குகிறது. இந்தியக் கலையின் உள்ளம் பரிசுத்தமான அன்பு. இந்தியா இந்தியர் கலை படாடோபமான நகரங்களிலிருந்து உதித்ததன்று. அஃது இயற்கையான பசுவனங்களில் தவம் செய்த யோகிகளின் உள்ளத்திலிருந்து உதித்தது. வேதரிஷிகள், வால்மீகி, வியாசர், காளிதாஸன் ஆகியோரே இந்தக் கலையின் பிரதிநிதிகள். இவர்கள் வாக்கு ஆத்மானந்தத்திலிருந்தெழுந்தது. மனித சமுதாயம் இருளினின்று ஒளிபெற்று, அசத்தியத்தினின்று சத்தியமாகி, சாவினின்றும் அமரவாழ்விற்கு முன்னேறும் வகையையே எங்கள் உபநிஷத்து கோஷிக்கிறது.''

இவ்வாறு பேசிவிட்டு வங்காளக் கலையை விமர்சனம் செய்து, சாந்திநிகேதனில் இந்தியக் கலை வளருவதாகக் குறித்துவிட்டு முடிவில் கீதாஞ்சலிப் பாட்டுடன் பிரசங்கத்தை முடித்தார்.

பிறகு நாராயணலால் எழுந்து ஹிந்திக் கலையை விமர்சனம் செய்தார். துளசிதாஸ், கபீர், நானகர், மீரா, ரவிதாஸ் முதலியோர் கீதங்களை மொழி பெயர்த்துச் சொன்னர். இந்தியே இந்தியாவின் தாய்மொழி, என்று விளக்கிவிட்டு அவர் அமர்ந்தார்.

இதுகாறும் பிரசங்கம் கேட்டு அலுத்தவர்கள் எழுந்து செல்லத் தலைப்பட்டனர். இந்தியக்கலை என்றபோதே சிலர் வெளியே சென்று காற்று வாங்கத் தொடங்கினர். சிலர் தாகசாந்தி செய்து கொள்ளச்சென்றனர். இப்போது சபை கலைந்துவிடும் போலிருந்தது. ஜெங்கின்ஸ் அக்கிராசனர் காதில் ஏதோ ஓதினர்.

அக்கிராசனர் கம்பீரமாக எழுந்து கடைசி விருந்து இனிமையாயிருக்கும். உலகில் தமிழ் என்ற ஓர் இனிய பாஷையுண்டு என்பதை உங்களுக்குச் சந்தோஷமாக அறிமுகப் படுத்துகிறேன். தமிழ்க் கலையின், பிரதிநிதி—மணி—இதோ ஐந்து நிமிஷம் பாடிவிட்டு, பத்து நிமிஷம் பேசுவார் என்ருர்.

தமிழ்மணியின் நெஞ்சில் ஆவேசக்கலை எழுந்தது. உடனே ஆங்கில மொழி பெயர்ப்புடன் ஒரு தமிழ்க் கீதம் முழக்கினன்.

(தொடரும்)

★

கொங்கு நாடு

(வித்வான் அ. கிருஷ்ணமூர்த்தி)

சேர சோழ பாண்டியர்கள் என்ற மூன்று அரச குடும்பத்தார் பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டை ஆண்டு வந்தனர் என்பதை அறியாதவர் மிகவும் குறைவு. இவர்கள் ஆண்ட தேசங்கள் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்று அழைக்கப்பட்டன. இந்த மூன்று நாடுகளைத் தவிர, வேறு இரண்டு முக்கியமான நாடுகளும் இருந்தன. அவை தொண்டை நாடு, கொங்கு நாடு என்பன.

தொண்டை நாடு என்பது தற்காலத்துச்சென்னை, செங்கற்பட்டு ஜில்லாக்களும் அதற்கு வடக்கில் திருப்பதி வரையுள்ள தேசமும். சேலம், கோயமுத்தூர் ஜில்லாக்கள் கொங்கு நாடு என்று அழைக்கப்பட்டன. இந்த இரண்டு நாடுகளும் மிகவும் பழைய சரித்திரமும், நாகரிகச் சிறப்பும் உடையவை. இருந்தாலும், சேர சோழ பாண்டிய நாடுகளைப் போல அவ்வளவு பழைமையானவை யல்ல. அல்லாமலும், அடிக்கடிச் சேர சோழ பாண்டியர் கையில் இந்த நாடுகள் சிக்கிக் கிடந்தன. சோழர்கள் கையில் தொண்டை நாடும், சேரர், பாண்டியர் கையில் கொங்கு நாடும் அடிக்கடி அகப்படுவது வழக்கமாக இருந்தது. தொண்டை நாடும், கொங்கு நாடும் மற்ற நாடுகளைப் போலப் பெருமையும் தகுதியும் உடையனவாயினும், அவைகளைப் போல முன்னணியில் நிற்க முடியாமல் போயின. இதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அதாவது இவை மற்ற நாடுகளைப் போல் அவ்வளவு நீர் வளமும், செழிப்பும் உடையனவாக இல்லாதது.

இந்தக் கடைசிக் காரணம் மிகவும் முக்கியமானது. ஏன்? நீர் வளமும், பயிர் பச்சையும், பெருகக் கூடிய இடமாக இருந்தால், மக்கள் அங்கு ஏராளமாகக் கூடுவார்கள். நாகரிகமும், செல்வமும் மிக விரைவில் பெருகும். தற்காலத்து எந்திர சாதனங்கள் இல்லாத பழைய நாளில் உணவுப் பொருள், வாழ்க்கை வசதிகள் அதிகமில்லாத இந்த வறண்ட தேசங்களில் மக்கள் பெருவாரியாகக் குடியேறவில்லை. அங்கு இருந்த மக்கள் நல்ல நாகரிகமும், ஆட்சித் திறமையும், போர் வலிமையும் உடையவராக இருந்தாலும், அவர்கள் முன்னேற்றம் மிகவும் மெதுவானதாகவே இருந்தது.

கொங்கு தேசத்தை ஆண்ட பழைய அரச குடும்பங்களுள் மழவர், கோசர், வேளிர் என்ற மூன்று குடும்பங்கள் முக்கியமானவை. ஒவ்வொரு குடும்பத்தைப் பற்றியும் சங்க நூல்களில் பல குறிப்புகள் காணப்படுகின்றன. முக்கியமான சில குறிப்பை மட்டும் படிப்போம்.

மழவர்கள் மிகவும் போர் வலிமையும், வீரமும் படைத்தவர்கள். சேர அரசர்களுக்குப் பலபேர் மெய்க் காப்பாளராக இருந்திருக்கின்றனர். ஔவையாரைப் பற்றிக் கேள்விப் படாதவர்

இருக்க மாட்டார்கள். அவர் நீண்ட நாள் இந்த உலகத்தில் வாழ்வதற்கு ஒரு நெல்லிக் கனியைக் கொடுத்தான் ஒரு அரசன். அவன் அந்தக் கனியைத் தான் அருந்தியிருந்தால், எவ்வளவோ காலம் உயிரோடிருக்கலாம். அது தெரிந்தும் தான் உண்ணவில்லை, கல்வியிலும், புலமையிலும் அவன் வைத்த அளவில்லாத ஆர்வத்தால், அந்தக் கனியை ஔவையாருக்குக் கொடுத்தான். அவன் ஒரு மழவர் மன்னன். ஏழு வள்ளல்களில் ஒருவன். பெயர் அதிகமான்.

பல்லவர்கள் காலத்தில் மழவர் தமிழ் நாட்டின் மற்ற இடங்களிலும் குடியேறினார்கள். அவர்கள் பல படைக்குத் தலைவர்களாகவும், குறுநில மன்னர்களாகவும் இருந்தனர். இப்பொழுதும் தஞ்சை முதலான இடங்களில் மழவராயர் என்ற ஒரு சாதியார் இருக்கின்றனர்.

அடுத்தபடி முக்கியமானவர்கள் கோசர்கள். இவர்கள் மிகவும் உண்மை பேசும் பழக்க முடையவர்கள் என்பதற்குத் தமிழ் நூல்களில் எவ்வளவோ சாட்சிகள் உண்டு. தமிழ் அரசர்கள் இவர்களுடைய ஆண்மை, உண்மை—இரண்டிலும் மிக்க மதிப்பு வைத்திருந்தனர். அசோகன் இவர்களைச் சத்திய புத்திரர்கள் என்று தனது கல் வெட்டில் குறிப்பிட்டான். இவர்களில் 'இளங் கோசர்' என்று ஒரு கிளை உண்டு போலும். கண்ணகிக்குக் கோயில் கட்டிச் செங்குட்டவன் திருவிழா நடத்திய போது, அதே விழாவைத் தங்கள் நாட்டிலும் இந்தக் கொங்கிளங் கோசர்கள் நடத்தினர் என்று சிலப்பதிகாரம் சொல்லுகிறது.

கோசர்கள் வாழ்ந்த புத்தூர் (கோசர், புத்தூர்) கோயமுத்தூர் ஆக ஆயிற்று என்று சொல்லலாம்.

அடுத்தபடி "வேளிர்" குடும்பத்தார் முக்கியமானவர்கள். இவர்களில் "கொங்கு வேளிர்" என்பது ஒரு அரசருடைய பெயர். "பெருங்கதை" என்று பெரிய தமிழ் இலக்கியத்தை இவ்வரசர் எழுதியிருக்கிறார். பெருங்கதை என்ற பேருக்குத் தகுந்தபடிப் புத்தகமும் கதையும் மாபெரும் அளவில்தான் எழுதப்பட்டிருக்கின்றன. அந்த இலக்கியத்தில் வராத தமிழ் வார்த்தைகள் இருக்க முடியாது என்று சொல்லக்கூடிய அளவுக்கு, அவர் அதில் எல்லா வார்த்தைகளையும் கையாண்டு விட்டார். இவர் நிரப்பிய படிப்பும், புலமையும் உள்ள அரசர். அரசர்கள் படிப்ப தென்பதும், பெரும் புலவராக விளங்குவதென்பதும் அருமை. தமிழ் நாட்டில் அரசர்கள் புலவராக விளங்கியதற்கு வரிசை வரிசையாக உதாரணங்கள் கொடுக்கலாம். அதிலும் பெரும் புலவராக விளங்கிய சிறப்பு கொங்கு வேளிர்களுக்கே உரியது. இவர் எழுதிய பெருங்கதை இன்றைக்கும் பெருங்கதையாகவே விளங்குகிறது.

சேர சோழ பாண்டியர் பண்டைக் காலத்தில் உச்ச நிலையில் இருந்த போது, கொங்கர்களோடு அடிக்கடிப் போர்கள் செய்திருக்கின்றனர். கொங்கு தேசம் முன் சொன்னபடி பல சிறந்த அரச குடும்பங்களால் ஆளப்பட்டிருந்தாலும் அடிக்கடி இந்த மூவேந்தர்களின் ஆதிக்கத்துக்கு அடங்கி நடக்க வேண்டியதாயிற்று. பெரும் பான்மையும் சேரர்களிடம் அதிகக் காலம் கட்டுப்பட்டிருந்தது; அடுத்தபடிப் பாண்டியர்களிடம், சோழர்களும் கொஞ்ச

காலம் – ஆனல் பிற்காலத்தில் – கொங்கு நாட்டை அடக்கி யாண்டனர்.

கொங்கு தேசத்துக்கு மேற்கே சேர நாடு; கிழக்கே சோழ நாடு; தெற்கே பாண்டிய நாடு; மற்றத் திசையில் மலைகள் முதலான தடங்கல்கள். இம்மாதிரி நான்கு பக்கமும் தொந்தரவுகளால் சூழப்பட்டிருந்தது. இது மற்ற அரசர்கள் எளிதாக உள்ளே வந்து சண்டையிடுவதற்கு எளிதாயிற்று. அன்றியும், உள்நாடும் வளமில்லையல்லவா? இது மக்கள் முன்னேற்றத்துக்கு இன்னொரு தடை.

இந்தப் போர்கள் நெடுகப் பல நூற்றாண்டுகள் வரையில் – அதாவது – தமிழ் அரசர் ஆட்சி முடிகிறவரையில் அடிக்கடித் தொடர்ந்து நடந்திருக்கின்றன. சில போர்களில் கொங்கர் வெற்றி பெற்றிருக்கின்றனர். பல அரசர்களுக்கு அடிக்கடி படை உதவி செய்திருக்கின்றனர். இவ்விதம் தமிழ்நாட்டுப் பல போர்களில் கொங்கர்கள் ஈடுபட்டனர். இவையெல்லாம் பழைய சரித்திரம்.

இப்பொழுது கொங்குநாடு எப்படியிருக்கிறது? அதன் பல பகுதிகள் இன்று தொழிலில் மேம்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் உழவுத் தொழிலில் தஞ்சையும், கைத் தொழிலில் கோவையும் மேலோங்கி யிருக்கின்றன. "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

உழவுத் தொழில் செய்ய வசதிகள் வாய்க்காத இடங்களில் கைத் தொழில் பெருகுவது இயற்கை. விஞ்ஞானத்தின் வளர்ச்சியினல் உலகத்தில் எவ்வளவோ நகரங்கள் சாதாரண நிலையிலிருந்து மாறிப் பெரிய கைத்தொழில் நகரங்களாக ஆகியிருக்கின்றன, தமிழ் நாட்டில், அத்தகைய பெரிய நகரம் கோவை. கோவை போன்ற நகரப் பகுதிகள் பல வசதிகளோடு இருந்தாலும், கொங்கு நாட்டின் மற்ற இடங்கள் அந்தப் பழைய நிலையிலேயேதான் இருக்கின்றன.

மக்களில் பெரும்பாலோர் ஏழையானதால் பெரிய தொழில்களை எடுத்து நடத்த முடிவதில்லை. அன்றியும் நீர் வளமும் செழிப்பும் இல்லாததால், மக்கள் நெருக்கம் கிடையாது. அதிகத் தண்ணீரும், மக்கள் நெருக்கமும் இல்லாததால் தமிழ்நாட்டின் மற்றப் பகுதிகளை விட நோய்கள் குறைவு; சூடும், குளிர்ச்சியும் மிதமாக இருப்பதால் உடல் நலம் அதிகம். ஆனல் ஒரு சொட்டுத் தண்ணீர் வேண்டுமானல் வானத்தைப் பார்க்க வேண்டும்; அல்லது பாறையைத் தோண்ட வேண்டும். சேலத்தில் ஓர் ஊர் உண்டு; அங்குத் தண்ணீர் வசதியே கிடையாது; அதற்குப் பெயர் ஜலகண்டபுரம்!

பல இடங்களில் பாறையைக் குடைந்து, வெடி வைத்துப் பிளந்து, தோண்டி எடுத்த கிணறுகளைப் பார்க்கலாம். கிணறுகள் என்றால், பத்துப் பதினைந்தடி தூரத்தில் தண்ணீர் இருக்கும் என்று நம்புவது வெறும் பைத்தியக்காரத்தனம். கிணறுகள் ஆழமாகவும், ஒரே அகலமாகவும் வெட்டியிருப்பதைப் பார்த்தால் அருகிற் போய்க் குனிந்து பார்க்கவே பயமாக இருக்கும். பார்த்தாலும்கூடச் சில இடங்களில் சருகும் குப்பையுமிருக்கும்; தண்ணீர் இருக்காது!

சில கிணறுகளில் தண்ணீர் இருக்கும்; ஆனல் கண்ணுக்குத்

தெரியாது; கண்ணைத் துடைத்துக் கொண்டு, உற்றுப் பார்த்தால் அடியில் இருட்டுக்கும் தண்ணீருக்கும் வேறுபாடு தெரியாமல் இருக்கும். அதாவது ஒரு இருநூறு அடிக்கு அடியில்!

தண்ணீர் இழுக்கும்போது வீடுகளில் சில காட்சிகளைக்காணலாம். வேலைக்காரன் சில நேரம் வரவில்லை; அல்லது வேலைக்காரன் இல்லாத ஒரு வீடு என்று வைத்துக் கொள்வோம். தண்ணீரை எடுத்ததும், உருளையில் உள்ள கயிற்றைப் பிடித்து ஒரு இழு இழுப்பார் தந்தை; உடனே அதைத் தொடர்ந்து ஒரு இழு இழுப்பாள் தாய்; விடாமல் இன்னொரு இழு இழுப்பான் பிள்ளை. இப்படி, அப்பா, அம்மா, பிள்ளை—மூன்று பேரும் மிக ஒற்றுமையாக ஒரு சிறிய வேலையில் இடுபடும் காட்சி புதிதாகப் பார்க்கும் ஒருவரை சிறிது நின்று நினைக்கச் செய்யும்.

கயிற்றை விட விட விட, அது கீழே போய்க் கொண்டேயிருக்கும்! கொஞ்சம் போனதும் குடத்தின் கனத்தை விடக் கயிறின் கனம் அதிகமாகும். குடம் உள்ளே போய்த் தண்ணீர் மொண்டதா? இல்லையா?— தெரியாது! சத்தமும் கேட்காது; பார்க்கவும் முடியாது; பழக்கத்தினால் உத்தேசமாக இழுக்க வேண்டியதுதான். பாதிக் கிணறு இழுத்துத் தண்ணீரும் பாதியாக இருந்தால், மறுபடியும் இந்த வேலைதான்!

இழுக்க இழுக்க இழுக்கக் கயிறுதான் வளர்ந்து கொண்டேயிருக்கும்! சில பெண்கள் தண்ணீர் இழுப்பதைப் பார்த்தால் ஆண் பிள்ளைகள் தம்மைச் சிறிது நிதானித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

"பாறையை பிளந்து—பிளந்தால் தண்ணீரோ இல்லை!— இருந்தால் ஊறுவது கொஞ்சம்—கொஞ்சத்தை இழுக்கும் குடமோ கயிறில் கட்டிய ஒரு பம்பரம்—தண்ணீரை இழுக்கப்போய் கயிறையே இழுப்பது—இப்படி இழுத்துப் பசுக்களை வளர்க்கும் கொங்கர்கள்" என்று குறிப்பிட்டார் ஒரு புலவர், பழைய பாட்டு ஒன்றில்.

சரி, பாட்டு பழையது; ஆனால், சேதி பழையதல்ல. இந்த இனத்தில் அன்றும் இன்றும் ஒன்றேதான்!

எனினும், தமிழ் நாட்டின் செல்வஞ் செழித்த பகுதியாகக் கொங்குநாடு வெகு சீக்கிரம் முன்னேறும் என்பது திண்ணம்! அதற்கான அறிகுறிகள் ஆயிரம்.

★

விடுதலை

கே.ஸி.எஸ். அருணாசலம்

[உலகச் சக்ராதிபத்யப் பேராசையாலே, கிரேக்க நாட்டிலிருந்து படையெடுத்து வந்த மஹா வீரனாகிய அலெக்சாந்தர் இந்தியா வரை வந்து ஜீலம் நதிப்போரை முடித்து, படை வீரர்களின் விருப்பப்படி தன் தாய் நாடு திரும்பிச் செல்லும் வழியிலே ஒரு நாள்; காலை நேரம். தன் முன்னிலையில் இளமையும், ஆண்மையும், வலிமையுமுடைய ஒருவன் விலங்கு பூண்டு நிற்க அலக்சாந்தர் நின்றிருக்கின்றான்]

அலக்சாந்தர்: ஓ! நீதானா அந்தத் தரிசிய நாட்டுக் கொள்ளைக்காரன்.?

கைதி: (கூர்ந்து நோக்கி) ஆம், நான்தான் அந்த 'வீரன்'

அலக்: என்ன? வீரனா? யார் வீரன்? கள்வன்-நீதியிழந்தவன்; இரக்கமற்ற கொலைகாரன்; நீயா வீரன்?

(கள்வன் ஏளனமாகச் சிரிக்கிறான்)

அலக்: (வெகுண்டு) பரிதாபமான கைதியே! கவனம். நீ நிற்பது மஹா, அலக்சாந்தரின் முன்னிலையில். ஏன் சிரிக்கின்றாய்?

கைதி: மஹா அலக்சாந்தர் தர்மம் பேசுவதால்.

அலக்: இன்று மட்டுமல்ல. என்றும் தான்.

கைதி: கிரேக்க மஹா வீர! நான் தங்களது கைதி. உள்ளம் திறந்து எதையும் பேச உரிமையில்லாதவனாக இந்நிலையிலே இருக்கிறேன்.

அலக்: கைதியின் வேண்டுதலின் இடையிலே என் கூரிய கத்தி ஒன்றும் செய்யாது. கேள். எதுவாயினும் கேள்.

(அலக்சாந்தர் நகைக்கிறான்)

கைதி: (தன் மார்பை விலங்கு பூண்ட கரங்களினால் சுட்டி) அரசே! இந்தக் கைதியின் உள்ளம் விரும்புவது உயிர்ப்பிச்சை அல்ல: தர்சிய நாட்டு வீரர்கள் என்றும் உயிர்ப் பிச்சை கேட்டதே இல்லை.

அலக்: மற்றெதுவோ?

கைதி: நியாயம்.

அலக்: வழங்கப்படும்-

கைதி: ஆனால் மஹா அலக்சாந்திரிடம் ஒருக்காலும் அதை எதிர்பார்க்க முடியாது.

அலக்: (சீறி) ஆச்சரியம்! என்ன சொல்லுகிறாய்?

கைதி: செந்தீயின் இடையிலே தண்மை கிடையாது.

கைதி: கிரேக்கப் பேரரசரே தாங்கள் என் உடலைத்தான் சிறை கொண்டீர். என் உள்ளத்தை அல்ல. தங்களால் எனக்கு நீதி வழங்க முடியாது.

அலக்: கிரேக்க மன்னன் சாம்ராஜ்ய சக்ரவர்த்தி மஹா அலக்சாந்தராகிய என்னையன்றி உனக்கு நியாயம் வழங்க வேறு யார் இங்கே?

கைதி: மஹா அலக்சாந்தர் அதற்கு அருகதை உடையவர் அல்ல.

அலக்: (ஏளனமாக நகைத்து) ஓ! இரங்கத்தக்க கைதியே! நீ விரும்புவது தான் என்ன?

கைதி: வேறு ஒரு சிம்மாதனம்; செங்கோல்!

அலக்: எதற்காக?

கைதி: என்னோடு மஹா அலக்சாந்தரையும் விசாரிக்க.

அலக்: ஐயோ! பாவம்! என் மேல் அந்தச் சிம்மாதனத்தின் முன்னே என்ன குற்றம் சாட்டப் போகின்றாய்?

கைதி: உலகக் கொள்ளை! உலகக் கொலை!

அலக்: அறிவில்லாதவனே! உனது ஆணவத்திற்கும், அநீதிக்கும் அந்திய காலம் வெகு தூரத்தில் இல்லை!

அலக்: மூடனே! அவை கொள்ளையும் கொலையும் அல்ல. லட்சக் கணக்கான என் நாட்டு வீரர்களைக் களப்பலி தந்து உலகம் போற்றும் ஒப்பற்ற போரை நடத்தினேன். அதிலிருந்து இந்த உலக சக்ராதிபத்தியம் என்னும் மணம் மிகு மலர் எனக்காக மலர்ந்தது. நான் பெற்ற அணியும் பணியும், அகிலும் துகிலும் அளவற்ற மாணிக்கக் குவியலும் எல்லாம் எனது பேராண்மை தந்த பெருஞ் செல்வம். "மஹா அலக்சாந்தர்" என்று நடுங்கிய குரலிலே ஒலித்து, அஞ்சி இரத்தத்திலே நனைந்தது இந்த உலகம்.

கைதி: அரசே! நானும் அவ்வாறுதான். நூற்றுக்கணக்கான என் தோழர்களோடு, இங்கு சுற்றும் சூழ்ந்த நாட்டினரை எல்லாம் நடுங்க வைத்தேன். எண்ணற்ற வீரர்கள் என் கூரிய கைவாளின் முன்னே தங்களது மனமார்ந்த வணக்கத்தை செலுத்தி உள்ளார்கள். அதனால்தான் மஹா அலக்சாந்தரும் என்னைப் பற்றிச் சிந்திக்க வேண்டியதாயிற்று.

அலக்: வெறும் கொள்ளையும் கொலையும் நடத்திய கள்ளனைய் சமூகத்திற்கு ஒரு சாபக்கேடாய்த் திரிந்தாய்!

கைதி: ஆம். பேரரசே! உலகக் கொள்ளையும் கொலையும் ஆகிய மகா பாதகம் செய்யவில்லை. இரக்கமற்ற செல்வந்தர்களை காமப்பிசாசுகளாக கனகமாளிகையிலே கூத்தாடிய கயவர்களை ஏழைகளின் கண்ணீரை ஆறாய்ப் பெருக்கிய ஈனர்களாகிய பிரபுக்களைத்தான் நான் கொள்ளை

யடித்தேன். அச்செல்வத்தை எல்லாம் யாவருக்கும் பகிர்ந்து தந்தேன்? பஞ்சைகளுக்கும் பாமரர்களுக்கும் தாங்கள் என்ன செய்தீர்...?

அலக்: கிரேக்க நாட்டைக் கேள்.

கைதி: படைவீரர்களின் மனத்தை மயக்க ஏதோ கொஞ்சம் பகிர்ந்து கொடுத்தீர். உம்மைச் சுற்றி நின்று புகழும் நய வஞ்சகர்களுக்குப் பொன் பிச்சை ஈந்தீர். அதற்காக – புனிதம் நிறைந்த கிரேக்க நாடு பல்லாயிரக் கணக்கான கிரேக்க மக்களைத் தாரை வார்த்தது. எத்தனை ஆயிரக்கணக்கான இளம் பெண்கள் தங்களால் அமங்கலிகள் ஆயினர்? எத்தனை இளங் குழந்தைகள் தங்களால் அனாதைகள் ஆயின? தங்களால் எத்தனை ஆயிரக்கணக்கான ஏழைகளின் இல்லங்கள் தீ மூண்டது. எத்தனை புகழ் தோய்ந்த கலைச் சின்னங்கள் இடிந்தழிந்தன? எத்தனை அழகிய நதிகளின் தெளிந்த நீரோட்டம் மக்கள் சிந்திய ரத்தத்தாலே சிவந்து ஓடியது? இவற்றை எல்லாம் நான் செய்தேனா? பாமர மக்களைப் படுகொலை செய்தேனா? அறியாக் குழந்தைகளை அனாதைகள் ஆக்கினேனா? கன்னிகைகளின் கண்ணீரைச் சிந்தினேனா? என்னால் எங்கு தீ மூண்டது? உலகப் போர்க்களத்தின் பாசறையிலே தங்கி பலநூறாயிரம் வீரர்களின், மக்களின், மரணக் கூக்குரலைத் தாலாட்டாக ஏற்றுத் துயில் கொண்டது மஹா அலக் சாந்தராகிய தாங்கள் தான். கிரேக்க மன்னரே! நம்மில் யார் கொள்ளைக்காரன்? கொலைகாரன்?

அலக்: (தளுதளுத்த குரலிலே) ஆனால்... ஆனால்...... எனக்கும் மஹா அலக்சாந்தராகிய எனக்கும் – ஒரு சாதாரணமான கொள்ளைக்காரனுக்கும் ஒரு வேற்றுமையும் இல்லையா?

கைதி: பஞ்சத்தாலும், பசியாலும் வெம்பிய தரிசிய நாட்டு மக்களின் கண்ணீரைத் தவிர்ப்பதற்காகக், கொள்ளையிலும், கொலையிலும் இறங்கிய நான் கள்வன் என்றும், கொலைகாரன் என்றும் பழி தூற்றப்பட்டு தங்கள் முன்னே கைதியாக நிற்கின்றேன். ஆனால், ஆதிக்கப் பேராசையாலே, உலகத்தையே போர்களமாகச் செய்து, அதிலே பல்லாயிரக்கணக்கான மக்களைப் பலியிட்டு இரத்தச் சேறாக்கி, அந்தச்சேற்றிலே புரண்டு கிடந்த எண்ணற்ற வீரர்களின் உடலங்களையே படிக்கற்களாகக் கொண்டு, அதனைக் கடந்து, இந்த உலகச் சக்ராதிபத்யத்தின் பொன் சிம்மாதனத்தை அடைந்த தங்களை "மஹா அலக்சாந்தர் நீடு வாழ்க!" என மங்கள வாழ்த்துக்கூறி தங்களின் திருமாளிகையிலே வணங்கி நிற்கிறது இன்றைய சமுதாயம். தாங்கள் செய்த மஹா பாதகங்களை, கொலைகாரத் தனத்தை பேராசையை எல்லாம் உலக ஏகாதிபத்தியம் என்னும் நவமணி பதித்த பூச்சக்கிரக் குடை நிழலாலே மறைத்துக் கொண்டிருக்கிறீர். தங்களது சாம்ராஜ்ய மோகன வடிவிலே மயங்கிய கவிஞர்கள், தேன் ஊறும் தீஞ்சொற் கவிதைகளாலே தங்களை வாழ்த்துகின்றார்கள். தங்களது பொற்பீடத்திலிருந்து வீசப்படும் பிச்சைக் காசுகளுக்காக நயவஞ்சகர்கள் உம்மைச் சூழ்ந்து ஓயாது புகழ்கின்றார்கள். இதுதான் நம்முள் வேற்றுமை!

(அலக்சாந்தர் அங்கம் பதற எழுகின்றான்.)

ஆம் உண்மைதான். முழுதும் உண்மைதான். மஹா அலக்சாந்தராகிய நான் பொன்னுக்கும், மண்ணுக்கும், புகழுக்குமாக உலகைக் கொள்ளை கொண்ட பெருங் கொலைக்காரன்தான். என் நெஞ்சிலே நீதிக்கு இடமில்லை. ஊர்க் கொள்ளைக்காரனாகிய உன்னைத் தண்டிக்க, உலகக் கொலைகாரனாகிய எனக்கு உரிமை இல்லை. ஓ! தரிசிய நாட்டு வீரனே! நான் உன்னை மனமார விடுதலை செய்கின்றேன்.

(கைதி விடுதலைசெய்யப் படுகிறான்)

சேவை

பாலகவி

எச்ச ரிக்கை எச்சரிக்கை
　　எச்சரிக்கை கூறுவோம்;
இச்ச கத்துள் எதனில் இன்பம்
　　எய்து மென்று தேருவோம்.

உணவில் உடையில் பொன்னில் பொருளில்
　　உள்ள தோமெய் யின்பமே?
பணிவில் பரிவில் பண்பில் அன்பில்
　　பார்க்க லாம் மெய் யின்பமே.

ஏச்சில் பேச்சில் சூதில் வாதில்
　　எய்து மோமெய் யின்பமே?
தேர்ச்சி மிக்க உள்ளத் தெளிவில்
　　சேரு மேமெய் யின்பமே.

போலி வேடப் பூச்சில் பூணில்
　　பொலியு மோமெய் யின்பமே?
ஞாலந் தன்னில் யாரும் வாழ
　　நாடில் தோன்றும் இன்பமே

கல்லில் மண்ணில் காகி தத்தில்
　　காணு மோமெய் யின்பமே?
அல்லும் பகலும் சேவை செய்தற்
　　கார்வம் பெருகில் இன்பமே.

செய்யுளும் வசனமும்

பெர்னட்ஷா என்ற பிரபல ஆங்கில நாடகாசிரியர், ஷேக்ஸ்பியரை "இவ்வளவு அழகிய வசன நடை எழுத சக்தி வாய்ந்திருக்கையில், ஏன் நாடகங்களை இந்தமாதிரி செய்யுளில் அமைக்க வேண்டும்" என்று வசன நடையைக் கண்டு மகிழ்ந்து கேட்கிறார். செய்யுள் நடை உணர்ச்சியை வெளியிட மிகவும் ஏற்றது.

மேலான உணர்ச்சியும், அதை வெளியிடுவதற்கேற்ற செய்யுளும் வரப் பிரசாதம். அவை வருந்தி வரக்கூடியவை அல்ல. வசனம் ஆராய்ச்சிக்கு ஏற்றது. அது கல்வி கேள்வியாலும் அப்பியாசத்தாலும் சிறப்படையக் கூடியது. வசனத்தைவிட செய்யுளில் வலிமை இருப்பது எல்லோரும் அறிந்த விஷயம். இதற்குச் சிறந்த உதாரணம், ஒளவை பிராட்டியாரின் நீதி மொழிகள், இராமாயணத்தின் நீதி ஸ்லோகங்கள், ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் சில பேச்சுகள்; காட்சி வர்ணனையிலும், நிகழ்ச்சி கதையிலும் செய்யுள், வசனத்தைக் காட்டிலும் மனத்தைக் கவரக்கூடியதாயிருப்பதைக் காணலாம். இதற்கும் மேலான உதாரணம், ராமாயணத்தில் தசரதர் தான் கௌசல்யை மணக்கு முன் ரிஷி புத்திரனை அறியாமல் கொன்ற கதையைச் சொல்லும் பாகம்; அகண்ட பச்சை வனத்தில் சீதை, ராவணனைக் காக்க வைத்துக் கதை அளக்கும் பாகம்; ஏன் ராமாயணம் முழுவதும் இதற்கு நிதர்சனமாக எடுத்துக் கொள்ளலாம். அதில் எந்த பாகத்தைத்தான் வசனத்தால் மேலாக அமைத்திருக்க முடியும்?

[வால்மீகி ராமாயணத்தில் காணப்படும் வேகம், சோர்வு, பாத்திரங்களின் பேச்சு, நடத்தைப் பொருத்தம், இவை ஹாலிவுட் ஆசிரியர்களும், டைரக்டர்களும்கூடக் கண்டு பொறுமைப் படத்தக்கவை.]

எஞ்சியது தர்க்க விஷயம். தர்க்கத்தில்கூட வசனத்தைவிட செய்யுளுக்கு அதிக வலிமையுண்டென்பதற்கு மேலான சான்று (பகவத் கீதை) ராமாயணத்தில் பரதராம சம்வாதம். பாரதத்தில், நிராசையாலும், துக்கத்தாலும், கோபத்தாலும் பாண்டவர்களை தூக்கத்தில் கொல்ல நினைத்த அசுவத்தாமனுக்கும், அவன் துர் எண்ணத்தை மாற்றி, மறுபடியும் போர் செய்யச் சொல்லும் கிருபாச்சாரியாருக்குமிடையே ஏற்பட்ட விவாதம்.

செய்யுள் நடைக்கு உள்ள இந்த வலிமைக்குக் காரணம் என்னவென்பதை ஆராய்வோம்.

கவிதை உணர்ச்சியை ஆதாரமாகக் கொண்டதென்று ஏற்கனவே கூறினோம். மிருகங்கள்

கர்ஜித்து வாழ்கின்றன; குயில் பாடுகிறது; பல்லி கொட்டுகிறது; மயில் ஆடவும், பாடவும் செய்கிறது. அறிவுள்ள மனிதன் எண்ணையும் எழுத்தையும் கண்ணுகக் கொண்டு ஐம்புலன்களால் உணர்வதை ஒப்பிட்டு, ஆராய்ந்து மதிப்பிட்டு உயர்ந்த அறிவால் கால இடத்தடைகளை வென்று வாழ்கிறான். கவி தான் விஸ்வ அழகினால் தூண்டப்பட்டு அறிந்த உண்மைகளை அழகு வடிவமாய் ரசித்து அந்த அனுபவத்தைச் செய்யுள் மூலம் உலகுக்கு வழங்குகின்றான். கவியின் இந்த ரசனை தான் செய்யுளின் முதல் விசேஷம்.

வசனத்தில் கற்பனை அளவுக்கு உட்பட்டிருக்கும் சாதாரண வாழ்க்கையை ஒட்டி இருக்கும். செய்யுளில் கற்பனைக்கு வரம்பு கிடையாது. அது கவியின் சாமர்த்தியத்தைப் பொருத்திருக்கும். காளிதாசன் உவமைச் சித்திரங்களை வரைவான். வால்மீகி வர்ணனையோடு சிந்தனைகளைப் பொழிந்து உயிரோவியங்களைக் காட்டுகிறார். அவர் குமார சம்பவத்தில் சப்த ரிஷிகள் இறங்கும் பொழுது "அவர்களுடைய முடிகள் அகல் விளக்குச் சிகைபோல இருந்த" தாகச் சொல்லுகிறார். அவர்கள் இறங்கும் பொழுது "குளத்தின் படிக்கட்டுகளில் தோன்றும் சந்திரனின் பிம்பங்கள் போல் வரிசையாய்த் தோன்றினர்" என்கிறார். அவருடைய உவமைகளிலெல்லாம் இந்தப் பிழையின்மை காணப்படும்.

வால்மீகியின் சந்திரோதய வர்ணனையில் "பூர்ணச் சந்திரன் ஆகாயத்தில் அனுமாருக்கு விளக்கு ஏற்றினது மாதிரி வந்தா" னென்று ஆரம்பித்துப் பல உண்மைகளை அடுக்குகிறார். அதிலும் ருது வர்ணனைகளிலும் சிந்தனைகள் கங்காப் பிரவாகம் போல் வருகிறது. ராமர் காட்டுக்குச் செல்லும் பொழுது குதிரைகளும், மரங்களும், பக்ஷிகளுங்கூட பரிதபிக்கிறதாகக் கற்பிக்கிறார். சந்தியா சூரியனைப் பார்த்து, இராமர் "இந்தப் படிப்படியாய் அமைந்திருக்கும் வர்ண மேகங்களின் மேலேறி பகவானுக்கு மாலையிடலாம்போல் தோணுகிறது" என்கிறார். இவ்வணிகள் வசனத்தில் பொருந்தாது. செய்யுளுக்கு அவைதான் அழகு தருகின்றன.

சூரியனுடைய கதிர்களை நாம் நேராகப் பார்க்க முடியாது. ஆகவே, ஏதாவது பொருளின் மீது பட்டதும் அது நமக்கு ரூபமாகப் புலனாகிறது. கவியின் மனக்கதிர்கள் அவன் பார்க்கும் விஷயங்களில் பட்டு, அவற்றிற்கு தனியழகைக் கொடுக்கின்றன. நாம் அவற்றைப் புதிய விதமாய் ரசிக்க ஆரம்பிக்கிறோம். மின்காந்த அலைகள் மீது சப்த அலைகள் வந்து தமது புலனுக்கு எட்டாததையும் கிட்டச் செய்வது போல கவியின் கற்பனை அலைகள் நம் பகுத்தறிவால் அறியாததையும் சொல் வன்மையால் காணச் செய்கிறது. இவை பொருளைப் பற்றிய வேற்றுமைகள்.

செய்யுள், சாதாரணமாய் வசனத்தால் உணர்த்தப்படும் விஷயங்களையும் அதிக வலிவுடன் உணர்த்துவதற்குக் காரணம் செய்யுளின் யாப்பில் வழக்கமாய்க் கையாளப்படும் சில முறைகள் தான்.

அவை எதுகை, மோனைமாத்திரையளவு, (தாளம்) திருப்பிச் சொல்லுதல், அணிகள் முதலியன. கவிதன் சாமர்த்தியத்துக்குத் தக்க

படி. செய்யுளின் யாப்பில் உருவத்தையும் ஒலியையும் கருத்திற்கு ஏற்றபடி அமைத்து ரச உணர்ச்சியை அதிகப் படுத்த வழி செய்து கொள்ளலாம். சப்தமானது பிரதி வனி, ஸ்தாயி, இட விசேஷங்கள் இவற்றால் பெருக்கப்பட்டு சீரடைவதுபோல் செய்யுளின் கருத்தும் அதன் உருவத்தால் வலிமை பெருகிறது. அதனால்தான் செய்யுள் கருத்து வசனக் கருத்தைவிட சீக்கிரம் கிரகிக்கப்பட்டு, மனதில் ஆழமாகப் பதிந்து, மறக்கப்படாமல் எளிதில் ஞாபகம் செய்து கொள்ளக் கூடியதாயிருக்கிறது.

மேலும் இரண்டு மூன்று அடிகளில் கருத்தைச் சொல்லி முடிக்க வேண்டி இருப்பதால் சொற்கள் வேண்டிய இடத்தில், எளிமை, பொருத்தம், தெளிவு, தொடர்பு, தேற்றம், சுருக்கம் முதலிய குணங்கள் கூடியதாயிருக்க அவசியம் ஏற்படுகிறது. இவற்றுடன் செய்யுள் அர்த்த கௌரவம், உள்ளக் கிளர்ச்சி புதிய உணர்ச்சி முதலிய சீர்கள் பெற்றிருந்தால் படிப்போரின் மனதைக் கவர்ந்து அறிவிற்குப் புத்துயிரளிக்கும் மேலான கவிதையாகப் போற்றப்படும்.

செய்யுள், வசனத்தைவிட கௌரவம் பெற்றதற்குக் கர்த்தாவும் காரணம். பெரியோர்கள் தங்கள் உயர்ந்த கருத்துகளைச் செய்யுளில் சொல்வதென்று ஓர் சம்பிரதாயம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கும் மூலகாரணம் செய்யுள் நடையின் விசேஷ வலிவுதான்.

காவியத்தை (நான்சென்ஸ் பேத்தல்) என்று சர் ஐஸாக் நியூடன் இகழ்ந்ததாகச் சொல்வதுண்டு. அவருள்ளத்தில் காவியத்தை கிரகிக்கும் (ரிஸீவர்) இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். பல தேசத்துக் காவியங்களைப் படித்து ரசித்த அமெரிக்க வேதாந்தி எமர்சன் "இவையெல்லாம் எனக்குத் திருப்தி அளிக்கவில்லை. இன்னும் மேலான கவியை எதிர்பார்க்கிறேன்" என்று சொன்னார். அவர் கீழ்தேசத்துக் கவிகளை மிகவும் பாராட்டி எழுதியுள்ளார். சுருங்கச் சொல்லின் வசனத்திற்கும் செய்யுளுக்கும் இடையேயுள்ள வேற்றுமை ஓட்டத்திற்கும் ஆட்டத்திற்கும், அசைவிற்கும், அலைக்கும், சப்தத்திற்கும் கீதத்திற்கும், வெளிச்சத்திற்கும் வர்ணத்திற்கும், பொடிக்கும் படிகத்திற்கும், கரிக்கும் வைரக்கல்லிற்கும் இடையேயுள்ளது போலது!

சம்பாஷணையும் ஒரு கலையே!

[ரா. பா. தியோதர்]

"ஆ, முக்கால் மணி நேரம் ஆகி விட்டதா! ஐந்து நிமிஷத்திற்கு முன்புதான் அவருடன் பேசத் தொடங்கியது போலல்லவோ தோன்றுகிறது!....." நமது கடியாரத்தைப் பார்த்து மேற்கண்டவாறு சொல்லக்கூடிய சந்தர்ப்பம் ஒவ்வொருவருடைய அனுபவத்திலும் பன்முறை நேர்ந்திருக்கக்கூடும். இதற்கு மாருக "இந்த ஆசாமி எப்பொழுது போவானே தெரியவில்லையே!... குளிப்பதற்கு எல்லாம் தயாராகி விட்டது என்று என் மனைவி வந்து சொல்லக்கூடாதா! வந்த மனிதன் எழுந்து போன பிறகு 'உங்களுக்கு யாராவது பேச அகப்பட்டால் போதுமே; மணி போகிறது தெரியாமல் வளவள வென்று பேசிக்கொண்டேயிருப்பீர்களே' என்று சொல்லத்தான் தெரியும்..." என்று நமக்குள் முறையிடுவதும் சில சமயங்களில் நேரிடக்கூடியதே.

ஆம், சிலர் இருக்கின்றனர், அவர்கள் நம்முடன் சிறிது நேரம் பேசுவதற்குள் எப்படி அவரிடமிருந்து தப்பித்துக் கொள்ளலாமென்று வழி தேடுகிறோம். வேறு சிலர் நம்முடன் எவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்த போதிலும் நமக்கு சலிப்பு ஏற்படுவதில்லை. சிலர் பாடுவது நமக்குப் பிரியத்தையும், வேறு சிலர் பாடுவது சலிப்பையும், சில படங்கள் நமது கண்களுக்கு இன்பத்தையும், வேறு சில படங்கள் அருவருப்பையும் அளிக்கின்றது போலவே, சிலருடைய சம்பாஷணை நமக்குப் பிரியத்தையும், வேறு சிலருடைய சம்பாஷணை சலிப்பையும் அளிப்பனவாயிருக்கின்றன. இதற்குக் காரணமென்ன? சம்பாஷணை என்பது ஒரு கலை. சிற்பம், ஓவியம், சங்கீதம், கவிதை ஆசியவற்றைப் போல் சம்பாஷணை ஒரு லளித கலையல்ல வெனினும், மனிதர்களுக்கு இன்பம் அளிக்கக்கூடிய கலைகளுள் அதுவுமொன்று. ஆயினும், எவ்வித சம்பாஷணையும் கலை என்பது பொருத்தமுடையதாகாது. நீதி மன்றத்தில் விசாரணையின்போது நீதிபதிக்கும் வழக்கில் சம்பந்தப்பட்டவர்களுக்குமிடையே நடைபெறும் சம்பாஷணையையோ, கடைக்காரனுக்கும் பண்டம் வாங்க வந்தவனுக்குமிடையே நடைபெறும் சம்பாஷணையோ, ஆஸ்பத்திரியில் டாக்டருக்கும், பிணியாளிக்குமிடையே நடைபெறும் சம்பாஷணையையோ கலையென்று சொல்லுவது, பொருந்தாது. ஒரு குறித்த நோக்கம் எதுவுமின்றி, காலப்போக்குக் கெனவே இரு நபர்கள் சம்பாஷணையில் ஈடுபட்டு, அதை ரசிக்கையில் அச்சம்பாஷணை ஒரு கலையாகிறது.

கலையில் கீழ்த்தரக் கலையுமுண்டு உயர்தரக் கலையுமுண்டு. சங்கீதக் கச்சேரிகளில் பிரபல சங்கீத வித்துவானெருவரால் பாடப்படும் முத்துத்தாண்டவர் கீர்த்தனத்திற்கும் கிராமங்களில் நடக்குந் தெருக்கூத்தில் கள்ளஞகை நடிப்பவன் பாடும் தெம்மாங்குப் பாட்டிற்

கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கின்றதோ அதேயளவிற்கு வெவ்வேறு தரமான சம்பாஷணைகளுக்கிடையே வித்தியாசமிருத்தல் கூடும். ஆயினும் மானிடப் பிறவிகளுள் சங்கீதத்தை விரும்பாதவர்கள் ஆயிரத்தில் ஒருவர் கிடைப்பதும் அரிதாயிருப்பதுபோல் சம்பாஷணையை விரும்பாத மனிதர்களும் உலகில் ஒரு சிலரேயிருப்பார். மனிதனுக்கு மற்றொரு மனிதனுடன் சம்பாஷிப்பது இன்பம் அளிப்பதாயிருக்கிறது.

நமது தமிழ் நாட்டில் பண்டைய காலத்திலிருந்தே வீடுகளின் வெளிப்பக்கத்திலுள்ள திண்ணைகள் சம்பாஷணைக் கேற்ற பீடங்களாக விளங்கி வந்திருக்கின்றன. கலையென்ற தரப்பில் சம்பாஷணை இங்கிலாந்திலும், பிரான்சிலும் பல ஆண்டுகளுக்கு முன்பே உச்சநிலையை யடைந்திருந்தது. இங்கிலாந்தில் பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் 'கிளப்புகள்' என்ற ஸ்தாபனங்களிலும், பிரான்சில் 'சலோன்'களிலும் இக்கலை உலக சரித்திரத்தில் வேறெந்தக் காலத்திலுங் கண்டிராத உன்னத நிலையை யடைந்திருந்தது. அத்தகைய கிளப்புகளுள் ஒன்றில் டாக்டர் ஜான்ஸன், சர் ஜோஷுவா ரெய்னல்ட்ஸ், ஆலிவர் கோல்ட்ஸ்மித், எட்மண்டு பர்க், முதலிய மேதைகள் ஒன்றுகூடி சம்பாஷணையில் ஈடுபட்டிருந்தது இலக்கிய ரசிகர்கள் அறிந்த விஷயமே. இங்கிலாந்திலிருந்த கிளப்புகளுக்கும் பிரான்சிலிருந்த சலோன்களுக்கு மிடையே காணப்பட்ட வித்தியாசங்களுள் ஒன்று சலோன்களிற் சிலவற்றில் சபா நாயகராக விளங்கியவர்கள் மாதர்களாயிருந்ததே, தீட்சணிய புத்தியுடையவர்களும் இலக்கிய ரசிகர்களுமாய் விளங்கிய இம்மாதர்களுள் மிகப் பிரசித்தி பெற்றவர்கள் மடாம் நெக்கர், மடாம் ரெக்காமியே, மடாம் டெஸ்டால் முதலியோராவர்.

சம்பாஷணை இன்பமளிக்கத் தக்கதொரு காலப்போக்காயிருப்பதற்கு, சம்பாஷணையிலீடு பட்டிருப்பவர்கள் நிறைந்த கல்வியறிவுள்ளவர்களாயிருப்பது அத்தியாவசியமல்ல. எத்தகைய நிலையிலுள்ளவர்களும் பிறருக்கு இன்பம் அளிக்கத்தக்க வகையில் சம்பாஷணையை நடத்தலாம்.

ஒருவருடைய சம்பாஷணை நமக்கு இன்பம் அளிக்க, வேறொருவர் நம்முடன் சம்பாஷிக்கையில் நமக்கு சலிப்போ அருவருப்போ ஏற்படுவதற்குக் காரணமென்ன? காரணம் இடத்திற்கும், சந்தர்ப்பத்திற்கும் நம்முடைய மனோநிலைக்கும், நம்முடன் பேசுபவருடைய குணலட்சணங்களுக்கும் ஏற்றவாறு வித்தியாசப்படலாம். இக்காரணங்களுள் ஒவ்வொன்றையும் ஆராயப் புகுவோமாயின் இக்கட்டுரை பெரிதும் விரியுமென்பதால் அதிமுக்கிய காரணங்களை மட்டும் குறிப்பிடுவோம்.

நாம் நம்மைச் சேர்ந்த காரியங்களைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தால், அல்லது மற்றவர்கள் பேச அவகாசம் அளியாமல் நாமே இடைவிடாமல் பேசிக் கொண்டிருந்தால் நம்முடனிருப்பவர்களுக்கு சலிப்பு ஏற்படாமலிருக்க முடியாது. நம்மைப் பற்றிய விஷயங்களில் பிறர் அக்கறையெடுத்துக் கொள்ளுதல் நமக்கு சந்துஷ்டியளிப்பதைப்போல் பிறருடைய விஷயங்களில் நாமும் அக்கறையுடையவரா யிருப்பின் அவர்களும் மகிழ்ச்சி அடைவர். ஒருவர் தன்னுடைய ஆற்றலையும், கல்வியறிவையும் காட்டுவதையே

ஏக நோக்கமாகக் கொண்டு பிறருடன் சம்பாஷணையிலீடு பட்டால், அல்லது தன்னுடன் பேசுபவர்களைவிட தான் பன் மடங்கு பெரியவன் என்று இருமாப்புக் கொண்டிருந்தால், உடனிருப்பவர்களுக்கு அருவருப்பு ஏற்படுவது சகஜமே. உலகில், எவ்வளவு கற்றுத் தேர்ந்தவராயிருப்பினும் 'பிறரிடமிருந்து நான் அறிந்து கொள்ளக்கூடிய விஷயம் ஒன்றுமில்லை' யென்று சொல்லக் கூடியவர் யாருமில்லை.

சுருங்கச் சொல்ல வேண்டுமாயின், ஒரு சம்பாஷணையில் ஈடு பட்டுள்ளவர்களனைவரும் அச்சம்பாஷணையை ரசிக்க வேண்டுமாயின் ஒவ்வொருவரிடமும் பரந்த நோக்கமும், சகிப்புத்தன்மையும், ஓரளவிற்கு ஹாஸ்ய உணர்ச்சியும் இருத்தல் அவசியம்.

சம்பாஷணையிற் கலந்து கொள்ளுபவர்களில் எவரேனும் தற்புகழ்ச்சியுடையவராயும், அகந்தையும் இறுமாப்புங் கொண்டவராயுமிருப்பின் மற்றவர்கள் அவர் பேசுவதைக் கேட்பதில் பிரியங் கொள்ளுவது எப்படி? ஒருநாள் லண்டன் மாநகரில் 'ராயல் அக்கடெமி' எனுங் கழகத்தினர் நடத்தியவிருந்தொன்றில் ஓவிய நிபுணர்களுடன் தாமஸ் கார்லைல், தாக்கரே போன்ற நூலாசிரியர்கள் சிலருமிருந்தனர். விருந்தாளிகள் டிஷ்ஷியன் என்ற இத்தாலிய ஓவிய நிபுணரைப்பற்றிப் பேச நேர்ந்தபோது, அவருடைய படங்களுக்கு அலாதியான அழகை யளிக்கும் பல்வேறு அம்சங்களுள் ஒவ்வொன்றை ஒவ்வொருவர் குறிப்பிட்டுப் பாராட்டுவாராயினர். "டிஷ்ஷியன் வர்ணம் தீட்டியுள்ள விதம் விசேஷ விதமாகக் குறிப்பிடத் தக்கது" என்றார் ஒருவர். "சுற்றிலும் நிழல் படிந்திருக்க, முகங்களின் மீது வெளிச்சம் படுவதை அவர் சித்திரிப்பதில் விளங்கும் அரிய திறமையும், அவரைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடக் கூடிய விஷயங்களுள் ஒன்று" என்று மிகுந்த உற்சாகத்துடன் கத்தினர் மற்றொருவர். இப்புகழ் மாலைகளையெல்லாம் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த கார்லைல் "இதோ நான் ஒருவன் இங்கு உட்கார்ந்திருக்கிறேன். கடவுளால் சிருஷ்டிக்கப் பட்டுள்ள மானிடப் பிறவிகளுள் நானும் ஒருவன். எனக்கு டிஷ்ஷியனைப் பற்றி ஒன்றுமே தெரியாது, தெரிந்துகொள்ள வேண்டுமென்று நான் கவலைப் படுவதுமில்லை. டிஷ்ஷியனைப் பற்றிக் குறிப்பிடக் கூடிய விஷயங்களுள் இதுவுமொன்று" எனக் கூறினர். உடனே தாக்கரே "மன்னிக்கவும்; இது டிஷ்ஷியனைப் பற்றிக் குறிப்பிடக் கூடிய விஷயமல்ல. கார்லைலைப் பற்றிக் குறிப்பிட வேண்டிய விஷயம்—அதுவும் மெத்த வருந்தத் தக்க விஷயம்" என்று சொன்னர்.

மேற்கூறிய சம்பவத்தில் கார்லைல் பேசியவிதம் அங்கிருந்தவர்களுக்கு எவ்வளவு அருவருப்பை யளித்திருக்க வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். கார்லைல் ஒரு நூலாசிரியராயிருந்ததன் நிமித்தம் அங்கு கூடியிருந்த நபர்களில் பெரும்பான்மையோர் மறுத்துப் பேசத்துணியவில்லையென்று ஊகிக்கலாம். ஆனல் கார்லைலைப் போலவே பெரிய நூலாசிரியர் என்று பெயரெடுத்திருந்த தாக்கரே கார்லைலுக்கு அஞ்சுபவரா? உடனே அவருக்கு ஒரு சூடு கொடுத்தார். நாலுபேர் கூடியுள்ள இடத்தில்

இறுமாப்புடன் நடந்து கொள்ளுபவர்கள் பெரும்பாலும் கார்லைப் போலவே அவமானம் அடைவது நாம் கண்கூடாகப் பார்த்து வரும் விஷயம்.

பிறர் மனதைப் புண் படுத்தாத வகையில் பேச வேண்டியது ஒருபுறமிருக்க, நாம் பேசுவதில் எவ்வளவு உற்சாகம் காட்டுகிறோமோ அதே யளவிற்கு பிறர் சொல்லுவதைக் கேட்பதில் பொறுமை காட்ட வேண்டும். நம்முடைய காரியம் நமக்குப் பெரிது, அவருடைய காரியம் அவருக்குப் பெரிது.

சம்பாஷணையைப் பற்றியதொரு கட்டுரையில் 'பேசப் போகிறாயா, சாகப் போகிறாயா?' என்ற தமிழ் நாட்டுப் பழமொழியையொட்டி ஒரு வார்த்தை கூறாதிருப்பது பொருந்தாது. இடம், சந்தர்ப்பம், நம்முடன் சம்பாஷிப்பவர்களின் மனப்பான்மை முதலியவற்றிற்குப் பொருத்தமில்லாத வகையில் பேசுவதனால் கெடுதியே விளையும். ஆங்கில பாஷையில் 'பேசுவது வெள்ளியெனில் பேசாமலிருந்து விடுவது தங்கம்' என்று ஒரு பழமொழி வழங்கி வருகிறது. ஆனால் 'எதிலும் மிதமாயிருத்தலே அறிஞர்க்கழகு' என்ற இலத்தீன் பழமொழியோடு இக்கட்டுரையை முடிப்பதே பொருத்தமுடையதாகும் என்பதை ரசிகர்கள் எற்றுக் கொள்ளுவார்களென்ன நினைக்கிறேன்.

பெண்

[மூல ஆசிரியர்: "ஆனந்தா"

மொழிபெயர்ப்பு:- ஜெயலட்சுமி, ஆர். ஸ்ரீனிவாசன்]

அன்று பகல் போஜனம் முடிந்த பிறகு கொஞ்சம் தூங்கினேன். விழிப்புண்டான பொழுது சுமார் நான்கு மணி இருக்கலாம், முகம் கழுவிக் கொள்வதற் கென்று அறையிலிருந்து வெளியே வந் தேன். மறுபடியும் அதே பெண் நான் முதலில் பார்த்த இடத்தி லேயே கம்பத்தில் சாய்ந்த வண் ணம் உட்கார்ந்திருந்தாள். நான் வெளியே வந்ததைப் பார்த்ததுமே நீட்டிக்கொண்டிருந்த கால்களை மடக்கிக்கொண்டு, என்னவோ ஒருமாதிரி பற்றில்லாதவள்போல் புடவைத்தலைப்பின் நூல்இழையை பிய்த்துக் கொண்டிருந்தாள். எனக்கு ஜலம் வேண்டியிருந்தது. கேட்பதற்கு அங்கே வேறு யாரும் இருக்கவில்லை.

முன் ஒருதடவை அவளுடன் பேசி இருந்தேனே; இப்பொழுது அந்தச் சலுகையில் அவளை நோக்கி "சென்னம்மா, கொஞ்சம் ஜலம் வேண்டி இருக்கு — முகம் கழுவ" என்றேன். "சரி சாமி" என்று புன்முறுவல் பூத்த வண்ணம் உள்ளே சென்ருள். சென்னம்மாள் பிறக்கும் பொழுதே புன்முறுவல் கொணர்ந்திருக்கிருள் போலும்! நான் பார்த்தபொழு தெல்லாம் அவளுடைய அழகிய முகம் புன்முறுவல் பூத்து விளங் கிக் கொண்டிருந்தது. பட்டின வாசல்களில் யுவதிகளின் மந்த ஹாசத்தை பற்பல சந்தர்ப்பங் களில் பார்த்திருக்கிறேன். ஆனல் அது சாதாரணமாய் பெரிய பெரிய மரங்களை பெயர்த்து, புழுதி எழுப்பும் புயல்காற்றை போன் றது. மனதினுள் கர்ஜிக்கும் அலை களை எழுப்பி அல்லோல கல்லோ லம் செய்யும் புன்முறுவல்! சென் னம்மாவின் புன்முறுவல் அத்தகை யது இல்லை. அது மிருதுவாக அங்கே வீசி இங்கே வீசி, தளிர் களில் புகுந்து, புஷ்பக் கொத்து களில் பாய்ந்து, பரிமளத்தை சுமந்துவரும் தென்றலைப் போல் உள்ளத்தினுள் சிறிய சிறிய அலை களை எழுப்பும் சரளமான புன் முறுவல்! புயல்காற்றில் அகப் பட்டுகொண்டால் வெறும் புழுதி கண்ணிலும், வாயிலும்மண்! அதில் சுவை இல்லை. இந்த பட்டிகாட்டு பெண்ணின் சிரிப்பிலோ? ஓகோ! அது மல்லிகை புஷ்பம் போன் றது! அதெவ்வளவு தூய்மை! இணையில்லா பரிமளம்!... இவ்வ ளவும் சிந்தித்து முடியும் பொழுது சென்னம்மா ஜலம் கொணர்ந் தாள்.

கை கால் முகம் கழுவிக் கொண்டு அறைக்குச் செல்வதற் குள் சென்னம்மாளே கொஞ்சம் பலகாரமும், ஒரு டம்ளரில் பாலும் கொணர்ந்து வைத்து விட்டு சென்ருள். பலகாரம் சாப் பிட்டுவிட்டுச் அப்படியே கொஞ் சம் சுற்றிவிட்டு வரலாமென்று என் புல்லாங்குழலையும், சிறிய

தொரு "கேமரா" வையும் எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தால் சென்னம்மாள் அதே இடத்திலேயே உட்கார்ந்திருந்தாள்.

நான் வீட்டை விட்டு நாலைந்து மார்கள் நடந்தேன். எந்தப்புறம் போவதென்று யோசிக்கலானேன். வீட்டின் பின்புறம் அவர்கள் தோட்டம் இருக்கிறதென்று கேள்விப்பட்ட ஞாபகம் வரவே அங்கேயே போகலாம் என்ற தீர்மானத்திற்கு வந்தேன். ஆனல் வழி தெரியாது. என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டே சென்னம்மாளையே கேட்டுவிடுவது என்று திரும்பி "என்னம்மா, உங்கள் தோட்டம் இருக்கிறதாமே அதைப் பார்க்கலாமென்று இருக்கிறேன். எது வழி என்று சொல்கிருயா?" என்று கேட்டேன். அவள் "ஆகட்டும் சாமி" என்று எழுந்துவந்து என்னை வீட்டு பின்புறம் அழைத்துச் சென்று, ஒரு ஒற்றையடி பாதையை காண்பித்து "இதுதான் எங்கள் தோட்டத்திற்கு வழி சாமி" என்ருள்.

"சரி போகிறேன்" என்று சொல்லிப் புறப்பட்டேன். அந்த ஒற்றையடி பாதை புழக்கடையில் உள்ள காய்கறி தோட்டத்தை வளைத்துகொண்டு பெரிய தோட்டத்திற்குச் சென்றது. அந்தவழியில் சுமார் இருபது மார்கள் சென்றிருப்பேன். அப்பொழுது காற்றடித்ததில் நான் போர்த்திகொண்டிருந்த மேல் வேஷ்டி காய்கறித் தோட்டத்தின் வேலியில் மாட்டிக் கொண்டது. அதை விடுவிப்பதற்காக திரும்பினேன். நான் அவளை எங்கே விட்டு வந்தேனே அங்கேயே நின்றிருந்தாள் சென்னம்மா. எனக்கு வழி தப்பிவிடும் என்ற சந்தேகமோ என்னமோ அவளுக்கு என்று எண்ணிக் கொண்டேன்.

இன்னும் சுமார் நூறு கெஜம் போகையில் தோட்டம் தெரிந்தது. அது வெகு சொகுசான தோட்டம். விசேஷமாக அங்கே இருந்தது பாக்கும் — தென்னையும் தான். இன்னும் சில பழச் செடிகளும் இருந்தன. சுபாவமாகவே ரம்மியமாக விருந்த அந்த தோட்டத்தின் சொகுசு அஸ்தமன சூரியனின் கிரகணங்களின் காந்தியில் நூறு மடங்கு அழகாகத் தோன்றிற்று. தோட்டத்தினுள் புகுந்து பத்து பன்னிரண்டு அடிகள் தூரம் போனதும் விசாலமானதொரு கிணறு தெரிந்தது. அது ஏற்றம் இறைக்கும் கிணறு. ஒரு புறத்தில் ஜலத்தின் வரையில் இறங்கி செல்வதற்கு படிகள் இருந்தன. கிணற்றைச் சுற்றிலும் சுமார் இரண்டடி உயரம் கல் சுவர். நான் போய் அந்த சுவரின் மீது அமர்ந்து தோட்டத்தின் அழகைப் பருக வாரம்பித்தேன்.

கொஞ்ச நாழிகை என் உள்ளம் அந்தத் தோட்டத்தின் அழகின் பானத்தால் ஏற்பட்ட மயக்கத்தால் ஏதோ ஒருவித வர்ணிக்க இயலாத சுகத்தை அனுபவித்தது. தோட்டத்தின் குளுமை தென்றலுடன் கலந்து வீசிக் கொண்டிருந்தது. கிணற்றைச் சுற்றிலும் விதம் விதமான புஷ்பச்செடிகள். அவைகளின் பரிமள மெல்லாம் தென்றலால் சூறையிடப் பட்டது. விதவிதமான பறவைகளின் இனிய நாதம் ஆகாயத்தில், செடி கொடி, மரங்களில் எங்கெங்கும் ஒலித்தன. என் இதயமும் பறவைகளுடன் பறவையாயிற்று. புஷ்பங்களுடன் புஷ்ப

மாயிற்று. கவிகள் கண் காணுத சொர்க்கத்தை ஏன்தான் வர்ணிக்கிருர்களோ என்றெண்ணினேன். எங்கே சுகமோ அங்கேதான் சொர்க்கம்!...... இதயம் ஆனந்த மிகுதியால் பொங்கி வழிந்தது. அதன் பூரிப்பில் புல்லாங்குழல் வாசிக்க வாரம்பித்தேன். குழலின் ஒரு ஸ்வரமானது நூறு ஸ்வரமாகத் தோட்டம் முழுவதும் பரவிற்று. என் குழலின் வாசிப்பில் நானே பூரித்துப் போனேன். இரண்டொரு கீர்த்தனைகளை குழலில் வாசித்துவிட்டு அதன் பிறகு வாயில் பாட ஆரம்பித்தேன். தோட்டம் முழுவதிலும் நானொருவன்தான் இருக்கிறேன் என்ற தைரியத்தில் வாய்க்கு வந்தபடி பாட ஆரம்பித்தேன். இருந்திருந்தாப்போல் என் பின்புறம் "கல, கல" வென்ற சப்தம் உண்டாயிற்று. நான் சட்டென்று பாடுவதை நிறுத்திவிட்டுத் திரும்பிப் பார்த்தேன்- பார்த்ததில் அந்தப் பெண் சென்னி! படிகளில் இறங்கி, குடத்தில் ஜலம் மொண்டு கொண்டிருந்தாள். நான் திரும்பிப் பார்த்த பொழுது அவள் நிமிர்ந்து என்னைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

எனக்கு ரொம்ப வெட்கமாகிவிட்டது. நான் பட்டணவாசி யென்று என் மீது இவர்கள் கௌரவம் காட்டியதற்கும், இப்பொழுது நான் இடையன் போல குழல் ஊதிக் கொண்டு வாய்க்கு வந்தபடி கத்திக் கொண்டிருந்ததற்கும் சரியாய்போச்சு! என்று நினைத்தேன். நான் படிக்கட்டின் பக்கம் முதுகை திருப்பி கொண்டு உட்கார்ந்திருந்ததால் அவள் வந்தது தெரியவில்லை. என் சங்கீதத்தின் அமர்க்களத்தில் அவள் கை வளையல்களின் சப்தமாவது, கால் கொலுசின் சப்தமாவது கேட்கவில்லை. ஆகக் கூடி அப்பொழுதிய என் நிலைமை ரொம்ப வெட்கக் கேடாக விருந்தது.

ஒரு கணம் நானே "என்ன இது!" என்று எண்ணினேன். ஆனாலுங்கூட மனது சமாதானமடைய மாட்டேன் என்றது. சிரிப்பு வரும் மாதிரி யாயிற்று. குழலை அருகில் வைத்துவிட்டு, 'கேமரா'வை எடுத்துக் கொண்டு அதைப் பழுது பார்ப்பவன் போல் நடித்தேன். அவள் குடத்தில் ஜலம் மொண்டு கொண்டு படிகளை ஒன்ருென்ருய் ஏறிவருவது போல் தெரிந்தது. படிகளை யெல்லாம் ஏறிய பின்னர் அவளுடைய காலடிச் சப்தம் கேட்கவில்லை. எனக்கு அவள் எப்பொழுதுதான் போவாளோ என்றிருந்தது. காலடிச் சப்தத்திற்கு பதில் வளையல்களின் சப்தம் கேட்டது. திரும்பவும் அவள் முகத்தைப் பார்ப்பதற்கு வெட்கமாயிற்று! ஆனாலும் திரும்பிப் பார்த்தேன்! அவள் பளபள வென்று நன்ருகத் தேய்க்கப்பட்ட இரண்டு பித்தளைக் குடங்களில் மொண்டு கொண்டு, படிக்கட்டுகளை யெல்லாம் ஏறி வந்து, அவைகளைக் குளத்தின் சுற்றிலுமிருந்த மேடை மீது வைத்திருந்தாள்.

அந்தச் சமயத்தில்தான் நான் அவளைத் திரும்பவும் பார்த்தது. என் விசித்திரமான சங்கீதத்தால் உண்டான சிரிப்பு இன்னும் அவள் முகத்தில் பரவி இருந்தது. எனக்கு ரொம்ப வெட்கமாயிற்று முகத்தை திருப்பிக்கொண்டு, உட்கார்ந்திருந்தவன் எழுந்தேன். அவள் என்னவோ பேசின மாதிரி இருந்தது. என் மனக்கலக்கத்தில் அதென்னவென்று தெரியவில்லை. மறுபடியும் அவள்புறம் திரும்பி, "என்னம்மா" என்றேன். அவள் "பாடுவதை என் நிறுத்தி

விட்டீர், சுவாமீ?" என்று கேட்டாள். அவளுடைய இந்தக் கேள்வியால் என் மனதில் ஏற்பட்ட கலக்கமும் அவமானமும் பகவான் தான் அறிவார்! சொல்வதென்னவென்று வகையறியாமல் "ஆ ஊம்..." என்று உபசாரத்திற்காக பல் இளித்துவிட்டு "முடிந்து விட்டதம்மா" என்றேன். அவள் கேட்ட கேள்வி பரிகாசம் செய்வது போல் இருந்தாலும் அதனால் எனக்கு கோபம் வரவில்லை. கோபம் ஏன் வரவேண்டும்! நான் செய்தது அசட்டுக் காரியம்! என்னுடைய அப்பொழுதிய மன நிலையில் சிரித்த முகத்தினளான இந்தப் பட்டிக்காட்டு, கள்ளங் கபடற்ற கட்டழகிக்கு என்னை பரிகாசம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருந்திருக்காது என்று தோன்றிற்று. எப்படியோ ஆனது ஆயிற்று. இனி இந்த இடத்தை விட்டுப் புறப்படலாம் என்று, குழலையும் கேமராவையும் கையில் எடுத்துக் கொண்டு இரண்டொரு அடி முன்னால் வைத்தேன். அதற்குள் "சாமீ!" என்று அழைத்தாள்.

"திரும்பவும் இதென்ன, சாமீ!" என்று திரும்பினேன். அவள் நிறைந்த குடம் ஒன்றை தலைமீது எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். மற்றொன்று மேடையின் மீது இருந்தது. நான் திரும்பினதைப் பார்த்து அந்தக் குடத்தை சுட்டிக் காட்டி "சுவாமீ, இந்தக் குடத்தை கொஞ்சம் எடுத்துக் கொடுக்கிறீரா?" என்று வெட்கத்துடனும் கொஞ்சம் சங்கோசத்துடனும் கேட்டாள். நான் "ஒகோ, அதற்கென்ன" என்று சொல்லி, கையிலிருந்த 'கேமரா' வையும் குழலையும் கீழே வைத்துவிட்டு, அந்தக் குடத்தை எடுத்து அவள் இடுப்பில் வைத்தேன். நான் இவ்வளவு செய்ததே அவளுக்கு அபாரமாய்த் தோன்றியிருக்க வேண்டும். அவள் முகக் குறியில் ரொம்ப ஆனந்தம் புலப்பட்டது. வீட்டுக்கு செல்கிற பாதை வழியில் மெதுவாக நாலைந்து அடிகள் தூரம் போனாள். நிறைந்த குடங்களின் பாரத்தில் ஒயிலாகப் போய்க் கொண்டிருந்த அந்த நவ யௌவனம் அன்றைய மாலைப் பொழுதிய சூரியனின் பொன் கிரணங்களின் பொலிவில் வெகு வெகு மனோகரமாகத் தோன்றிற்று. உடனே என் மனதில் அவளை அந்த நிலையில் ஒரு போட்டோ பிடிக்க வேண்டுமென்று ஆசை எழுந்தது. "கேமரா"வைத் தயார் செய்து கொண்டு, பெண் என்ன நினைத்துக் கொள்வாளோ என்ற யோசனையுமின்றி "சென்னம்மா" என்று கூப்பிட்டேன். அவள் பார்த்த ஒயிலில் மெதுவாகத் திரும்பி "கூப்பிட்டீரா சுவாமீ" என்று கேட்டாள். நான் "ஊம்" என்று அவள் அருகில் சென்று "அம்மா, நீ ஒரு க்ஷணம் அப்படியே நிற்பாயா!" என்று கேட்டேன். அவளுக்குக் கொஞ்சம் ஆச்சரியம் உண்டாயிருக்க வேண்டும். முகக்குறியில் அதைத் தெரிவித்த வண்ணம், இளம் வெயிலிற்கு எதிராக ஒய்யாரமாக நின்றாள். அவள் முகத்தின் மீது இடை விடாமல் தாண்டவமாடும் புன் முறுவல், கொஞ்சத்தில் மறையப் போகும் பொன் கிரணங்களில் வெகு நன்றாகப் பொருந்தியிருந்தது. நான் போட்டோ பிடித்துவிட்டு "இனி நீ புறப்படலாம் அம்மா" என்றேன்.

அவள் உடனே குதூகலமாக "அதென்ன செய்தீர் சுவாமீ?" என்று கேட்டாள். அவள் புரிந்து

கொள்ளும்படி. சொல்வது எப்படி? "நாளைக்குச் சொல்லுகிறேன்" என்றேன். அவள் திரும்பவும் நிதானமாய் வீட்டை நோக்கி நடந்தாள்.

4

அன்றிரவு சாப்பிட்டானதும் அறையினுள் சென்று படுக்கையில் படுத்துக் கொண்டேன். என்ன சொல்லுவாளோ! எவ்வளவு சிரிப்பாளோ!' என்று எண்ணினேன். என் சிரிப்பு இன்னும் அதிகரித்தது.

பிந்திய இரவு தூங்கும்பொழுது ரொம்ப நாழிகையாகி விட்டிருந்ததென்று தோன்றுகிறது. காலையில் எழுந்தபொழுது எட்டு மணியாகி விட்டிருந்தது. நானவ்வளவு

சீக்கிரம் தூக்கம் வரவில்லை. சாயந்திரம் தோட்டத்தில் நடைபெற்ற விஷயம் இன்னும் மனதில் இருந்தது. தனக்குத்தானே சிரித்துக் கொண்டு 'லக்ஷ்மிக்கு இந்த விஷயத்தை சொன்னால் சீக்கிரம் பல் தேய்த்துக்கொண்டு பலகாரம் முடித்துக்கொண்டு மரடி மலைக்குச் செல்வதற்கு தயாரானேன். அந்த வீட்டு யஜமானர் ஒரு ஆளை ஏற்பாடு செய்து என்னுடன் அனுப்பினர். அவ

னிடம் வேண்டிய சாமான்களை சுமத்தி, புறப்பட்டேன். மரடி மலையில் அலுவல்களை முடித்துக் கொண்டு திரும்பும் வேளைக்கு சுமார் பன்னிரெண்டு மணி ஆகி விட்டிருக்கலாம். திரும்பிவரும் பொழுது ஒற்றையடிப் பாதைக்கு கொஞ்ச தூரத்தில் புல்வெளியில் மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன.

அங்கங்கே குடியானவர்கள் வயல்களில் வேலை செய்து கொண்டிருந்தனர் இருந்திருந்தாற் போல் கொஞ்ச தூரத்தில் இடையன் ஒருவன் தில்லானா பாட ஆரம்பித்து விட்டான். அவனுக்கு யாரிடம் பயம்! ஜோராக வெகு ஷோக்கில் ஆரம்பித்தான். வெகு தமாஷாக விருந்தது. கொஞ்ச நாழிகை நின்று கேட்கலாம் போல்த் தோன்றிற்று. ஆனால் கூட ஆள் இருந்தான். சிரிப்பானோ என்று சங்கோசம். அல்லாமல் முந்திய நாள் மாலைப் பொழுதின் நினைவு வந்தது. நிற்கவில்லை. அப்படியே சென்னம்மாளின் நினைவு வந்தது. அந்தப் பட்டிக்காட்டு பெண்ணின் சுபாவமான இளநகை என் கண் முன் நர்த்தனம் செய்வதுபோலாயிற்று. பளபளவென்ற நிறைந்த குடங்களைச் சுமந்து, அவைகளின் பாரத்தில் ஒயிலுடன் நின்ற அவளுடைய அந்த ஒய்யாரமான நிலை கண்ணில் பதித்த மாதிரி இருந்தது. சென்னம்மாள் வீட்டு யஜமானனின் பெண்ணாக இருக்கலாமென்று ஊகித்தேனே தவிர உண்மைச் சங்கதி தெரிந்திருக்கவில்லை. தெரிந்து கொள்ள வேண்டுமென்ற குதூகலத்துடன் ஆளிடம் கேட்டேன்.

"உங்கள் யஜமானர் வீட்டிலிருக்கும் அந்தப்பெண் யாரையா?" ஆள் நின்று, என்னைத் திரும்பிப் பார்த்த வண்ணம் "எந்தப்பெண் சுவாமீ" என்று கேட்டான். நான் எவளை உத்தேசித்துக் கேட்டேனோ அதை அவன் அறியவில்லை. நான் "அந்தச் சென்னம்மாள் என்றிருக்கிறாளே அவள்" என்றேன். ஆள் என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவன், என் கேள்விக்கு நகைத்து விட்டு, முகத்தைத் திருப்பிக் கொண்டு "என் சாமீ" என்று கேட்டான்! எனக்கு ரொம்ப அவமானம் ஆனமாதிரியாயிற்று. வெட்கமும் தோன்றியது. இந்த ஆள் என் கேள்வியில் என்னவோ கெட்ட அபிப்பிராயம் கண்டு கொண்டது போல் தோன்றுகிறதே என்று என் மனதினுள் கணப்பொழுது ரொம்பக் கலவரமடைந்தேன். லக்ஷ்மியின்றி என் உயிரே நிற்காது என்பதை இந்த முட்டாள் எப்படி அறியக் கூடும்? அவன் என்னமோ பரிகாசமாக சிரித்து, "என் சுவாமி?" என்று கேட்டு விட்டான்.

நான், "எதற்கும் இல்லையப்பா. சும்மா கேட்டேன். கேட்கப்படாதா?" என்றேன்.

"ஐயோ! அதெற்கென்ன சுவாமீ - பரவாயில்லை. அவள் எஜமானரின் பெண்" என்றான்.

இன்னொரு கேள்வி நாக்கு நுனியில் வந்துகொண்டிருந்தது; ஆனால் தடுத்தேன்! "யார்" என்று கேட்டதற்கே நகைத்தவன் இன்னும் "கலியாணம் ஆகி விட்டதா?" என்று கேட்டால் வேறென்ன நினைத்துக் கொள்வானோ என்று பயமாயிருந்தது. சும்மாவிருந்து விட்டேன்.

* * *

வீட்டிற்கு வந்ததுமே குளித்து, சாப்பிட்டு விட்டு, முந்திய நாள்

பிடித்திருந்த சென்னம்மாளின் போட்டோவின் இரண்டு மூன்று காப்பிகளை எடுத்தேன். படம் ரொம்ப நன்றாக வந்திருந்தது. வீட்டினர் எல்லாம் அதைப் பார்த்து ரொம்ப சந்தோஷப் பட்டார்கள்.

பகல் போஜனம் ரொம்ப நேரங் கழித்து சாப்பிட்டதால் இரவு பசிக்கவில்லை. இரவு சாப்பிடுவதில்லை யென்று வீட்டில் தெரிவித்துவிட்டேன். தூக்கமும் சீக்கிரம் வரும்போல் தோன்றவில்லை. என்ன செய்வதற்கும் தோன்றாமல் கொஞ்சதூரம் நடந்து விட்டு வரலாமென்று புறப்பட்டேன். அறைக்கு திரும்பி வரும்பொழுது ஒன்பதுமணி யாகிவிட்டிருந்தது. இன்னும் தூக்கம் வரவில்லை. விளக்கை ஏற்றி, படுக்கை விரித்து அதில் படுத்துக் கொண்டு ஏதோ ஒருநாவலை எடுத்துப்படிக்க வாரம்பித்தேன். சுமார் பத்து நிமிஷம் வாசித்திருப்பேன். அப்பொழுது அறைக் கதவு என்னவோ சப்தம் ஆனதுபோல் தோன்றிற்று. காற்றால் ஆயிருக்கலாம், என்றெண்ணி னவனாய் மறுபடியும் புத்தகத்தை படிக்க வாரம்பித்தேன். திரும்பவும் சப்தமாயிற்று. இந்தத்தடவை மெதுவாகத் தட்டியமாதிரி இருந்தது. படுத்த வாக்கிலேயே "யாரப்பா அது?" என்றுகேட்டேன். பதில் இல்லை. ஒருக்கணம் விட்டு மறுபடியும் யாரோ மெதுவாகத் தட்டினமாதிரி இருந்தது. எழுந்து உட்கார்ந்து "யாரது?" என்று கேட்டேன். கை வளையல்களின் சப்தம் கேட்டது! அதனுடன் கூட மெல்லிய குரலில் "நான் தான் சென்னி" என்று பதில் வந்தது! எனக்கு ஆச்சரியமுண்டாயிற்று.

இந்தப்பொழுதில் இவளுக்கு என்னிடம் என்னவேலை?... என்னவாவது இருக்கட்டுமே, விசாரித்துப் பார்க்கலாம் என்று எழுந்திருந்து கதவைத் திறந்து, வெளியே முகத்தை நீட்டி "என்னம்மா" என்று கேட்டேன். என் அறையின் வெளிச்சம் லேசாக அவள் உடலின்மீது விழுந்தது. அவள் கையிலொரு தட்டு, அதில் நாலைந்து வாழைப்பழங்கள், கொஞ்சம் சர்க்கரை, ஒரு டம்ளரில் கொஞ்சம்பால் இவ்வளவும் இருந்தது. நான் "என்னம்மா" என்று கேட்டதற்கு "சுவாமி, தாங்கள் இப்போது சாப்பிடவில்லை, அதுதான் இதைக்கொண்டு வந்தேன்" என்றாள். எனக்கு அப்பொழுது லேசாக பசி தோன்ற வாரம்பித்தது. "ரொம்ப சந்தோஷடம்மா" என்று சொல்லி அவள் கையிலிருந்து அந்தத் தட்டத்தை வாங்கிக் கொண்டு படுக்கையருகில் வைக்கப் போனேன். சென்னம்மாள் என் பின்னாலேயே அறையினுள் வந்தாள்! என் இதயம் கொஞ்சம் பதரிற்று!

நான் தட்டத்தை படுக்கையின் அருகில் வைத்துவிட்டு, திரும்பி "எனக்கு வேறொன்றும் வேண்டாமம்மா, நீ இனி போகலாம்" என்றேன். அவள் சிரித்துக் கொண்டே "நான் இருந்தால் என்ன சுவாமி, தாங்கள் சாப்பிடப்படாதா?" என்று கேட்டாள். நான் "ஓகோ, சாப்பிடலாம்; அதற்கில்லை நான் சொன்னது. ஆனல் இப்பொழுது எனக்கு வேறொன்றும் வேண்டாம்; மேலும் இந்த வேளையில் நீ தனியாக இங்கே இருப்பது..." நான் பேசி முடிப்பதற்குள் அவள் என் அறைக்கதவை மூடி தாழிட்டு விட்டாள். அவள் என் அறையில் வந்ததுமே என் மனதில் அறை குறையாக உதித்

திருந்த ஏதோ ஒரு எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாக உறுதி பெறவாரம்பித்தது. அவள் கதவைச் சாத்தினதைப் பார்த்து என் உடம்பில் நடுக்கம் எடுத்து சூடேறிற்று; முகம் முழுவதும் வேர்வை துளிர்த்தது. தொண்டை வரண்டு போகவே எச்சிலை விழுங்க ஆரம்பித்தேன். சிரமத்துடன் "ஏனம்மா, க... கதவை சாத்தினாய்?" என்று கேட்டுக்கொண்டே, திறப்பதற்காக இரண்டடி முன் வைத்தேன். சென்னம்மாள் சரக்கென்று நகர்ந்து கதவிற்கு தடங்கலாக நின்று புன் முறுவல் பூத்தாள்! சரி! சந்தேகமொன்றுமில்லை? அவள் எண்ணத்தை என் இதயத்தின் மீது அழுத்தி வரைந்த மாதிரியாயிற்று. இவளா பட்டிக்காட்டு, கள்ளங் கபடற்ற யுவதி!" — என்று என் மனதிற்குள்ளேயே எண்ணிக் கொண்டேன்.

எனக்கு ஊன்றி நிற்பதற்குக் காலே இல்லை போல் தோன்றிற்று. படுக்கை மீது போய் அமர்ந்து, இரண்டு கைகளிலும் தலையை அமுக்கிக் கொண்டு யோசிக்க ஆரம்பித்தேன்.

அன்றிரவு என்னைப்பாவம் என்ற மலையினின்றும் மீட்டவள் என் லக்ஷ்மி. அவளுடைய அன்பென்னும் கோட்டை என்னைக் காத்தது. நானும் அவளும் ஒன்றுபட்டதிலிருந்து இது வரைக்கும், நான் அவளிடத்தில் காணாததை வேறெங்கும் காண மாட்டேன். — என்னும்படி செய்து விட்டாள். அழகிலாகட்டும், குணத்திலாகட்டும், அன்பிலாகட்டும், நான் அவள் மீது வைத்த பார்வையை வேறு பக்கம் திருப்ப வேண்டிய அவசியமிருக்கவில்லை. லக்ஷ்மி என் பங்கிற்கு இல்லாமலிருந்து அன்றிரவு பாதுகாப்பின்றி இருந்த என் உள்ளம் அந்தப் பட்டிக்

காட்டு பெண்ணின் பால் சென்றிருந்தால் அதில் ஆச்சரியமொன்றும் இல்லையென்று இப்பொழுதுங் கூட எனக்கு தோன்றுகிறது. இந்த விஷயம் நடந்த பொழுது எனக்கு வாலிபப் பருவத்தின் துவக்கம். நல்ல கட்டு முட்டாக விருந்தேன். என் அழகைப் பற்றி நான் சொல்லிக் கொள்வது நன்றுயில்லை. ஆனாலும் நான் குரூபியல்லவென்று கண்டிப்பாய்ச் சொல்வேன். விஷயத்தை நன்ருக அறிய வேண்டுமென்றால் இங்கே சென்னம்மாளைப் பற்றியும் வர்ணிக்க வேண்டும். அவளுக்கு இருபது வயதுக்கு மேல் இராது. அதிக உயரமும் இல்லாத அதிக குட்டையும் இல்லாத வடிவம். மாநிறம். முகச் சாயல் லக்ஷணமாக விருக்கிற தென்றே சொல்ல வேண்டும். நவ யௌவனத்தால் பொலிவுற்ற எடுப்பான உடம்பு. அவள் உதடுகளின் மீது நான் பார்த்த பொழுதெல்லாம் இள நகை ததும்பி விளையாடிக் கொண்டிருந்தது. கண்களில் இன்னும் விளையாட்டுத் தனமான இள மின்னலின் சாயை மின்னியது. உள்ளத்தைக் கவரக் கூடிய சகலமான சாதகங்களும் அவளிடமிருந்தனவென்று ஒரே வார்த்தையில் சொல்லி விடலாம்.

இவள் அறியாத பெண் அல்ல! அதை அவளே காண்பித்துகொண்டிருக்கிருள்! தெரிந்து தெரிந்தே இத்தகைய காரியத்தில் ஈடுபட்டிருக்கிருளே! இதென்ன பைத்தியம் இதுவும் ஒருவித பைத்தியம் தான்! வீட்டுக்காரருக்குத் தெரிந்தால் என்ன கதி! நான் பெரிய மனிதனைப்போல் இவர்கள் அகத்தில் அதிதியாகவிருப்பது இப்பொழுது இந்த பாதி ராத்திரியில் இவளும் நானும் ஒரு மிக்க அறையில்...... மரியாதை நிற்கும் வழி காணும். வந்த வகையோ, திருட்டுத்தனமாக வந்திருக்கிருள்! இவளுக்குக் கலியாணம் ஆகவில்லையா? எனக்கு ரொம்ப அருவருப்பு தட்டிற்று. இப்பொழுது ஒன்றொன்ருக எனக்கு அவளுடைய பிந்திய நாள் மாலைப் பொழுதின் நடவடிக்கைகள் எல்லாம் புரிய வாரம்பித்தது. அவள் அந்த வேளையில் என் பின்னால் தோட்டத்திற்கேன் வர வேண்டும்? .... தண்ணீர்க் குடம் வெறும் சாக்கு ...... தண்ணீர் குடத்தை என் கையால் ஏன் எடுக்க வைத்து கொண்டாள்? ...... கிடக்கு; நான் தண்ணீர் குடத்தை எடுத்துக் கொடுத்த பொழுது, அதை வளைத்து கைவைத்துப் பிடித்துக்கொள்ளும் பொழுது என் கைக்கு அவள் கை பட வைத்தாள். அப்பொழுது அது என்னவோ கைதவறிப் பட்டதென்று தோன்றிற்று. இன்னொரு விஷயம். அவள் முதலில் குடத்தை எடுப்பதற்குக் குனிந்த பொழுது அவளுடைய தலைப்பு சரிந்தது. நான் அவளை இந்த நிலையில் பார்க்கையில் அவளிடம் வெட்கக்குறி தென்படவேஇல்லை. குடத்தை தலை மீது வைத்துக் கொண்டு நிதானமாகவே தலைப்பை மேலே இழுத்துப் போர்த்திக் கொண்டாள். இவைகளையெல்லாம் அப்பொழுது நான் இவளது கள்ளங் கபடு அற்றமனதை காண்கிறது என்று எண்ணியிருந்தேனே தவிர என் மீது இவள் வீசும் வலையின் ஒவ்வொரு இழை என்று அறியாமல் போனேன்."

இவ்வித சிந்தனைகளால் அல்லோல கல்லோலமாகி இருந்த என் மனதைக் கூடுமான அளவு திடப்படுத்திக் கொண்டு, இந்த இக்கட்டிலிருந்து எவ்விதம் தப்பித்துக் கொள்வதென்று யோசிக்க வாரம்பித்தேன். கோபத்தைக் காண்பிப்

பதால் காரியம் கைகூடாது; பிரமாதமாகி விடுமோ வென்று பயந்தேன். வேறெதாவது உபாயத்தினால் இவளை மெதுவாக வெளியே கிடத்த வேண்டுமென்று யோசித்தேன். ஆனால் என்ன உபாயம் செய்வது? எவ்விதம் பேச்சுத் துவக்குவது? இல்லாவிட்டால் சும்மா போர்வையை இழுத்து போர்த்திக்கொண்டு படுத்துக் கொண்டு விடட்டுமா? என்று யோசித்தேன். அது முடியாத வேலை.

இவள் இங்கே இருக்கும்வரையில் என்மார்பின் மீது பெரிய பாறுங்கல் ஒன்றை வைத்திருப்பதுபோல்தான். இன்னொரு யோசனை தோன்றிற்று. அதுதான் சரி என்று நினைத்தேன். என்னவாவது செய்து, அவள் செய்து கொண்டிருக்கும் வேலை ரொம்ப கெட்டது-ரொம்ப இழிவானது-ரொம்ப பாவகரமானது என்று அவள் மனதில் நன்றாக பதியும்படி பேசி, உபாயமாக அனுப்பி விடவேண்டுமென்று தோன்றிற்று. கடவுள், பட்டின வாசியான எனக்கு இந்தப் பட்டிகாட்டு பெண்ணிற்கு பதிவிரதா தர்மத்தைப் பற்றி ஒரு உபன்னியாசம் செய்யும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி யதற்காக எனக்கே சிரிப்பு வந்தது. அப்படியே தலை நிமிர்ந்து சென்னம்மாளை நோக்கினேன். சென்னம்மாள் இன்னும் கதவில் சாய்ந்தவண்ணம் நின்றிருந்தாள். என் முகத்தில் சிரிப்பை கண்டு தானும் சிரித்தாள். மெதுவாக ''சென்னம்மா'' என்று அழைத்தேன். சென்னம்மாள் ''என்ன சுவாமி'' என்று இரண்டு, மூன்று அடி முன்னால் வந்து எனக்குக் கொஞ்சம் தொலைவில் நின்றாள். நான் ''உட்கார்'' என்றேன். அவள் என் படுக்கைமீதே உட்கார்ந்து விட்டாள்! நான் கொஞ்சம் நகர்ந்து, இரண்டொரு தடவை எச்சில் விழுங்கி, மறுபடியும் ''சென்னம்மா'' என்றேன்.

''என்ன சுவாமி?'' என்று மெதுவாகக் கேட்டாள்.

''சென்னம்மா, பார்! இப்படி செய்யலாமா நீ?''

''எப்படி சுவாமி?''

''இப்படி – பாதிராத்திரியில் திருட்டுத்தனமாக வந்து......''

நான் பேசி முடிக்கவில்லை. அதற்குள்ளாகவே அவள்—நான் ''திருட்டுத்தனமாக வரவில்லை! என் கடவுளே!''

''அப்படியானால்?''

அவள்வாயில் வார்த்தை கிளம்பவில்லை. நான் சொன்னேன்:

''பார், உன் வீட்டாருக்கு தெரிந்தால் உனக்கும் மரியாதை கிடைக்காது, எனக்கும் கிடைக்காது.''

''அவர்கள் ஒண்ணும் சொல்ல மாட்டார்கள் கடவுளே.''

எனக்கு இன்னும் ஆச்சரியமாயிற்று!

''அவர்கள் ஒண்ணும் சொல்ல மாட்டார்கள்'' என்றாள்.

''பார், அவர்கள் சொல்லட்டும், சொல்லாமல் போகட்டும் – இது நான் விரும்பாத வேலை. சென்னம்மா, எனக்கு கலியாணம் ஆகி இருக்கு; நான் இன்னொருவர் மனைவியை கெடு......''

''ஐய்யோ! சுவாமி இப்படியேன் சொல்கிறீர் எனக்குக் கலியாணமாகவில்லை. நான் தாசி''

"என்ன? என்ன? என்ன சொன்னாய்?"

"என்னை கோவிலுக்கு பொட்டு கட்டி விட்டிருக்கிறார்கள் சுவாமி"

"தாசி, தாசி, அப்படி என்றால்?"

"சுவாமிக்கு விட்டிருக்கிறார்கள்."

நான் எங்கேயும் பார்த்ததில்லை. சுவாமிக்கு விடுவது முதலிய வற்றை கேள்வி பட்டிருந்தேன், அவ்வளவு தான். ஆனால் அதன் பொருள் தெரிந்திருக்கவில்லை. எனக்கு முதலில் ஏற்பட்டிருந்த பயம்போய் குதூகலம் அதிகரித்தது. விஷயம் சுவாரஸ்யமாக விருக்கிறது – தெரிந்துக் கொள்ள வேண்டுமென்று—

"சுவாமிக்கு விட்டிருக்காளா? யார்?" என்றேன்.

"எங்கப்பாவும் அம்மாவும்"

"அதேன் விட்டார்கள்?"

"சுவாமி, எட்டுவருஷத்திற்கு முன்னால் எனக்கு ரொம்ப சீக்காயிருந்தது. அப்போ எங்கப்பாவும் அம்மாவும் மரடி சுவாமிக்கு வேண்டிக் கொண்டார்கள். எனக்கு குணமானால் அந்த கடவுளின் பெயரில் என்னை பொட்டுகட்டி விடுகிறேன் என்று எனக்கு குணமுண்டாயிற்று."

"அப்படியானால் நீ கலியாணமே செய்துக் கொள்ளப் போவதில்லை"!

"இல்லே சுவாமி."

"இப்படியே இருக்கப் போகிறாயா?"

"ஆமாம்' என் சுவாமி"

"தேவடியாள் மாதிரி"

என்னுடைய இந்த பேச்சை செவியுற்று அவள் இதயத்தில் கத்தி பாய்ந்த மாதிரி ஆகி இருக்க வேண்டும். கணப்பொழுதில் அவள் புருவங்கள் சுருங்கின. மூக் கோட்டைகளும், உதடுகளும் துடிக்க ஆரம்பித்தன. கோபம் கொண்ட பெண்ணின் முகத்தில் ஒருவித பயங்கரம் தோன்றும். அவள் முகம் அந்த பயங்கரத்தில் மிதந்து கொண்டிருப்பது போல் தோன்றிற்று.

"சுவாமி, தாங்கள் அந்தவார்த்தை சொல்லப்படாது!" என்றாள்.

அவளிடம் ஏற்பட்ட மாறுபாட்டை கண்டு எனக்கு என்னமோ பிரமை தட்டிற்று. கொஞ்சம் எச்சில் விழுங்கிக்கொண்டு "எந்த வார்த்தை?" என்று கேட்டேன்.

"நாங்கள் தேவடியாள் இல்லே– தெரிந்து கொள்ளுங்கள்!"

எனக்கு இன்னும் ஆச்சரியமாயிற்று! கலியாணமில்லே! நடத்தையைப் பார்த்தால் விபரீதம்!! ஆனாலும் "தேவடியாள் இல்லே!" எனக்கும் கொஞ்சம் கோபம் உண்டாயிற்று.

"இல்லா விட்டால் வேறென்ன? நீ எல்லோரையும் போல் கலியாணம் செய்துக்கொண்டு குடும்பப் பெண்ணாக இருப்பதை விட்டு, இப்படி இந்த பாதிராத்திரியில் மேலே விழுந்து வந்து......"

"சுவாமி, உங்களுக்கு இன்னும் புரியவில்லையா? தாசிகள் கலியாணம் செய்து கொள்ளக்கூடாது என் சுவாமி."

"ஏன் கூடாது?"

"வேண்டுதலே செலுத்த வேண்டுமே சுவாமி! இல்லாவிடில் கேடு இல்லையா?"

"கலியாணம் செய்து கொண்டால் வேண்டுதலைச் செலுத்த யாதா?"

"முடியாது, என் சுவாமி; ஒருவனை கலியாணம் செய்துகொண்டு விட்டால் உங்களைப் போன்றவர்களுக்குக்சேவை எப்படிச்செய்ய முடியும் சுவாமி!

"சரி, மற்றவர்களுக்குச் சேவை என் செய்ய வேண்டும்?"

"பின்னே! சுவாமியின் வேண்டுதலையை செலுத்த வேண்டாமா?"

"இப்படித்தான் செலுத்துவதா? கடவுள் பெயரில் தேவடியாள் வேலை செய்துகொண்டு..."

திடுக்கென்று அவள் திரும்பவும் புருவத்தைச் சுளித்துக் கொண்டு — "சுவாமி அந்தப் பேச்சை என்னிடம் சொல்லாதேயுங்கள்!" என்ருள்.

"பார், நான் உன் புருஷன் இல்லை; நீ இந்த வேளையில் என்னிடம் வந்திருக்கிருயே – இது யார் செய்கிற வேலை? "தேவடியாள்" இல்லை என்று மாத்திரம் சொல்லுகிருயே!"

"நாங்கள் தேவடியா மார்கள் இல்லை சுவாமி, நாங்கள் தேவடியா மார்கள் இல்லை! தேவடியா மார்களுக்கு பணத்தாசை, என்சுவாமி அவர்கள் மனிதர்களைப் பார்ப்பதில்லை. அவர்களுக்கு வேண்டுதலை கிண்டுதலை ஒன்றும் இல்லை; அந்தத் தொழில்தான் அவர்கள் பிழைப்பு."

"நீங்கள்?"

"சுவாமி, நாங்கள் பணம் கிணம் தொடுவதில்லை, சில்லரை மனிதர்கள் அருகில் சேர்வதில்லை. தங்களைப் போன்ற உத்தமர்கள் யாராவது வந்தால் அவர்கள் சேவை செய்து வேண்டுதலை செலுத்துகிருேம். எங்களைத் தேவடியாமார் என்று எண்ணுதீர்கள் என் கடவுளே."

"அப்படியானல் இந்த உன் "சேவை"யை உன் பெற்ருேர்கள் அறிவார்களா?"

"இல்லையா சுவாமி! வேண்டிக் கொண்டவர்கள் அவர்கள், அவர்களுக்குத்தெரியாமல் இருக்குமா"

"சரி, அவர்கள் என்னமோ அனுப்பித்தார்கள். ஆனல் நான் இதற்கு இசைவேனே – மாட்டேனே என்பது அவர்களுக்கென்ன தெரியும்? எந்த தைரியத்தின்மேல் உன்னை என்னிடம் அனுப்பினர்கள்?"

இந்தக் கேள்விக்கு உடனே பதில் வரவில்லை. புன்முறுவலுடன் கழுத்தை ஒருபுறம் சாய்த்து கடைகண்ணல் பார்த்தவண்ணம் —

"நீங்கள் – கேட்டீர்களாம் — எங்கள் ஆளை – நான்யார் – என்ன என்றெல்லாம்!" என்று கொஞ்சம் வெட்கத்துடன் பகர்ந்தாள்.

இப்பொழுதுதான் புரிந்து கொண்டேன்! ஆளைக் கேட்டபொழுது அவன் பரிகாசமாகச் சிரித்துக்கொண்டு "என் சுவாமீ" என் ஙூ கேட்டது! "ஐயோ! பகவானே" என்று எண்ணிக் கொண்டேன்.

"ஆமாம், சென்னம்மா, கேட்டேன். சும்மா தெரிந்து கொள்வோம் என்று கேட்டேன். அவ்வளவுதான், சென்னம்மா. என் லக்ஷ்மியின் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன், வேறெத்தகைய ஆசையுமில்லை."

"ஐயோ! கிடக்கு என்சாமி; இப்போ என்னவாயிற்று. இதற்கெல்லாம் நீங்கள் ஆணை இட வேண்டாம்!"

"அப்படி இல்லை சென்னம்மா, கேள், போன உயிர் திரும்பி வருமா?"

சென்னம்மா சும்மா இருந்தாள்.

"சொல்."

"இல்லை என் சுவாமீ."

"அப்படியானால்சொல் பெண்ணுக்கு மானம்தான் உயிர். மானத்தைப் போக்கிக் கொண்டவள் நாய்க்கும் கேடு. உங்களுக்கு இருப்பதே மானம்; நீங்கள் அதை இப்படி விற்று கொள்ளப்படாது. மானத்தைப் போக்கிக் கொண்ட பெண்ணுக்கு நரகத்திலும் இடம் கிடையாது என்று பெரியோர் சொல்லுகிறார்கள்."

"சுவாமீ, நீங்கள் சொல்வது கலியாணமாகி புருஷன் இருப்பவர்களுக்குதான் சரி, என் சுவாமீ. அவர்கள் நம்மைபோல் இருந்தால் அவர்களை ஜாதியிலிருந்தும் வெளியே தள்ளி விடுவார்கள். எங்களுக்கு அப்படி இல்லை கடவுளே; எங்களை சுவாமிக்கு விட்டிருக்கிறார்கள். எங்களுக்கு உங்களைப் போன்ற உத்தமர்களின் சேவைதான்......"

"ஐயோ, சென்னம்மா. உனக்குத் தெரியாது, கேள், சுவாமியின் பெயரில் பெண்கள் மானத்தைப் போக்கிக் கொண்டால் அவருக்குப் பிரியமா? சுவாமிக்கு வேண்டுதலை செலுத்த வேண்டுமானால் அந்த சுவாமிக்கு சேவை செய். யார் வேண்டாமென்கிறார்கள். அதை விட்டு, இப்படி மானத்தை விற்பார்களா?"

"சுவாமி, தங்களைப்போன்ற உத்தமர்களே எங்களுக்குக் கடவுள் என் சுவாமீ, உங்களை சேவித்தால் அதே எங்கள் புண்ணியம்."

அவள் சொற்களைச் செவியுற்று என் உள்ளத்திலிருந்தும் "ஐயோ கடவுளே! உன் பெயரில் உன்னை மெச்ச வைப்பதற்காக எவ்வளவு அநியாயம் — எவ்வளவு கூளம் நடக்கிறது!" என்னும் உணர்ச்சி எழும்பிற்று. கொஞ்ச நேரம் ஒன்றும் பேசாமல் யோசிக்க வாரம்பித்தேன்.

யோசனைகளினால் என் இதயம் விண்டு விட்டதுபோல் நீண்டதொரு பெருமூச்சு விட்டேன். சென்னம்மாள் சும்மா தலைப்பு நுனியைத் திரித்துக் கொண்டிருந்தாள். நான் பெருமூச்சு விட்டதைக்கேட்டு என்னை நோக்கினாள். அவள் முகத்தில் அப்பவே ஏதோ கலக்கம் புலப்பட்டது. இத்தனை நாளிற்கு எங்கேயாவது கலியாணமாகி நாலு பெயரைப் போல் தானும் சுகமாகக் குடித்தனம் செய்து கொண்டிருப்பதை விட்டு, இந்த உத்தமி அவர்களுடைய ஏதோ ஒரு இழிவான வழக்கத்திற்குப் பலியாகி இருக்கிறாளே — என்னும் ஏதோ ஒரு தடுக்க முடியாத சங்கடத்தினால் என் கண்களில் நீர் ததும்பிற்று.

"சென்னம்மா, கடவுள்தான் உன்னைக்காப்பாற்ற வேண்டும்." என்று சொல்லிக் கண் துடைத்துக் கொண்டேன். சென்னம்மாவிற்கு என் கண்ணீரைக் கண்டு கொஞ்சம் திகிலுண்டாயிற்று. என் சமீபம் நகர்ந்து வந்தாள். அவள் அப்படி அருகில் நகர்ந்து வந்தபொழுது எனக்கு அருவருப்பான மனது வரவில்லை. அவள் மனப்பூர்வமாக பாபியாகி யிருக்கவில்லை. அஞ்ஞானத்தின் பாபத்திற்கு அவள் உடல் மாத்திரம் உடந்தையாகவிருந்தது. தாமரை இலையின் நடுவில் ஒன்றுகூடி

நின்று வைரம்போல் பிரகாசிக்கும் நிர்மலமான நீர்த்துளிபோல் அவள் ஆத்மா பரிசுத்தமாக விருந்தது. அவளுடைய பால்போன்ற உள்ளத்தைக் கண்டு எனக்கு ரொம்பக் கனிவு உண்டாயிற்று. அவளைப் பார்க்கையில், அவளைப் பற்றி சிந்திக்கையில் என் வற்றின கண்களில திரும்பவும் கண்ணீர் சுரந்தது. என் கண்ணீரால் அவளுடைய களங்கமடைந்த உடலை குளிப்பாட்டலாம்போல் ஆயிற்று என் உடலும் ஆவியும் அவள்பால் அத்யந்த ஸ்நேக மயமாயிற்று. மெல்ல அவள் கையைப் பிடித்து கொண்டேன். என் உடல் கொஞ்சம் நடுங்கிற்று. கையை விடாமல், அவளுடைய விரல்களைத் தடவிக் கொண்டே "சென்னம்மா" என்று மெதுவாக அழைத்தேன். என் நட்பும், என் கனிவும் அவளுடைய ஆத்மாவைத் தொட்டது போலும். நான் கையைப்பற்றி அவள் பெயரைச் சொன்னதுமே அவள் இன்னும் அருகில் நகர்ந்து தலை குனிந்து ரொம்ப மென்மையாக "என்ன, என் கடவுளே" என்று கேட்டாள். அவள் முகத்தில் ஏதோ ஒருமாதிரியான சிந்தனையோ, கலவரமோ தோன்றிற்று நான் அவள் முகத்தையே பார்த்த வண்ணம் — "பார் சென்னம்மா, நான் உன் கடவுள் என்று நீ சொல்ல வில்லையா?"

"ஆமாம், என் சுவாமீ, நீங்கள் தான் என் கடவுள்."

"ஆனால் நான் சொல்வதுபோல் நீ கேட்கவேண்டுமல்லவா?"

"உங்கள் அடிமையாகவிருக்கிறேன், சொல்லுங்கள் என் கடவுளே"

"நீ இனிமேல் இந்தப் பாபச் செயலைச் செய்யக்கூடாது தெரியுமா?"

"பின்னே — வேண்டுதலை? — கடவுளுக்கு?"

"ஐயோ அந்த வேண்டுதலை பாழாப்போக. பார், இன்றைக்கு நான் உன் கடவுள் என்றாய் இதற்குமுன் நீ வேறு யாருடைய சேவையும் செய்யவில்லையா?"

சென்னம்மா பேசவில்லை. தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

"பார், இதற்குமுன் நீ வேறு யார் யாருடைய சேவையோ செய்திருக்கிறாய், இன்றைக்கு என்னைக் கடவுள் என்று சொல்லிக்கொண்டு சேவிக்க வந்திருக்கிறாய். ஒருவர் தின்ற எச்சிலை இன்னொருவருக்குக் கொடுக்கலாமா? கடவுளுக்கு இந்த எச்சில் வேண்டுதலையா? சென்னா, உனக்கு தெரியாது — இது ரொம்பவும் பாபச் செயல் — என்று தெரிந்திருந்தால் என்றைக்கும் நீ இந்த பாபச் செயலைச் செய்திருக்க மாட்டாய். கொஞ்சம் யோசித்துப்பார்-உனக்கும் தேவடியாளுக்கும் என்ன வேற்றுமை? அவளுக்கு அது பிழைப்பு, உனக்கு பிழைப்பிற்கு குறைவில்லை. ஆனால் பாபம் என்னவோ ஒன்றுதான்! கடவுள் இந்தப் பாபத்தை என்றைக்கும் ஒப்பமாட்டார்!"

சென்னம்மாள் மௌனமாக எல்லாவற்றையும் கேட்டாள். முதலில் ஏற்பட்ட கலவரக் குறிகள் அவள் முகத்தினின்றும் மறைந்தன. கொஞ்சம் கொஞ்சமாக முகம் வாட்ட முற்றது. உடல் நடுங்கிற்று. பார்வை நிலத்தில் விழுந்தது. மெதுவாக அவள் கையைக் குலுக்கி "சென்னா" என்று அழைத்தேன். தலைநிமிர்ந்து என்னை நோக்கினாள். அவள் பார்வை வழி தப்பி அலைந்து கொண்டிருக்கும் குழந்தையின் சாதாரணத் தன்மையின் சாயை

படிந்திருந்தது. என் வார்த்தை உண்மை என்று அவள் எண்ணி யிருக்க வேண்டும்.

"சென்னா, நான் சொன்னது சரியில்லையா?" என்று கேட்டேன்

சென்னம்மாள் வாய் திறக்கவில்லை. தலையை மறுபடியும் கவிழ்த்துக் கொண்டாள். நான் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே இரண்டு சொட்டுக் கண்ணீர் அவள் கன்னங்களின் மீது உருண்டோடின. அதுதான் அவள் எனக்கு அளித்த மௌன பதில். அவளுடைய பரிசுத்தமான ஆத்மாவை சூழ்ந்திருந்த அஞ்ஞானத் திரையை பிய்த்தெரியும் வேலை என் பங்கில் இருந்தது! ஏதோ ஒரு இடத்திற்கு போய்ச் சேர வேண்டுமென்று ஒருவழியைப் பிடித்து, அதில் நடந்துகொண்டே நடக்க நடக்க அந்த இடம் சமீபிக்கிற தென்று நம்பி வெகு தூரம் நடந்து சென்றபிறகு, யாராவது வழியில் அகப்பட்டு, நாம் போகும் இடத்திற்கு அது வழியில்லை யென்றும் அந்த வழியில் போனால் நாம் போய்ச்சேர வேண்டிய இடத்திற்கு தூரம் அதிகம் என்று சொன்னால் எப்படி இருக்கும்! நான் என் சொற்களால் சென்னம்மாளின் இதயத்தில் ஏறக்குறைய அதே விதமான எண்ணத்தை உண்டு பண்ணி இருந்தேன்.

சென்னம்மாள் ரொம்ப அழுதாள். நான் அவளைச் சமாதானம் செய்தவாறு...... "பார் சென்னா, உன்னைக்கண்டால் எனக்கு கோபமாவது, அருவருப்பாவது இல்லை. "சரி, உனக்கு என் மீது கோபமேதாவது........"

"இல்லை, என் சுவாமி"

பிறகு ரொம்பப் புண்பட்ட குரலில் சென்னம்மா சொன்னாள்:

"ஐயோ! என் கடவுளே! அப்படி சொல்லாதேயுங்கள்! உங்கள் காலின் கீழ் விழுந்து புரள வேண்டுமென்கிறது என் உயிர்!" என்று சொல்லி என் காலைப்பற்றி தன் நெற்றியால் அதைத் தொட விழுந்தாள். நான் அவ்வளவிற்கு விடாமல் அவளை எழுப்பி "ஆனால் சரி, எங்கே. என் மார்பின் மீது கை வைத்து ஆணை இடு— "இனி மேல் இந்த வேலையை விட்டொழிக்கிறேன்...என்று" என்றேன்!.

சென்னம்மாள் என் மார்பின் மீது கை வைத்தாள். அவளுடைய கபடற்ற புண்பட்ட பார்வை — புண்பட்ட குரலில் நடுங்கிய வண்ணம் மெதுவாகச் சொன்னாள்.

"கடவுளே — இனிமேல் — இந்த — காரியம் செய்வதில்லை."

என் மார்பின் மீதிருந்தும் ஏதோ பாரத்தை இறக்கி வைத்தது போல் நீண்டதொரு பெருமூச்சு விட்டேன். இரவு வெகு நேரம் தூக்கம் வந்த பாடில்லை. மனதினுள் அமைதி நிலவத் தொடங்கிற்று. சென்னம்மாள் ஒரு கொட்டாவி விட்டாள்.

நானும் அதே சாக்கில் "சென்னா இனி நீ போய்ப் படுத்துக்கொள்" என்று சொல்லி, எழுந்தேன். அவளும் எழுந்தாள். கதவு வரைக்கும் அவளுடன் போய், அவள் கையை பற்றி என் புரம் திருப்பிக் கொண்டு ... "சென்னா, சென்னா, சுவாமியின் ஆணை. எனக்கு உன் மீது கோபமில்லை — எங்கே —" என்று என் இரண்டு கைகளிலும் அவள் முகத்தைத் தாங்கி, நெற்றியின் மீது ஒரு முத்தம் தந்தேன். சென்னம்மாள் சென்று விட்டாள்.

திடீரென விழிப்புண்டாயிற்று! பார்த்தால் கரியப்பாஅவர்கள் அவர்தான் — கூப்பிட்டு எழுப்பினார். அவர் உள்ளே எப்படி வந்தாரோ தெரியாது. ஒருக்கால் இரவு கதவிற்குத் தாழ்ப்பாள் போட மறந்து விட்டேனே, என்று எண்ணிக்கொண்டேன்.

“என் எஜமானரே?” என்று கண்ணைக் கசக்கிக் கொண்டு எழுந்தேன்.

“ஐயோ! என்ன சொல்லட்டும் சுவாமீ! என் செல்வம்! என் சென்னா!” என்று பேசி முடிக்காமல் கீழே விழுந்து புரள ஆரம்பித்தார். ஏதோ ஒரு பொருள் படாத பயத்தால் என் இதயம் வெடித்து இரத்தம் பீறுவதுபோல ஆயிற்று. அந்தச் சமயம் வேறொருவர் வந்து “சுவாமீ, சென்னம்மா தோட்டத்து கிணற்றில் விழுந்து......”

அவர் பேசி முடிக்கும் வரையில் என் உயிர் நிலையிலில்லை. படுக்கையிலிருந்து குதித்து, பைத்தியகாரனைப்போல் தோட்டத்துக் கிணற்றை நோக்கி ஓடலானேன்! கிணற்றண்டை பத்து — பன்னிரண்டு பெயர் கூட்டம்கூடி நிற்பது புலப்பட்டது. இன்னும் உயிர் இருக்குமோ என்னமோ என்ற அசட்டு ஆசை! ஐயோ! அசட்டு ஆசைதான்! இரவே அவள்போய் விழுந்திருக்க வேண்டும். இதுவரையிலும் உயிர் நிற்குமா! — என்ற நிராசை! அருகில் போய் நின்றேன். எல்லோரும் வழி விட்டனர். பார்த்தேன்! ஐயோ பகவானே! அத்தகைய காட்சியை அதுவரை பார்த்ததில்லை! இதயத்தின் இரத்தம் கண்களில் பீறிக்கொண்டு வந்தது போலாயிற்று. கண்களில் இருள் சூழ்ந்தது!

நானே அவளைக் கொன்ற மாதிரியாயிற்று! கடவுளின் எதிரில் இதற்கு ஒரு நாள் பதில் சொல்ல வேண்டும். நான் என்ன சொல்வேன்?

சிந்தனைக்கொரு தங்கு தடையே இல்லை. கிராமத்தை விட்டுப் புறப்பட்டு விட்டேன். புறப்படுமுன் சென்னம்மாளின் போட்டோவை அவர்களிடம் கொடுத்து வந்தேன். நாளைக்கு ஊர் போய்ச் சேருகிறேன். இந்தக் கதையை அப்படியே சொன்னால் என் லக்ஷ்மி என்ன நினைப்பாளோ!



அன்பு மலர்

கு.ப. சேது அம்மாள்

அஸ்தமித்து ஒரு சாமப் பொழுதாகியும்கூட இன்னுமேன் புருஷன் வரவில்லை என்ற யோசனையுடன் தெருக்கதவைத் திறந்து கொண்டு சங்கமாலை வெளியே வந்தாள்.

வெளித்திண்ணையின் மீது படிந்த நிலவு வெளிச்சத்தில் முழங்கால்களைக் கட்டியபடி ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்த தன் கணவனைக் கண்டதும் சங்கமாலைக்கு தூக்கி வாரிப்போட்டது!

"அடபாவத்தெ! தெருக்கதவைத் தட்டப்படாது? இங்கிட்டு எங் குந்தி இருக்கணும்? இத்தினி நாழியாச்சேன்னு நானல்ல கதவைத் தெறந்துகிட்டு வாறேன்! நல்லாருக்கு பொளப்பு. என்ன அப்புடி ரோசனெ கோட்டையெப்புடிக்க!"

"கோட்டையும் வாணம்; கொத்தளமும் வாணம்; இந்த சேவுகமும் வாணம்போ, அடடா, என்ன செம்மம் எடுத்தோம் வெட்டிக்கி........"

"வேதாந்தம் எங்கிருந்து படிச்சிக்கிட்டு வந்திய புதுசா! வாங்க எந்திரிச்சி உள்ளாற, கொடலையெல்லாம் எங்கே, எடுத்தாறல்லியா?"

"இல்லெ."

"இல்லென்ன, நாளைக்கி பூவை மடிலெயா கட்டிக்கிட்டுப் போறது? இல்லீங்கிறீங்களே என்ன புத்தி!"

சரவணன் கவலையற்ற சிரிப்பொன்று சிரித்து விட்டு, "நாளெக்கி பூப்பறிக்கிற வேலெ நமக்கில்லெ!" என்றான்.

"ஐயோ தெய்வமே, திங்கற சோத்துலெ மண்ணைப் போட்டுட்டையா? என்ன ஆச்சு? நேரங்களிச்சு போனதுக்காவ வாணும்னுட்டான அந்த ராசா?" என்று பதறினாள் சங்கமாலை.

"நா அரமனைக்கே போவல்லெ இன்னிமே........"

"போகல்லியா, பின்னே எங்கே பூவெல்லாம்? என்ன பண்ணினே?"

"ஒண்ணும் பண்ணல்லெ, மாந்தோப்பு சாமியாருகிட்ட வச்சு தெண்டம் பண்ணிட்டு வந்தேன் பிறவிக்கவலை தீக்கற புண்ணியவான் அவரு......"

"கெட்டுதே குடி! பாவி பெத்த மவனே, சோறு மட்டும் மண்ணு வல்லியே, உசுருக்கே உலைவச்சிட்டையே, நான் என்னபண்ணுவேன் புள்ளை குட்டியெ வச்சுக்கிட்டு?"

"பிறப்பிச்சவன் போடறான், என் நீ முட்டிக்கறே, போ வேலையெப்பாரு. பிச்செ எடுத்து வயிறு வளக்கலாம் போ"

"ஊம், பிச்செ எடுப்பெ, ஐயோ ஆண்டவனே, நா என்ன பண்ணு

வேன் புத்தி கெட்ட புருஷனை வச்சுகிட்டு" என்று புலம்பியவள் சட்டென்று ஏதோ தோன்றி விடு விடு வென்று நடக்க ஆரம் பித்தாள்.

2

மலர்கள் வந்து சேராததைப் பற்றிய விசாரணையில் அந்தப்புறத்திலும், ராஜ மாளிகையிலும் அமளி துமளிப்பட்டது. அப்பொழுதுதான் அரசன் தன் சேவகர்களை விட்டு விசாரித்து வர அனுப்பிவிட்டு உள்ளே திரும்பிய சமயம் சங்கமாலை வந்து வாசலின் முன்பு நின்று ராஜ பேட்டிக்காக உள்ளே தகவல் அனுப்பினாள்.

பூக்கார சரவணனுடைய மனைவி வந்திருப்பதாக அறிந்த அரசன் அவளை உள்ளே அழைத்து விசாரித்தான். சங்கமாலை சாஷ்டாங்கமாக பணிந்து எழுந்து "மகாராஜா, யாரோட போதனையோ தெரியலிங்க; அத்தனி புஸ்பத்தையும், மாந்தோப்புலே ஒரு மொட்ட சாமியாரு இருக்காராமல்லா — அவருகிட்ட......"

"உஸ், மரியாதையாகப் பேசு" என்று அதட்டினான் மன்னவன்.

"மொட்டை சாமியார்" என்று அவள் குறிப்பிட்டது யாரை என்பதை அரசன் க்ஷணத்தில் ஊகித்துக் கொண்டு விட்டான்.

நாலு நாளாக ஊருக்கு வெளியிலுள்ள மாந்தோப்பில் வசித்துக் கொண்டு தர்ம பிரசாரம் செய்யும் புத்த தேவனை தக்ஷிண கோலத்தின் அதிபனான இவ்வரசனும் கேள்விப்பட்டு மறுதினம் அதிகாலையில் அவரை தமது பட்டணத்திற்கு அழைத்துவர ஏற்பாடு செய்து கொண்டிருந்தான் சந்திர ஸேனமகாராஜன்.

இப்போது சங்கமாலை தெரிவித்த செய்தி அரசனை ஆனந்தக் கடலில் ஆழ்த்தியது. சங்கமாலையைப் பார்த்து சந்தோஷக் குரலில் "பெண்ணே, உன் புருஷனை வரச் சொல்லு" என்றார்.

விஷயம் தெரியாதவளும் அரசனுடைய கருத்தை அறியாதவளுமான சங்கமாலைக்கு திகிலுண்டாயிற்று. நெடுஞ்சாண் கிடையாக மறுபடி நிலத்தில் விழுந்து பணிந்து "மகாராஜா, தயவு செய்து இந்தப் பிளெயை மன்னிச்சுடணும், புள்ளை குட்டிக்காரி — காப்பாத்தணும்"

அரசன் சிரித்துக் கொண்டே கையமர்த்தி "ஒன்றுமில்லை, பயப்படாதே. போய் உன் புருஷனை வரச் சொல்லு — அவனுக்கு சன்மானம் செய்ய வேண்டும். இந்தா உனக்கு இது" என்று சொல்லி தம்மில் பொங்கி வந்த மகிழ்ச்சிப் பெருக்கால் பொக்கிஷத்திலிருந்து வரவழைக்கக்கூட தோன்றாமல் தம் கையிலிருந்த தோடாவைக் கழற்றிக் கொடுத்து விட்டார்!

அரசனுடைய கை தோடாவை பரிசாக அடைந்த சங்கமாலையை அங்கிருந்த பரிஜனங்கள் அனைவரும் வியப்புடன் பார்த்தார்கள். அவர்களுக்குள் பொறாமைகூட லேசாக தலைதூக்கியது! எதிர் பாராத விளைவாக ஏற்பட்ட நற்செய்தியும், வெகுமதியும் கிடைத்ததினால் பூரித்துப் போனாள் சங்கமாலை.

நன்றி பூத்த முகத்துடன் அரசனை வணங்கி உத்திரவு பெற்றுக் கொண்டு அங்கிருந்து கிளம்பிய சங்கமாலை, ஓட்டமும் நடையுமாக வீடு வந்து சேர்ந்தாள்.

அப்பொழுது இருந்த இடத்தில் அசையாமல் உட்கார்ந்திருந்த புருஷனிடம் ஓடிவந்து அவசர அவசரமாக செய்தியைத் தெரிவித்து "போ, சட்டென்று" என்று துரிதப் படுத்தினாள்.

அரசனுடைய உத்திரவை நிராகரிக்க முடியாமல் அரை மனதுடன் அரண்மனை நோக்கி அந்த நள்ளிரவில் நடந்து சென்றான் சரவணன்.

வாசலிலிருந்த சேவகர்கள் சரவணனை உபசரித்து உள்ளே அழைத்துச் சென்றார்கள். அரண்மனை சபாமண்டபத்தில் தன் வரவுக்காக காத்திருந்த அரசனையும், அங்கு வைத்திருந்த வெகுமதிகளையும் எட்ட இருந்தே கண்டான் சரவணன். அவனுக்கு பிரமை ஏற்பட்டது. எதற்காக இதெல்லாம் என்று யோசித்தவாறே அருகில் சென்று முகமன்கூறி வணங்கினான்.

அரசன் அவனை பிரியமுடன் அழைத்து அமர்த்திக் கொண்டு உவகை ததும்ப "பாக்யவானே, ராஜ ஆக்ஞையை திரணமாக மதித்து தைரியமாக நீ செய்த செய்கை உத்தமமான கைங்கரியம். அதைச் செய்த உன்னை எவ்வளவு புகழ்ந்தாலும் என் ஆவல் அடங்காது. எனக்கு முன்பாக மஹான் புத்தனுடைய சந்நிதியில் மணம் வீசச் சென்ற அம்மலர்களும், எனது முக்ய அலங்கார சேவைக்காரனை நீயும் உண்மையில் புண்ய சீலர்கள். என்ன அப்படிப் பார்க்கிறாய் சரவணா! ஆமாம், நாளை அதிகாலையில் போதிஸத்வனை தகுந்த உபசாரத்துடன் நமது மாளிகைக்கு அழைத்துவர இருக்கிறேன். அதற்கு முன்பாகவே, என் சேவகனை நீ அவர் முன் நின்று எனது மாளிகைக்கு உரிய மண மலர்களை காணிக்கை செலுத்தி வந்திருக்கிறாய்!

"தற்செயலாகநேர்ந்த இந்த சுப சூசகத்தால் என் உள்ளம் பரமானந்த மடைந்து விட்டது. நீ செய்த இந்த செயலில் உனக்கு அவ்வளவாக மகிமை தோன்றாது தான்; ஆனால் — சரவணா, எனக்கு மகத்தான புகழை இம்மூலமாக நீ தேடித் கொடுத்தாய். புனித பகவான் புத்தனுடைய பாத தூளி பட்ட இடமெல்லாம் புனிதமாகிறது, மானிடர்களும் அன்பு பூண்டு நல்வாழ்வு பெறுகிறார்கள். அவ்விதமே நமது நாடும் குடிகளும் செழிக்க வேண்டும். மனிதர்கள் சத்திய சீலர்களாக வாழ வேண்டும், எனது உண்மையான சந்தோஷம் அதுதான்.

"சரவணா, இந்தா வெகுமதிகளைப் பெற்றுக்கொள் சந்தோஷமாக, இதோ இந்த முடிப்பில் அறுநூறு பொற்காசுகள் உள்ளன, இதோ இந்தப் பேழையில் உள்ளவை ஆபரணங்களும், ரத்தினக் குவியல்களும். இன்னும் என் உவகையைக்கேள், ஆறு உத்தம ஜாதி அசுவங்கள், ஆறு மத்த கஜங்கள், ஆறு மாளிகைகள் உள்ள ஆறு கிராமங்கள் இவற்றை உனது வழி பூராவும் அனுபவிக்க வேண்டும். இது என் ஆசை" என்று சொல்லி மீண்டும் "ஆம், இன்னும் ஒன்று சரவணா, இன்று மட்டுமன்று, ஒவ்வொரு நாளும் இந்த அரண்மனை காணிக்கையை புத்தனுடைய புனித சன்னதியில் செலுத்த வேண்டும்" என்று ஆக்ஞையிட்டு அளித்த வெகுமதிகளை அவனுடன் அனுப்பித் தானும் வாயில் வரை வந்து வழியனுப்பி விட்டுத் திரும்பினான் அரசன்.

அன்றிரவின் மூன்றும் சாமத்திற்குள்ளாக ராஜ மாளிகை முழுதும் ராஜ வீதிகளும் அலங்கரிக்கப் பட்டு விட்டன,

நான்காம் சாமத் தொடக்கத்திலே அரசன் நீராடி விட்டு பகவானுடைய கட்டளையின்படியே ஆடம்பரமான ராஜ விருதுகள் ஏதுமின்றி முக்கியமான அங்கத்தினருடன் சரவணனையும் முன்னிட்டுக் கொண்டு, போதி ஸத்வனிருந்த மாந்தோப்பில் நுழையும் போது சந்திரன் மறைந்து கிழக்கு வெளுத்துக் கொண்டிருந்தது.

போதி முனிவரிருந்த மரத்தடிக்குச் செல்லும்போது, அரசனுடைய இருதயம் பரவசமாகி ஒரே கொந்தளிப்பாகி நடைகூட தடுமாறிப்போய், மெல்ல அடி மீது அடிவைத்துக் கொண்டு அருகில் வந்தார்.

பகவானுக் கருகில் அமர்ந்திருந்த அனந்தன் எழுந்து முன் வந்து அரசனுக்கு ஆசி கூறி அருகிலழைத்துச் சென்றான்.

மெய் விதிர்க்க அரசன் புத்தனுடைய அருகில் வந்து அஞ்சலி செய்து வணங்கும்போது புத்தனுடைய அருள் விழிகள் தாமாகவே மலர்ந்தன.

அன்புடன் அரசனுக்கு வாழ்த்துக்கூறி வரவேற்றார் புத்தன். கிரமமாக குசலப்ரச்னம் முடிந்து சிறிது நேரத்தில் லோகோத்தாரனை புத்த தேவனுடன் அவ்விடத்தை விட்டு புறப்பட்டான் அரசன்.

சூரியோதயத்தோடு அரசனும் தர்மஸ்வரூப ஞானபானுவுமான பகவானுடன் தனது மாளிகையில் பிரவேசித்தார்.

கிரமப்படி வந்தனை, வழிபாடுகளைச் செலுத்தி வணங்கி ஆசிகளைப் பெற்றுக் கொண்டார் அரசன். அதன் பிறகு பகவானுடைய அம்ருத மயமான தர்மோபதேசங்களில் மெய் மறந்து ஈடு பட்டார் வேந்தன்.

அப்பொழுதுதான் புதிதாக மலர்ந்த பாரிஜாத மலர்கள் நிறைந்த குடலையுடன் அங்கு தோன்றினான் சரவணன்.

அரசனுடைய மகிழ்ச்சி கரை கடந்து விட்டது. சரவணனுடைய கையிலிருந்த புஷ்பக் குடலையை வாங்கி பகவானுடைய சரணங்களில் சொரிந்து வணங்கி விட்டு “ஞானதேவா, இந்த சரவணன் எனக்கு முன்பாக தங்களிடம் அனுக்ரஹம் பெற்று விட்டான் இல்லையா?” என்றார் புளகத்துடன்.

“எப்படி?” என்று வினவினார் புத்தன்.

“சொல்லுகிறேன், தினமும் ஆறு குடலை மலர்கள் நம் மாளிகைக்குக் கொணர்ந்து கொடுத்து அதற்கு பிரதி பிரயோஜனமாக ஆறு வெள்ளிகள் பெறுவது வழக்கம். அந்த ஊதியத்தினால் தன் குடும்பத்தை அவன் பரிபாலிக்க வேண்டியவன். அத்துடன்கூட தினம் தவறாமல் மலர்களை அனுப்ப வேண்டும் என்பது எனது ஆக்ஞை. தவறினால் அதற்கான தண்டனை என்ன என்பதையும் தெரிவித்திருக்கிறேன். அப்படி இருக்க, எனது ஆக்ஞையும், தனது தண்டனையையும், குடும்ப சம்ரக்ஷணையையும்கூட அறவே மறந்து விட்டு நேற்றிரவு அவன் தங்களுடைய அடிகளில் ராஜ மாளிகைக் குரிய புஷ்பங்களை அர்ச்சித்திருக்கிறான்!”

அப்பொழுது சரவணன் தன்

னையறியாது 'பேச முன் வந்து விட்டான் — எதடா அரசனை இடை மறிக்கிருேமே என்றுகூட யோசிக்காமல்!

"தேவா, அறிந்தே அரசருக்கு அபசாரம் இழைத்தேன்! அதற்கு அவர் அளித்த தண்டனைகள் தூக்க முடியாத பொன் பாரமும் மண்பாரமும், யானைகளும், குதிரைகளும் கொடுத்து என்னை பந்தத்தில் சிக்க வைத்துவிட்டார்கள்!

"பூக்குடலைகளை தோள்களில் கோர்த்துக் கொண்டு அரண்மனையை நோக்கி நடந்து கொண்டிருந்த சமயம் ஜனங்கள் கும்பல் கும்பலாக மாந்தோப்பிற்குள் நுழைவதைக் கண்டேன். என்னவென்று பார்க்கத்தான் நானும் அங்கு வந்தேன். தேவரீருடைய வாக்கிலிருந்து வெளி வந்த அம்ருத வசனங்கள் என்னை எழுப்பி விட்டன. கேவலம் ஜடமாக பூந்தோட்டம் வைத்து, பூக்கொய்து விற்று வயிறு வளர்த்த என் ஜீவனத்தைப் பற்றி ஒரு க்ஷணம் யோசித்தேன். என்ன ஆசை, எவ்வளவு ஆதங்கம் வாழ்வில் என்று சிந்தித்தேன். ஆசைகளின் அதோகதியையும், நிராசையிலுள் சாந்தியையும் அறிந்து கொண்டேன். தேவா, என் கண்கள் திறந்து விட்டன! எனக்கு பிறப்பின் பந்தங்களையும், பாசங்களையும் அறிய சக்தி கொடுத்த தேவரீருக்கு என்ன செய்யவல்லேன் என்று ஏங்கினேன். என் கையில் அப்பொழுதிருந்த மலர்களை — நான் பாடு பட்டு வளர்த்த பயனை — தேவருடைய சரணங்களில் அர்ச்சித்து விட்டேன்" என்று நிறுத்தினான்.

பரிபூரணமான ஆனந்த மேலீட்டால் அவன் குரல் அடை பட்டது. அவனுடைய உடம்பே நடுங்கிற்று. கண்களில் நீர் கொட்ட புத்தனுடைய அடிகளில் விழுந்து வணங்கினன்.

"தர்மிஷ்டனே, எழுந்திரு! உனக்கு இனி பந்தமில்லை" என்று அவனைத் தூக்கியெடுத்தார் பரம கருணையுடன் அந்த பகவான்.

சந்திரிகை உதித்து விட்டது. நாழி ஆக ஆக சந்திரன் உயர எழும்பி, அந்த மாந்தோப்பிலும் தனது ஒளியை வீசினன்.

மாலையில் தர்ம போதனையை முடித்து விட்டு மௌனமாகி விட்ட பகவான் முதல் சாமமுடிவு நெருங்கியும்கூட தியானம் கலையாமல் தமது ஆசனத்தில் அமர்ந்திருந்தார்.

தர்மோபதேசத்தின் ஆரம்பத்தில் முதல் நாளைப் போலவே அன்றும் ஏராளமான மண மலர்களை அவருடைய பாதங்களில் அர்ச்சித்தவனை, அன்புடன் அருகிலழைத்து ஆசீர்வதித்து அந்த மலர்களின் மணத்தைப்பற்றியே சிந்தித்துக் கொண்டு அவருடைய அருகில் உலாவிக் கொண்டிருந்தான் பிரதம சிஷ்யனுன அனந்தன்.

அந்த சமயம் போதி ஸத்வன் கண்களைத் திறந்து பார்த்தார். அவருடைய தீர்க்க நயனங்கள் தம் காலடியில் கிடந்த மலர்களைப் பார்த்தன.

வெகு நேரத்திற்குப் பிறகு கண் விழித்தும் அந்த மலர்களினுடைய மாதுர்யத்தை அவர் மறக்காததைக் கண்டு அனந்தனுள்பட அங்கிருந்த அனைவருக்கும் ஒன்றும் விளங்கவில்லை. அவரவர்கள் பிரமித்துப்போய் தமது குருவைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

தனது தமையனாரும், குருவு மான போதி சத்வனுடைய வாக்கிலிருந்து என்ன வரும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு அருகில் நின்றான் அனந்தன்.

மட்டற்ற மகிழ்ச்சியுடன் புஷ்பங்களை மீண்டும் மீண்டும் எடுத்து முகர்ந்து பார்த்துக்கொண்டிருந்த புத்தன் தம்மில் பொங்கி வந்த அன்புப் பெருக்கை சமாளித்துக் கொள்ள முடியாதவராக "அனந்தா, இந்த மலர்க் குடலைகளைக் கொண்டுவந்த பக்திமானை நீ பார்த்தாயோ?" என்று கேட்டார்.

அனந்தன் சற்று முன் வந்து வணங்கிவிட்டு பணிவான குரலில், "ஆம் தேவா! பார்த்தேன். தங்களுடைய தர்ம பிரசாரத்தை நின்று கொண்டுதான் கேட்டான் அவனை நன்றாகப் பார்த்தேன்?"

"பார்த்தாயா! நீயும் பாக்ய சாலி அனந்தா!"

"கொஞ்சம் விளங்கும்படி...." என்று அனந்தன் கேட்ட பொழுது பகவான் சிரித்து விட்டார்.

"அனந்தா, விளங்கும்படி சொல்ல வேண்டுமா? கேள்! உன் மனதிலும், இங்குள்ள மற்ற பிக்ஷுக்கள் மனதிலும் உழலும் விசித்திர சந்தேகம் எனக்கு உங்கள் முகத்திலிருந்தே தெரிகிறது. ராஜபோகத்தையும், லோக சுகங்களையும் உதறிவிட்ட பின்பு, இன்று கேவலம் புஷ்ப வாசனையில் ஈடுபட்டு ரமிக்கும் அதிசயம் என்ன என்று யோசிக்கிறீர்கள். இல்லையா?"

"ஆம் சுவாமி! அதுமட்டுமன்று! தேசதேசங்களுக்குச் சென்று, ஆங்காங்குள்ள தேசாதிபதிகள் தங்கள் பாதகாணிக்கை முன்பு கொணர்ந்து சொரிந்த அபூர்வ மணமலர்களை எல்லாம் தாங்கள் சிரத்தை செய்ததாக யாருமே அறியவில்லை! இன்று இந்த சாதாரண மலர்களின் சுகந்தத்தில் என்ன மனோகரமிருக்கிறது என்பதுதான் விளங்கவில்லை......"

இன்முகத்துடன் பகவான் பேச ஆரம்பித்தார்.

"கேள் அனந்தா, மலர்களின் மனோகரத்திற்காக அவற்றை நான் சிரேஷ்டமாகக் கருதவில்லை, இந்த புஷ்பங்கள் இப்படி அரண்மனை செல்ல வேண்டியவை. இதை ராஜகிருஹத்திற்குக் கொண்டு போய் கொடுத்து ஆறுவெள்ளிகளை அதற்கு கூலி பெற்று ஜீவிப்பவன். நேற்று இந்த மலர்களை இங்கு சொரிந்து விட்டதால் அவனுடைய ஊதியம் மட்டும் இல்லாது போகவில்லை. அரசன் நினைத்தால் அவனுடைய தலையே போய்விடும்!

"அனந்தா, இப்போது நினைத்துப்பார், சிரசாக்கினையையும்கூட மதிக்காமல் வாழ்வின் தன்மையை அறிந்து ஞானியாகி விட்டவனுடைய கைமலர்கள் இவை!

"தியாகியினுடைய பிரியமான கையுறை என்ற காரணத்தால் தான் இம்மலர்கள் ஏற்றமடைந்துவிட்டன என் திருஷ்டிக்கு முன்பு! இதனுடைய சிருஷ்டி கர்த்தாவான சரவணன், சம்சாரியாயினும் துறவி அவன்!" என்று சொல்லி நிறுத்தினார் புத்தன்.

ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்து நின்றான் அனந்தன்! மஹான் புத்தனுடைய முகமண்டலத்தில் அபூர்வமானதொரு ஒளி பிறந்து சந்திரிகையையும் மிஞ்சிய காந்தியுடன் ஜொலித்தது.

"ஏய் ரிக்ஷா!"

"சுகி"

சாம்பல் மேட்டில் குழி தோண்டி தன்னைப் புதைத்துக் கொள்ளும் சொறிநாய் போல, குப்பன் ரிக்ஷாவின் ஏர்கால்த் தொட்டிக்குள்ச் சுருட்டிக் கொண்டிருந்தான். எதிரே வித்தை காட்டிக் கொண்டிருந்தான் ஒரு முஸ்லீம். தானும் அப்படி வித்தை காட்டினால் சுலபமாக காலோ அரையோ சம்பாதிக்கலாம்: அதை விட்டு மாட்டிலும் கேவலமாக மனிதனைச் சுமந்து செல்வதை மனம் வெறுத்தது.

காரணம் அன்று முழுதும் கூலி இல்லை, மணிக் கூண்டிலிருந்து முள் நகர நகர அவன் மனம், 'இன்றைய வண்டி வாடகையை எப்படிக் கொடுப்பது?' என்ற பிரச்னைக்குள் வட்டமிட்டது. காந்தி மார்கட்டிற் குள்ளிருந்து சாயங்காலக் கூட்டம் இடித்துப் புதைத்துக் கொண்டு வந்தாலும் 'ரிக்ஷா' கேட்பாரைக் காணோம்.

குப்பன் படுத்திருந்தபடியே மணிக் கூண்டின் கௌத நிழலில் கதறிக் கொண்டிருந்தவன் மீது பார்வை சென்றது. அவன் ஒரு குருட்டுப் பிச்சைக்காரன். முன்னே விரித்திருந்த கந்தைத் துணியில் நாலணாவுக்கு மேலாகக் கிடந்தன. பிச்சைக்கார குருடனும், வித்தைக்கார சாகிப்பும் அவனுடைய பொறாமைக்கு ஆளாகி விட்டனர்.

அந்த வேளை 'ஏய் ரிக்ஷா என்ற குரல்.

எச்சிலிலை விழுந்ததும் சாப்பல் மேட்டுச் சொறிநாய் உடலை முறுக்கி எழுந்தோடுவது போல குப்பன் வண்டியை இழுத்தபடி ஓடினான். கூப்பிட்ட குரல் ஒரு சிப்பாய். அருகே அவன் மனைவி சிரித்துக் கொண்டு நின்றாள். பட்டணப் பாங்கும், பட்டிக் காட்டுப் பாங்கும் இல்லாத ஓர் அழகு அவள் உடையில் மிளிர்ந்தது.

கூலி ஒன்றும் பேசாது வண்டியில் ஏறச் சொல்லி இழுக்க ஆரம்பித்தபோது. "ஆஞ்சநேய விலாஸ் போர்டிங் அண்டு லாட்ஜிங்" என்றான் சிப்பாய். அந்த ஒரு சவாரியிலேயே அன்றைய வருமானம் முழுவதையும் சம்பாதித்து விட்டதாக குஷி. "மந்திரமில்லே, தந்திரமில்லே" என்ற வித்தைக்காரன் ஜாலக் குரல்; "சாமீ... ஈ ஏழை...... கபோதி" என்ற பிச்சைக்காரன் வேண்டுதல் "சை! சுத்த சோப்பேறிகள் ஏமாத்தி சம்பாதிக்கிறார்கள்!" என்று காறித் துப்பிவிட்டு வண்டியை இழுத்தோடினான்.

"பாவமா இருக்கு" என்றாள் அந்தப் பெண். ரிக்ஷா பிரயாணம் இதுதான் முதல்த் தடவை.

"முதன் முதலில் ரிக்ஷாவில்

இருக்கும் போது பாவ புண்ணியம் நினைப்பு வரும். அப்புறம் போகப் போக சரியாகிவிடும், வில்லி."

"சரியாகப் போகாது. மனசு மரத்துப் போகும்" என்றாள் வில்லி.

இந்த சம்பாஷணையைக் கவனித்த குப்பன், "எம்மா நாங்களும் பிளைக்க வேண்டாமா?" என்றான்.

சிப்பாய் சிகரெட்டைப் பற்ற வைத்து புகைச் சுருளை ஊதிக் கொண்டே வந்தான். வந்தவன், "ஏண்டாப்பா உனக்கு குழந்தை குட்டி இருக்கா?" என்றான்.
"இல்லே சாமீ. இந்தத் திருச்சிக்கு ரிக்ஷா இழுக்க வரலே; விதி என்னை இதிலே மாட்டிப் போட்டுது."

அவன் பரம்பரை ரிக்ஷா வாலா அல்ல. நாலைந்து வருஷங்களுக்கு முன்பு, குப்பன் கட்டமைந்த காளை. பட்டிக்காட்டுப் பிழைப்பையும், பணக்கார ஆசையையும் மனசில் குழப்பி, பெரிய வீட்டு ராக்கையத்தேவர் மகள், அம்மாக் கண்ணுவைக் கைப்பிடிக்க பட்டணத்திற்கு வந்தால்தான் முடியும். நாலு காசு சம்பாதிக்கலாம் என்று வந்தவன் ஆசையில் மண் விழுந்து ரிக்ஷா அவன் உடம்பை ஒடித்தது.

ஆனாலும், தன் மளிகைக் கடை மாணிக்கஞ் செட்டியாரிடம் பட்டறை வேலை பார்ப்பதாகவும் தனது விலாசம் ரு. குப்பாண்டித் தேவர், C/o க. ம. மாணிக்கஞ் செட்டியார். மயிலஞ்சந்தை, திருச்சி என்று கொடுத்திருந்தான். தனது ஈனத் தொழில் தெரியக்கூடாதென மறைத்தான். அது நாளதுவரை அப்படி மறைமுகமாகவே இருக்க நேர்ந்துவிட்டது ஆனால், என்றாவது அதிர்ஷ்டம் கிட்டாதா என்ற கனவு, எல்லாரையும் போல அவனுக்கும் இருக்கிறது.

இதற்கிடையில், இரண்டு வருஷங்களுக்கு முன் தன் கிராமத்திற்குப் போய், தனது மளிகை வேலையைப் பற்றிப் புகழ்ந்து கொண்டான். கொஞ்சம் வெளுப்பாக துணி மணியும் கட்டிக்கொண்டு பாவலாச் செய்தான். ராக்கையாத் தேவர் "ஆமா, உன்னைப் பாத்தா பட்டரை முதலாளியாட்டமா வா இருக்கு? என் இப்படி கருத்துக் கருவாடா இருக்கே. அது சரி, முழங்கை ரெண்டு பக்கத்திலேயும் என்ன தழும்பு காய்ச்சுக் கிடக்குது?" என்று கேட்டார்.

குப்பன், ரிக்ஷாவின் ஏர்க்காலில் முழங்கையை அணைத்துப் போனதால் ஏற்பட்ட தழும்பு என்பதைச் சொல்ல முடியுமா? ஏதோ பொய் சொல்லி, அடுத்த வருஷம் ஆயிரம் ரூபாயுடன் வருவதாகச் சொல்லி விட்டான்!

ஆனாலும் தான் வாங்கிவந்த ஒரு மோதிரத்தை அம்மாக் கண்ணுவிற்குப் போட்டு, தன்னைப் பற்றி ஒரு புகழ்ச்சிப் படலமும் சொல்லி விட ஆசைப் பட்டான். அவன் புகழ்ச்சிப் படலத்தை மட்டும் கேட்டுக் கொண்டு, "ஐயா, கோவிப்பாரு. ஊரிலே நாலு பேசுவாங்க. நீங்க மளிகைக் கடையிலே சம்பாதிச்சு முதலாளி ஆயிட்டா ஐயாவே வலிய வருவாரு" என்று தட்டிக் கழித்தாள் மோதிரத்தைத் திருப்பிக் கொடுத்தபடியே.

குப்பன், அந்த மோதிரத்தை அவள் முன் வைத்துவிட்டு, ஓடி வந்தவன் வந்தவன்தான். ஆயிரம்

ரூபாய் சேர்த்து, அம்மாக் கண்ணுவை அடைய கனவு கண்டபடி ஏர்க்காலுக்குள் தலை கொடுத்தவன், இன்னும் தலை நிமிர்ந்தபாடில்லை.

தலை நிமிராமல் ஓடிய குப்பனைப் பார்த்து, "ஏனப்பா, நாலு வருஷத்துக்கு முன்னாலே பட்டாளத்திலே சேர்ந்திருந்தா எவ்வளவோ சம்பாதிச்சிருக்கலாம். போச்சு. பாவம். உனக்கு குழந்தை குட்டி இருக்கா?" என்று கேட்டான் சிப்பாய், தன் மனைவியை கண் சிமிட்டியபடி.

குப்பன் தன் பூர்வோத்திரங்களைச் சொல்லாமல், காதல் விவகாரத்தை மட்டும் ஆரம்பித்தான். "ஏழு வருஷத்துக்கு முன்னாலே, எங்களூர் மாந்தோப்பிலே ஒரு அடிபிடி நடந்தது. பத்துப் பதிமூணு வயசு இருக்கும் ஒரு பொண்ணு, மாம்பழம் எடுக்க வேலிக் குள்ளே நுழைஞ்சுது. அதைப் பாத்த தோட்டக்காரன், கொஞ்சம் போக்கிரிப் பயல், அந்தப் பொண்ணை கன்னுப் பின்னுன்னு பேசி, அடிச்சு விளையாட ஆரம்பிச்சான். அவள் கூப்பாடு கேட்டது. வேலியைத் தாண்டிப் போய் அவனை அடி அடியின்னு அடிச்சேன். நாங்க குஸ்தி போட்ட சமயம்......"

"அந்தப் பொண்ணு மேலே உனக்கு ஆசை! அப்படியா?" என்று சிப்பாய் குறுக்கிட்டான்.

"ஆமா, சாமீ. நாங்க குஸ்தி போட்ட சமயம், வேலி வழியா ஆட்டுக்குட்டி போல அவள் ஓடிப் போயிட்டா. நானும் அவனை உதைச்சுட்டு வேலியைத் தாண்ற சமயம் இளநீர் வெட்டற பாளை அறுவாளை வீசி எறிஞ்சான். அது சொதக்கின்னு எம் முதுகிலே......பாஞ்சுது" என்று ஓடிக் கொண்டே, வலக்கை விரலால் முதுகைச் சுட்டிக் காட்டினான்.

இதற்குள் வண்டியிலிருந்த பெண் 'ஓ' என்று அலறி 'ஊ ஊ' என விக்கல் எடுத்து கண் சொருகி வந்தது. "லில்லி! லில்லி!" என்று கத்திய சிப்பாய், "டேய் கதையை நிறுத்தடா. உன் கதையைக் கேட்டு பயந்து விட்டாள்" என்றான். குப்பன் வண்டியை மெதுவாக இழுத்து ஒரு சோடாக் கடை முன்பு நிறுத்தினான். வண்டியிலிருந்து இறங்கினர்.

சோடாக் குடித்த பின்பு லில்லிக்கு கொஞ்சம் மூர்ச்சை தெளிந்தது. சிப்பாய் சிரித்தபடியே, "லில்லி, இதற்கு இப்படி மூர்ச்சையாகி விட்டாயே. யுத்த களத்தில் முண்டம் முண்டமாக எத்தனை பேர் துடிப்பார்கள்; எவ்வளவு ரத்த வெள்ளம் பாயும் தெரியுமா? ஒரு சாண் நீளம் அரை அங்குல அகலமுள்ள முதுகுத் தழும்பைக் கண்டு இப்படிப் பயப்பட்ட நீ சூரப்புலிதான்."

"நான் இந்த ரிக்ஷாவில் வர மாட்டேன். ரிக்ஷா வேண்டாம். வேறு வண்டி வேணும்" என்றாள்.

"எம்மா, ரிக்ஷா வேண்டாமா?" குப்பன் குரலில் ஆச்சர்யமும் ஏக்கமும் தொனித்தன. அன்றையக் கூலி கிடைக்காமற் போய் விடுமோ? குப்பன், "இனி கதை அவ்வளவு தானுங்க சும்மா பயப்படாம குந்துங்க. போலாம்" என்றான்.

அவள் சிப்பாயைப் பார்த்தாள். பணத்தை எடுத்து கொடுத்து, "போப்பா, ரிக்ஷா, பயப்படறாள்" என்று அனுப்பிவிட்டு ஒரு குதிரை வண்டியில் ஏறிச் சென்றனர்.

தன் தரித்திரத்தையும், கையில் கிடைத்து வாய்க்குக் கிடைக்காமல் போனதையும் நினைத்துக் கொண்டே, ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு, மாணிக்கஞ் செட்டி கடைக்கு வந்தான் குப்பன்.

"செட்டியாரே, இன்னிக்கு கூலி ஒரு ரூபாய்தான் கிடைச்சுது. உங்க வாடகையை நாளைச் சேர்த்துத் தாரேன்" என்முன்.

"சரிடா போ. ஆமாடா" என்றவர் ஏதோ ஞாபகம் வந்தவர் போல், "டேய், டேய் உன்னைத் தேடி இரண்டு பேர் வந்தாங்க, சிப்பாய் வண்டிக்குள்ளே இருந்தான். வந்த அவன் பெண்சாதி உன் பேரைச் சொல்லிக் கேட்டா. நீ வெளியே போயிருக்கிறதாச் சொன்னேன். நீ வந்ததும் உடனே ஆஞ்சநேய விலாஸ் போர்டிங், லாட்ஜிங் ஹோட்டலுக்கு வரச் சொன்னுங்க. ஓடுடா. நல்ல வரும்படி கிடைக்கும்" என்று சொல்லி வந்தார்.

குப்பன் கையில் தாங்கிய ரிக்ஷா அப்படியே விட்டுவிட அது பொத்தென விழுந்தது. செட்டியார் 'மடப் பயலே' என்று இறைந்துவிட்டு, "இந்தாடா ஒரு கடுதாசு. அந்தம்மா கொடுத்துது" என்று நீட்டவே அதை அவன் சுக்கு நூருகக் கிழித்து எறிந்தான். ஒன்றும் புரியாத செட்டியார் விழுந்த துண்டுகளில், பச்சை நோட்டுத் துண்டுகள் பல கிடந்தன. 'அட பாவி நூறு ரூபாய் நோட்டுகளா? தரித்திரப் பயலே' என்று ஆசைப்பட்டுச் சேர்க்க முயன்றவர், சிறிது நேரத்திற்குப் பின் அவன் செய்கையைக் காண பிக்க நிமிர்ந்த போது ரிக்ஷா மட்டும் நின்றது; குப்பனைக் காணேம்.

எட்டாம் நம்பர் அறையில் சிப்பாய் பேசிக்கொண்டிருந்தான். 'வில்லி'யோ சரியாகப் பேசவில்லை.

"நாளைக்கு, தஞ்சாவூர் போகலாமா வில்லி. ஆமாம், அந்த மாணிக்கஞ் செட்டியார் கடை ஆள் வரக் காணேமே. இருந்து, நாளைக்கு ஒருதரம் பார்த்து விட்டுப் போகலாமா? வந்த மட்டும் அவசியம் பார்க்க வேண்டும் என்ருயே?" என்று சிப்பாய் சொன்னன்.

"வேண்டாம். அவர் இனி வரமாட்டார். நாம் இன்றிரவே தஞ்சாவூர் போய் விடலாம்."

"ஸ்டேஷனுக்குப் போக ரிக்ஷா......"

"ரிக்ஷா...வா ஐயைய்யோ வேண்டாம்."

"வேண்டாம். நான் குதிரை வண்டி கொண்டு வருகிறேன்" என்ற சமயம் காலடியோசையும், 'சார்' என்ற குரலும் கேட்டன. ஹோட்டல் வேலையாள் என்று அறிந்த சிப்பாய், 'உள்ளே வா' என்ருன். கையில் ஒரு கடிதம் இருந்ததைக் கொடுத்து விட்டு. "இப்பதான் ஒருத்தன் – ரிக்ஷாக்காரன் மாதிரி இருந்தது – சிப்பாயும் அவன் மனைவியும் எந்த நம்பர் என்று கேட்டான். எட்டு என்றேன். 'இதைக் கொடு' என்று விட்டுப் போனன்" என்றவன் அறையை விட்டு வெளியே போனன்.

ஆவலோடு சிப்பாய் கடிதத்தைப் படித்தான். வில்லி ஆவலோடு அவன் முகத்தைப் பார்த்தாள்.

அன்புள்ள அம்மாக் கண்ணுக்கு,

நீ எழுதிய கடிதத்தையும் அதிலுள்ள நூறு ரூபா நோட்டுக்களையும் கிழிந்தெறிந்தேன். உன்னையும் உன் புருஷனையும் இழுத்துச் செல்லும் பாக்கியம் கிடைத்தது, மூர்ச்சையுற்றதுமே நீதானு என்று சந்தேகப் பட்டேன்: மறுபடியும் ரிக்ஷாவில் ஏறியிருந்தால், என் மனப்போக்குபடி உங்களை இழுத்துச் சென்று எங்காவது மோதிக் கொன்றிருப்பேன். நல்ல வேளை அந்தப் பாவத்துக்கு ஆளாகாமல் என்னைக் காப்பாற்றினுய். உன்னுல், முதுகில் ஏற்பட்ட தழும்பு கிடக்கிறது. இப்போது நெஞ்சில் ஒரு தழும்பு கிடைத்து விட்டது. இதைவிட நான் செய்த பாக்கியம் வேறு என்ன? இனி நான் உன்னைச்சந்திக்கவே முடியாது.

உன்னை மறந்துவிட்ட,

ரு. குப்பாண்டித் தேவர்.

வில்லி ஓவெனக் கதறினுள். அதைப் பார்த்துச் சிப்பாய் சிரியாய்ச் சிரித்தான். 'வில்லி' என் அழுகிருய்? ஒரு வேளை இந்த ரிக்ஷாவாலாதான் மாணிக்கஞ் செட்டியார் கடையில் நீ தேடிப் போன ஆளா?"

"மன்னிக்கவும். இவரைத்தான் என் அண்ணன் மாந்தோப்பில் வெட்டரிவாள் வீசி காயப் படுத்தினுன்."

"என்ன? அப்படியானுல், நாம் இங்கு புறப்பட்டபோது உன் சிநேகிதி ஒருத்தி ஒரு கவரைக் கொடுத்தாளே."

"அவள்தான் அம்மாக் கண்ணு. தான் சேகரித்து வைத்த அறுநூறு ரூபாயைக் கொடுத்து கௌரவமாக ஊருக்கு வரச்சொல்லி கடிதமும் எழுதியிருந்தாள். என்னைப் போய் நேரில்க் கண்டு சொல்லவும் சொன்னுள்."

"உன்னையே அம்மாக் கண்ணு என்று நினைத்து விட்டான்."

"நான் அம்மாக் கண்ணு முகத்தில் எப்படி விழிக்கிறது?. என் அண்ணன் செய்த பாவத்தைப் போக்க, நான் முயன்றேன். ஆனுல், இன்றும் அதிகப்படியாக நேர்ந்து விட்டது."

வில்லியின் கண்ணீரைத் துடைத்தான் சிப்பாய்.

தேவி

ஆர். சுப்பையன்

கண்ணறியா விண்ணுலகின்
கண்டறியாத் தெய்வமவள்
மண்ணுலகத் தின் புருவாம்
பெண்ணுருவின் காந்தமவள்
வண்ணக் கவிதையவள்
வாழ்வின் பின் சூழலவள்

எண்ணத்து மின் னுபவள்
என்னருமைக் காதலியாள் !

பூவின் மலர்ச்சியிலே
புன்னகைவாய்ச் செவ்விதழும்
காவின் வளர்ச்சியிலே
கட்டுடலின் பட்டொளியும்
நாவினசைப் பினிலே
நற்கவிதை யின்னிசையும்

மேவிச் சுழன்று வரும்
தேவியவள் என்னவளாம் !

தங்கம் உருக்கித்
தழல் குழைத்த மேனியிலே
பொங்கித் திரண்டிளமை
பூரிக்கும் மார்புடனேர்
மங்கையுரு வோடெனது
மாலை பெற முன் வந்து

தங்கிச் சுகம் தந்து
தானே யென்னுவாளாம்!

ஆசிரியர்:
சரத் சந்திர சட்டர்ஜி

சாவித்திரி

மொழிபெயர்ப்பு:
ஆர். ஷண்முகசுந்தரம்

மறுநாள் உபேந்திரன் கச்சேரிக்குப் போவதை பார்த்து தந்தை மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். மகனை அருகில் அழைத்து நிலையாமையைப் பற்றி இரண்டொரு வார்த்தை சொல்லாமலிருக்க முடியவில்லை. "உனக்குச் சகலமும் தெரியும். இந்த உலகத்தில் நிலைத்திருப்பவர் யாருமில்லை. இன்றிருப்பார், நாளை இல்லை. நேற்றிருந்தார் இன்றில்லை. இந்தத் தொந்தங்கள் எல்லாம் பொய்! இது மாயையின் விளையாட்டு. இதை நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொள் அப்பா! பரலோகத்தை நாசம் செய்து கொள்ளாதே. மேன்மையடைவதற்கு இதுதான் தகுந்த சமயம். யார் யாருக்கு உறவு? சாஸ்திரம் என்ன சொல்கிறது? 'பொருளில்லார்க்கிவ்வுலகமில்லை' என்கிறது. மானம், மரியாதைகள் எல்லாம் பொருளினால்தான் உண்டாகிறது. எல்லாம் பணக் கூத்துத்தான். பணம் சம்பாதிப்பதைப் பொறுத்துத்தான் மற்ற அனைத்தும் இருக்கிறது பாரு, சதீஷின் தந்தை எவ்வளவு பணத்தை சேர்த்து வைத்துப் போயிருக்கிறார்" என்று கூறினார். உபேந்திரன் அவர் கூறியவைகளைக் கேட்டுவிட்டு கோர்ட்டுக்குப் போய் விட்டான்.

கோர்ட்டில் சதீஷினுடைய தமயனை உபேந்திரன் சந்தித்தான். அவர் துக்கம் விசாரித்துவிட்டு கடைசியில் சதீசைப்பற்றி குறிப்பிட்டார். தந்தையின் மரணத்திற்குப்பிறகு சதீஷ் வீட்டில் தானிருப்பான் என்று உபேந்திரன் எண்ணிக்கொண்டிருந்தான். குணபாபு சிரித்துக்கொண்டு, "இந்தக் குறுகிய காலத்திற்குள் முப்பது நாற்பதாயிரம் ரூபாயில் இரண்டு பெரிய ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தியிருக்கிறான். மாதம் நூறு ரூபாய் சம்பளத்தில் ஒரு டாக்டரையும் அமர்த்தியிருக்கிறான். வீடு முழுவதையும் ஆஸ்பத்திரி மயமாக்கி விட்டான்" என்றார்.

"ஆமாம். வெகுநாளாக இப்படிச் செய்ய வேண்டுமென்று திட்டம் போட்டுக் கொண்டிருந்தான். பணமில்லாததால் ஒன்றும் செய்யாமலிருந்தான்" என்றான் உபேந்திரன்.

குஞபாபு சிரித்துக் கொண்டு, "ஆஸ்பத்திரி கட்டுவதைப் பற்றித் தான் உனக்குத் தெரியுமா? யோக சாதனங்களைப் பற்றித் தெரியாதா?" என்றார்.

உபேந்திரன் ஆச்சரியத்துடன், "யோக சாதனமா? அதென்ன?" என்றான்.

"தாந்திரீகம் முதலியவைகள். வெறும் டாக்டர் மாத்திரமல்ல. சதீஷ் சுவாமி ஒரு பெரிய சாதகராய் விட்டான். கோவணம் தரித்து, தாடி வளர்த்து, ருத்திராட்சம் அணிந்து, நெற்றியில் குங்குமம் துலங்க விளங்குகிறான். எப்போதும் தியானம்தான். ஒரு காரியமாக நான் ராச பிஹாரியை அவனிடம் அனுப்பிவைத்தேன். ஆனால் பயந்துகொண்டு இரண்டு நாள் வரையிலும் ராச பிஹாரி அவனிடம் நெருங்கவே இல்லையாம்! இந்தக்கடிதத்தைப் படித்துப்பார், பிஹாரி எழுதியது. பதில் எழுத முடியவில்லையாதலால் ஜேபிலேயே இருக்கிறது." என்று கூறி ஒரு கடிதத்தைக் கொடுத்தான்.

பிஹாரி என்ன செய்வதென்று தெரியாமல் சதீஷின் தமயனுக்குக் கடிதம் எழுதியிருக்கிறான். கிராமத்திலுள்ள ஏதோ ஒரு சிறு பையனைக் கொண்டு கடிதம் எழுதியிருப்பான் போலிருக்கிறது. ஏனென்றால் படித்த மனிதன் அம்மாதிரி எழுதவேமாட்டான். கடிதத்தை முழுதும் படிக்க முடியாவிட்டாலும் படித்த வரையிலும் உள்ள விஷயங்களைக் கண்டு திடுக்கிட்டான்.

அவனுடைய பால்ய நண்பன் அவனது வலதுகை போன்றவன், அவனுடைய சதீஷா படுபாதாளத்திற்குப் போய்விட்டான்! ஊரில் சகலரும் அறிய அந்த வேலைக்காரியை வைத்துக் கொண்டிருப்பதில் வெட்கமடையாதவன் ஆத்ம சோதனை செய்து கொண்டிருக்கிறான்! கிராமத்தில் அநேக 'சோதா'க்கள் சதீஷிற்கு நண்பர்களாக வாய்த்திருக்கிறார்கள் என்று பிஹாரியின் கடிதத்திலிருந்து தெரிய வந்தது.

எதையோ நினைத்துக் கொண்டு கடிதத்தை ஜேபியில் போட்டுக் கொண்டு உபேந்திரன் வீட்டிற்குத் திரும்பிவந்தான். குஞபாபுவிடம் கடிதத்தைத் திருப்பிக் கொடுக்க மறந்துவிட்டான்.

பிஹாரி கடிதத்தை எழுதி தபாலில் போட்டு விட்டு ஒவ்வொரு நாளும் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் பெரிய பாபு வரவில்லை, பெரிய பாபுவிடமிருந்து கடிதமும் வரவில்லை.

பிஹாரி, காகி பாபுவின் அட்டகாசத்தைக் கண்டு பயந்துபோய் விட்டான். அவர் ஒரு தாந்திரீக சந்யாசி. சதீஷின்குரு இவர்தான். அவரிடம் சதா கஞ்சாவின் துர்க்கந்தம் வீசிக்கொண்டுதான் இருக்கும். அவர் மகிழ்ச்சியுடனிருக்கும்போது பேசும் பேச்சுக்களையே காது கொடுத்துக் கேட்க முடியாது.

தாந்திரீக குரு இப்படித்தான் இருப்பாராக்கும் என்று பிஹாரி அனைத்தையும் பொறுத்துக் கொண்டிருந்தான். அதோடு அவர் சதீஷின் குருவாகவும் இருக்கிறார்.

அவரிடம் பிஹாரிக்கும் பக்தி இல்லாமலில்லை. ஆனால் சதீஷிற்கு ஏதாவது கெடுதி நேரிடும் என்று தெரிந்தால் பிஹாரி ஒன்றையும் கவனிக்க மாட்டான் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை.

குரு மகராஜ் சாதனைக் கிணங்க சதீஷும் மற்றவர்களும் அர்த்த சாமத்தில் சக்கிர பூஜை செய்து வந்தார்கள். இத்தனை நாளும் பிஹாரி இதைப் பொறுத்து வந்தான். ஆனால் ஒருநாள் குரு பிரசாதம் என்று மதுவையும், கஞ்சாவையும் கொடுப்பதைப் பார்க்கவே அவனால் பொறுக்க முடியவில்லை. பிஹாரி குருவின் அறைக்குள் நுழைந்து மிகுந்த பணிவுடன் "தாங்கள் இனி பாபுவுக்கு சாராயமும் கஞ்சாவும் கொடுக்கக் கூடாது" என்றான்.

உடனே குரு ஆவேசத்துடன் "அடே பயலே! நீ சாராயம் என்று சொல்லுகிறாய்?" என்றார்.

பிஹாரி தாழ்மையுடன், "எனக்கென்ன தெரியும் சுவாமி! எனக்குச் சாராயம் என்றுதான் சொல்லத் தெரியும்" என்றான்.

"மறுபடியும் சாராயம் என்று சொல்லுகிறாய்? எண்டா, படவா! உனக்கென்னடா இதைப்பற்றி? நீ யாரடா கேட்பதற்கு?"

பிஹாரியால் குருவினுடைய வார்த்தைகளைப் பொறுக்க முடியவில்லை. "நான் பாபுவினது வேலைக்காரன்" என்றான்.

"வேலைக்காரனுக்கு இத்தனை திமிரா?" என்று குருதேவர் பல்லைக் கடித்துக்கொண்டு, "அடே! நான் உனது எஜமானனுக்கும் எஜமான் — குரு! உங்க அப்பனுக்கும் அப்பனுக்கும், தெரியுமா!" என்றார்.

உட்கார்ந்து கொண்டிருந்த பிஹாரி எழுந்து நின்று கொண்டு "ஜாக்கிரதை! என்னிடம் இனி மேல் இம்மாதிரி பேசாதீர்கள்!" என்றான்.

குருதேவர் இரவு பகல் எந்நேரமும் தம்மை மறந்த நிலையில் இருப்பவர்! பிஹாரியினுடைய உதாசினப் பேச்சுக்களால் கொதிப் படைந்தார். "பயலே! நீ என்ன சொன்னாய்? நீ என்ன செய்து விடுவாய்?" என்று கூறிக் கொண்டு எதிரில் கிடந்த தடியை எடுத்து பிஹாரியினுடைய தலையைக் குறி வைத்து வீசினார். பிஹாரியின் மூக்கிலிருந்து ரத்தம் பெருகியது. அதேசமயத்தில் இளமையின் ரத்தம் பீறிட்டெழுந்தது. கண்மூடி விழிப்பதற்குள் அங்கே மூலையில் வைத்திருந்த குரு தேவரின் திரி சூலத்தை எடுத்து ஓங்கினான். குருதேவர் பயத்தால் இரு கரங்களையும் உயரத் தூக்கிக் கொண்டு கத்தினார். அந்த சத்தத்தைக் கேட்டு பிஹாரி நிதானமடைந்து திரி சூலத்தை வைத்து விட்டு மூக்கு ரத்தத்தைத் துடைத்துக்கொண்டு வெளியே போய் விட்டான். எல்லா விஷயங்களையும் சதீஷிடம் கூறினான்.

"உண்மைதானா?" என்று சதீஷ் கேட்டான்.

"ஆம்" என்றான் பிஹாரி.

சதீஷ் சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டு "உன்னை இனி இந்த வீட்டில் வைத்திருக்க முடியாது. இருநூறு ரூபாயை வாங்கிக் கொண்டு நேராக வீட்டிற்குப் போய்ச்சேர். உனது சம்பளத்தை மாதா மாதம் வீட்டிற்கு அனுப்பி விடுகிறேன்" என்றான்.

பிஹாரி தலை குனிந்தபடியே, "சரி" என்றான்.

அவன் இதற்காக துக்கப்படவில்லை. மன்னிப்பும் கேட்கவில்லை. இரு நூறு ரூபாய் வாங்கி மடியில் வைத்துக்கொண்டு சதீஷை வணங்கி விட்டு சாயங்காலத்திற்கு முன்னமேயே கிராமத்தை விட்டுச் சென்று விட்டான்.

பிஹாரியின் உருவம் தெரிகிற வரையிலும் மேல் மாடியில் நின்று கொண்டு சதீஷ் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் கண்ணுக்கு மறைந்ததற்கு அப்புறம் சதீஷ் ஒரு பெருமூச்சு விட்டு "சரி அவனும்போய்விட்டான். பிஹாரியுங் கூட இத்தனை நாளைக்குப் பிறகு போய்விட்டான்!" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

இந்தத்தடவை புரட்டாசி ஆரம்பத்திலேயே தேவி பூஜை ஆரம்பமாகிறது. இன்னும் அனேகநாள் இருந்தும்கூட சதீஷின் நண்பர்கள் இவ்வருடம் காளி பூஜையை எப்படி எப்படிக் கொண்டாடுவது என்பதைப்பற்றி ஆலோசித்தார்கள். ஆனல் இடையில் மலேரியாவினல் சில சாதகர்கள் டாக்டரை நாடவேண்டியதாயிற்று.

சில நாட்களாக சதீஷிற்கும் உடம்பு சரியில்லை. நாள் ஆக ஆக ஜுரம் அதிகரித்தது.

மூன்று நாளைக்குப்பிறகு சதுர்த்தசி இரவு பெரிய தடபுடலாக பூஜைக்கு ஏற்பாடாயிற்று. ஆனல் இந்தத்தடவை சதீஷால் அங்கு செல்ல முடியவில்லை. மத்தியானம் குருதேவர் சதீஷருகில் வந்து புன்முறுவலுடன் அவனது சிரசின்மேல் தீர்த்தத்தை தெளித்து விட்டு, "அப்பனே இங்கு யமனுக்குக்கூட அதிகாரம் கிடையாது. நீதான் இங்கு பிரதானமானவன். நீ இல்லாவிட்டால் இந்த ஏற்பாடுகளெல்லாம் வீண் தான்" என்ருர்.

குரு தேவரின் வார்த்தைகளை சதீஷால் மீறமுடியவில்லை. விருப்பமின்றியே ஒத்துக்கொண்டான். பிஹாரி சென்றதற்கப்புறம் சதீஷ் தன்னைப்பற்றி சிந்தித்துப் பார்த்தான். அதிலிருந்து இதொன்றும் அவனுக்குப் பிடிக்கவில்லை. அடியோடு பிஹாரி தன்னைவிட்டு போய்விடுவான் என்று அவனல் நம்ப முடியவில்லை. அவனை மறுபடியும் அடைவதற்கு அவனது உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது. இது தவிர வேருெரு கவலையும் அவனது உள்ளத்தில் துக்கத்தை அளித்துவந்தது. பிஹாரி தன் வீட்டிற்குப் போனுனே அல்லது தங்களது மேற்கத்திய வீட்டுக்குச் சென்ருனே என்பதை யார் கண்டார்கள். எப்படி யானுலும் சரி அவனை மறுபடி ஒருமுறை பார்க்காவிட்டால் மனம் ஆறுதல் அடையாது போலிருந்தது.

அன்றுமாலை எல்லோருடனும் சேர்ந்துகொண்டு சதீஷும் இரண்டொரு கோப்பை குடித்திருந்தான். அவனது உள்ளக் கவலை சிறிது குறைந்ததுபோல் இருந்தது. அதே சமயத்தில் அடுத்த அறையில் பிஹாரியின் குரலைக் கேட்டு சதீஷ் சந்தோஷமடைந்தான். அவன் மிகுந்த ஆச்சரியத்துடன் "யாரது பிஹாரியா" என்ருன்.

பிஹாரி கதவருகில் வந்துநின்று கொண்டு நமஸ்கரித்தான்.

குருதேவரின் முகம் கருத்துவிட்டது. அவர், "இந்தப்போக்கிரிப் பயல் மறுபடியும் வந்துவிட்டானு? அடே பயலே இந்த அறைக்குள் ஏன் காலெடுத்து வைத்தாய்" என்ருர்.

இந்த அறைக்குள்தான் அவருக்கு 'மண்டகப்படி' நடக்கவிருந்தது.

சதீஷ் அவர் கூறியதைக் கவனியாமல் "நீ வீட்டுக்குப் போகவில்லையா?" என்ருன்

"இல்லை நான் காசி போயிருந்தேன்"

"காசியா? எதற்காகக் காசிக்குச் சென்ருய்?"

"அம்மாவை அழைத்துவர"

சதீஷ் திடுக்கிட்டான். பிஹாரி யாரை 'அம்மா' வென்று அழைப்பானென்பது சதீஷிற்குத் தெரியும். "அவளென்ன காசியிலா இருக்கிருள்"

"ஆம்"

"உனக்கு அவள் விலாசம் தெரியுமா?"

"தெரியாது. ஆனுல்காசியிலிருப்பதாகத்தெரியும். காசியிலிருந்தால் விஸ்வனுதர் ஆலயத்தில் ஒருநாளைக்கு சந்தித்து விடலாம்" என்று நினைத்தேன்.

"சந்தித்தாயா?"

"ஆம்"

சதீஷின் உள்ளத்திலே மிகுந்த கலவரம் அடைந்தான். சிறிது நேரத்திற்குள் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு, "என்னிடம் தெரிவிக்காமல் நீ எதற்காக அங்கு சென்ருய்? நீ செய்த காரியம் சரியில்லை. இம்மாதிரி பெண்களுக்கு மானம் மரியாதை ஒன்றும் கிடையாது. உன்னைக்கண்டு ஒருசமயம் உன்னேடு புறப்பட்டு வந்திருந்தாளாஞல் நீ இப்பொழுது எவ்வளவு சங்கடத்தில் மாட்டிக்கொண்டிருப்பாய் தெரியுமா" என்ருன்.

பிஹாரி பேசாமல் நின்று கொண்டிருந்தான்.

சதீஷ் மீண்டும், "வீட்டிற்குள் நுழைய விடமாட்டேன் கதவிற்கு முன்ளுலேயே வேலைக்காரனை விட்டு விரட்டுவேன். அவளை அழைத்துவந்து இந்த இரவில் நீ எவ்வளவு கஷ்டப்படுவாய் என்பதைச் சற்று சிந்தித்துப்பார்! என் சனங்கள் உன்னைக் காரணம் இன்றி முட்டாள் என்கிருர்கள்? சரி, போய் சாப்பிடு. காளீச்சரன், ஒரு கோப்பை கொண்டு வாப்பா" என்ருன்.

உடனே காளீச்சரன் பூஜைக்கு வைத்ததிலிருந்து ஒரு கோப்பை கொண்டுவந்து கொடுத்தான்.

பிஹாரி மெதுவாக, "அம்மா அழைக்கிருர்கள்' என்ருன்.

சதீஷ் கோப்பையை வாயின் அருகில் கொண்டு போனவன் திகைப்படைந்தான். "யார் அழைக்கிருர்கள்?" என்ருன்.

"அம்மா"

சதீஷ் பயந்துபோய் கையிலிருந்த கோப்பையைக் கீழே வைத்துவிட்டு, "உன்னேடு வந்திருக்கிருளா? அதை என் முதலிலேயே சொல்லக்கூடாது?" என்ருன்.

பிஹாரி பதில் அளிக்காமல், "இப்போதுதான் தங்களைக்கூட்டி வரச் சொன்னுர்கள்" என்ருன்.

சதீஷ் மெதுவாக, "பாபு ஜுரமாக இருக்கிருர், அவருடைய நண்பர்கள் காண வந்திருக்கிருர்கள். அரைமணி நேரத்துக்கப்புறம் பார்ப்பதாகப் போய்ச் சொல்லு" என்ருன்.

பிஹாரி கண்ணுல் சைகை செய்து, "அவர்கள் இங்கேதான் நின்று கொண்டிருக்கிருர்கள்" என்ருன்.

சதீஷ் திடுக்கிட்டு, "இங்கேயா!" என்றான்.

பிஹாரி "ஆம்" என்றான்

சதீஷ் அவசரமாக இரண்டு மூன்று லவங்கத்தை வாயில் போட்டுக் கொண்டு மெதுவாக வெளியில் வந்தான். கதவுக்குப் பின்னாலேயே சாவித்திரியின் முந்தானைத் தலைப்பு தெரிந்தது. இது வரையிலும் அவள் அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் என்ன வெல்லாமோ சொல்லவேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தாள். ஆனால் இப்போது அவள் வேறொன்றும் கூறாமல், "உள்ளே வாருங்கள்" என்று மட்டும் கூறினாள்.

இந்தக் குரல் சதீஷின் சப்த நாடிகளிலும் சென்று ஊடுருவியது. அந்த அறைக்குள் சதீஷ் அடிஎடுத்து வைத்ததும், "ஜுரமா உங்களுக்கு!" என்றாள்.

"ஆம், ஜுரம்தான் அடிக்கிறது"

சாவித்திரி அருகில் வந்து அவனது நெற்றியில் கைவைத்து பார்த்தாள். உடனே அவள் ஜுரத்தின் வேகத்தைக்கண்டு திடுக்கிட்டாள். "தேகம் கொதிக்கிறது. வாருங்கள், படுக்கை விரித்துத் தருகிறேன். வந்து படுத்துக் கொள்ளுங்கள். பிஹாரி, பாபு அறைக்குள் விளக்கேற்று" என்று கூறிவிட்டு மாடிக்குச் சென்றாள்.

கட்டிலில் படுக்கை விரிக்கப் பட்டிருந்தது. சாவித்திரி முந்தானையால் தூசிகளைத் தட்டினாள். சதீஷ் ஒரு சாதுக் குழந்தைபோல படுக்கையில் படுத்துக் கொண்டான். கால் மாட்டிலும், தலை மாட்டிலுமிருந்த சன்னல்களை மூடிவிட்டு "சாதுவின் அறை எது?" என்று கேட்டாள்.

பிஹாரி அடுத்த அறையைக் காட்டினான். உடனே சாவித்திரி "அங்கிருக்கும் அவனுடைய சாமான்களை கீழே அனுப்பிவிடு. கீழே இருக்கும் காலி அறைகளில் ஏதாவது ஒன்றில் சுகமாக இருந்து கொள்ளட்டும்" என்றாள்.

பிஹாரி போகத்தொடங்கினான். சாவித்திரி அவனை மறுபடியும் கூப்பிட்டு, "பாபுஜியைப் பார்க்க வந்தவர்களை வீட்டிற்குப் போகச் சொல்லிவிடு. பாபுக்கு ஜுரம் ரொம்ப அடிக்கிறது. கீழேவர முடியாது" என்றாள்.

சதீஷ் நன்கு போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டான்.

பிஹாரி அம்புபோலக் கீழே போனான். பிஹாரி போனபிறகு "இனி எழுந்துவிடாதீர்கள். நான் போய் சமையலுக்கு ஏற்பாடு செய்துவிட்டு வருகிறேன்" என்று கதவை மெதுவாகச் சாத்திவிட்டுச் சென்றாள்.

சாது கீழே போக மறுத்துவிடுவாரோ என்ற பயத்தால் சாவித்திரி கதவருகில் வந்து நின்று கொண்டிருந்தாள்.

அதே சமயத்தில் கீழ் அறைக்குள் சென்று பிஹாரி, "அம்மா, உங்களனைவரையும் வீட்டிற்குப் போகச் சொல்லுகிறார்கள். பாபுஜிக்கு ஜுரம் அதிகமாக அடிக்கிறது. அவர் கீழே வரமாட்டார்" என்று கூறிவிட்டு, பாபுஜியைப் பார்த்து, "மகராஜ் தங்களுடைய சாமான்களை எல்லாம் கீழ் அறையில் வைத்துவிட்டு வருகிறேன்" என்று கூறினான்.

பிஹாரியின் வார்த்தைகளைக் கேட்டு பாபுஜிக்குக் கோபம் வரவில்லை. அவர் சாந்தமாக, "அது யார் பிஹாரி?" என்றார்.

(தொடரும்)

புத்தக ஆராய்ச்சி

★

[திருப்பாவை: தருமபுர ஆதீனம் மகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆக்ஞைப்படி வெளியிடப் பெற்றது. தருமபுர ஆதீனம்]

ஸ்ரீ ஆண்டாள் அருளிய திருப்பாவை யாவரும் அறிந்ததே. இதயம் கனியச்செய்யும் இப்பாசுரங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டும் உன்னதச் சித்திரங்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிகள் அவர்கள், இத்திருப்பாவைப் பாசுரங்களை யாவரும் ஓதி நலம்பெறும் பொருட்டு பிரசுரம் செய்வித்தது போற்றத் தக்கது.

★

[திருக்கலிக்கா மூர்த் திருப்பதிகம்: தருமபுர ஆதீனம் மகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆக்ஞைபடி வெளியிடப் பெற்றது. தருமபுர ஆதீனம்]

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிகள் பல அருட்பணிகள் புரிந்து வருதலை நாடு நன்கு அறியும். சைவ சமய உண்மைகளைத் தமிழ்மக்கள் நெஞ்சிலே திளைக்கச் செய்தல் வேண்டும் என்பதும் அவைகளுள் ஒன்று. அதனைக் குறிக் கோளாகக் கொண்டு இந்நூல் வெளியிடப் படுகிறதென முன்னுரையிலிருந்து தெரிய வருகிறது. அன்பர்கள் இதனால் பயன் பெறுவார்களாக.

★

[பேசும் படம் பொங்கல் மலர்: விலை ரூ 1—8—0. காரியாலயம்: தியாகராய நகர், சென்னை]

இந்தப் பொங்கல் மலரைக் கையிலெடுத்துப் புரட்டிக் கொண்டு வந்தால், சில அரிய காட்சிகளைக் காணலாம். அந்த அரிய நாட்களுக்கிடையே ஒரு அற்புதமான காட்சியும் கலந்திருக்கிறது! அதாவது "பஞ்சாங்கப்" பகுதி. இத்தனை நாளும் எத்தனையோ பஞ்சாங்கங்கள் பார்த்திருக்கலாம். இந்த சினிமா நட்சத்திரங்கள் ஜொலிக்கும் 'பஞ்சாங்கம்' தனி அழகுடன் பிரகாசிக்கிறது. பனிரண்டு நட்சத்திரங்கள் பனிரண்டு மாதங்களை சோபிக்கச் செய்கிறார்கள். சினிமா ரசிகர்களுக்கு இது இன்பம் தரும் என்பதில் சந்தேகம் இல்லை.

★

[ஐந்தெழுத்து: தருமபுர ஆதீன மகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆக்ஞைப்படி, திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் வெளியிடப் பெற்றது.]

'அடியார் தம் அல்லல் தீர்க்கும் அருமருந்தாய் அருந்துணையாய் விளங்கும் இறைவனுக்குரிய திருமந்திரமாகவும் மந்திரங்களுக்கெல்லாம் நாயகமாகவும் இருப்பது நமசிவாய என்னும் திருவைந்தெழுத்தேயாம்' அதன் பெருமையினை விளக்கும் நூலே இது.

வேய்ங் குழல்

"செந்தாமரை"

மூங்கிலினை வெட்டி அதன்
முதுகில் துளைபோட்டு
ஏங்கிநிதம் தவிக்கும் மன
ஏடவிழ்க்கும் பாட்டை
ஊதுகின்றான் ஒருவன் அதோ
ஊதுகின்றான் ஒருவன்.

புல்நுனியைத் தொட்டு மலர்ப்
பொன்னிதழை மோந்து
எல்லையிலா வெளியில் தவழ்ந்
தெழுந்துலவும் காற்றை
ஊதுகின்றான் குழலில் அதோ
ஊதுகின்றான் குழலில்.

பிறப்பிறப்பை ஒழித்து மிகும்
பெருமிதத்தில் தன்னை
மறந்துலவும் காற்றை முழு
மூச்சுடனே இழுத்து
ஊதுகின்றான் குழலில் அதோ
ஊதுகின்றான் குழலில்.

காலனையும் வென்ற உயர்
காற்றுடனே கலந்து
மேலுலகை எட்ட எழும்
மோக வெறிப்பெருக்கில்
ஊதுகின்றான் குழலை அதோ
ஊதுகின்றான் குழலை.

முள்ளுறுத்தும் வாழ்வில் தினம்
மூச்சுடைய விம்மி
உள்ளுடையும் சோகக் கதை
ஒழிய வேண்டுமென்றங்
கூதுகின்றான் குழலை அதோ
ஊதுகின்றான் ஒருவன்.

கற்பனைச் சித்திரம்:

விமர்சனம்!

(கோமதி சுவாமிநாதன்)

[ரகுராமன் தலை தீபாவளிக்கு மாமனார் வீட்டிற்குப் போய் விட்டு அன்று காலையில் தான் வந்திருக்கிறான். இரவு முழுதும் ரயிலில் கண் விழித்ததால், மூக்குக் கண்ணாடி, கை கடிகாரம், பொத்தான், பவுண்டன் பேனா, முதலியவைகளை பக்கத்து மேஜையின் மீது வைத்து விட்டு அயர்ந்து நித்திரை போய் விடுகிறான்.]

கெடிகாரம்: இன்னும் இரண்டு மணி நேரம் ஆசாமி அசையாமல் தூங்குவார் போலிருக்கிறது. நேற்று ரயிலில் அவர் தலை சாய்க்கவேயில்லை.

கண்ணாடி: நேற்று மாத்திரம் தானா? அவர் அயர்ந்து தூங்கி ஐந்து நாட்களாகின்றன. அவர் சம்சாரத்தின், அழகையும் பேச்சையும் அள்ளிப் பருகிக் கொண்டிருந்த போது தூக்கம் எப்படி வரும்.

பேனா: நல்ல வேளை! எனக்கு இந்தத் தடவை நிம்மதியான தீபாவளி தான். ஐந்து நாட்களாக எனக்கு ஜாஸ்தி தொந்திரவு இல்லை. மாமனார் வீட்டிற்கு புறப்படுவதற்கு முன் தான் எனக்கு பயித்தியம் பிடிப்பது போலாய் விட்டது.

பொத்தான்: அவரல்லவா பயித்தியம் பிடித்த மாதிரி இருந்தார். அவர் மனது ரோட் ரோலர் மாதிரி அடித்துக் கொண்டது எனக்கல்லவா தெரியும்.

பே: அது சரி தான் காணும்! அவர் மனைவிக்கு பதினைந்து நாட்களுக்கு முன்னிருந்தே கடிதம் தீவிரமாக எழுத ஆரம்பித்து விட்டார். தினசரி இரண்டு கடிதம், ஒரே அழகு வர்ணனையை திருப்பித் திருப்பி எழுதி எனக்கு மனம் குழம்பி விட்டது. அந்த மனிதனுக்கு பயித்தியம் பிடிக்காதது ஆச்சர்யம் தான்.

கெடி: அதெல்லாம் காதற் பயித்தியம். இனி மேல் பாரும்! உமக்கு அவ்வளவு குழப்பமேற்பட சந்தர்ப்பம் இருக்காது.

பே: ஏன் ஐயா, முதல் தடவையாக சந்திக்கு முன்பே இப்படி எழுதித் தள்ளினாரே. இனிமேல் இதைப் போல் நூறு மடங்கு எழுதுவார். நேரிலே சந்தித்து அவள் அழகில் ஐக்யமாய் விட்டாரல்லவா?

கெடி: உமக்கு இன்னும் அனுபவம் போதாது. நீர் பரீட்சைப் பேப்பர்கள் ஜாஸ்தி எழுதியிருக்கிறீரே ஒழிய காதல் உலகிற்கு நீர் புதிதுதான். ஓர் அபூர்வ வஸ்துவை அடையும் வரையில் தான் ஆர்வம் அதிகமாயிருக்கும். அந்த வஸ்து கிடைத்து விட்டால், ஆர்வம் குறைந்து விடும்.

பே: இதெல்லாம் யார் கண்டார்கள். அவர் ஆர்வத்தை யார் அளந்து பார்த்தார்கள். நான்

கோட் பாக்கெட்டில் கிடந்து தூங்கினேன். ஒரே சமயத்தில்தான் டயரி எழுத என்னை வெளியே எடுத்தார்.

போ: டயரி எழுதக்கூட அவருக்கு சாவகாசம்கிடைத்ததா என்ன? இருந்தாலும் மனுஷ்யனுக்கு இவ்வளவு ஆத்திரம் கூடாது!

கேடி: என்ன ஐயா சமாசாரம்! மறைமுகமாகச் சொல்லி எங்கள் ஆவலைக் கிளப்புகிறீர்.

போ: தீபாவளிக்கு முதல் நாள் சாயங்காலம் அந்தப் பெண் காப்பி கொண்டு வந்தாள். அவள் காப்பியை மேஜை மீது வைத்தாளோ! இல்லையோ! விரோதிப் படைகள் மீது பாயும் டாங்கி மாதிரி பாய்ந்து அவளை அணைந்து கொண்டார். இரண்டு பேருக்கும் நடுவில் அகப்பட்டு நான் மூச்சுவிட திணறிப் போனேன்.

கண்: எனக்கே வெட்கமாயிருந்தது. கண்களை மூடிக் கொண்டேன்,

கேடி: இந்த சமாசாரம் தானா! அவள் காப்பி கொண்டு வந்த பிறகு தான் எனக்கு கொஞ்சம் வி மாசனம் கிடைத்தது. மனுஷ்யன் சாப்பிட்ட உடனேயே மாடிக்குப் போய் உட்கார்ந்து கொண்டான். அப்போது முதலே, காப்பி நேரம் எப்போது வரும் என்று செகண்டுக்கு செகண்ட் என்னைப் பார்க்க ஆரம்பித்து விட்டான். இரண்டு நிமிஷப் பார்வையிலேயே ஒரு நபரை ஹிப்னடிச சக்தியால் மயங்க வைத்து விடலாம். என்னை நான்கு மணி நேரங்கள் உற்றுப் பார்த்துப் பார்த்து எனக்கு உடம்பில் வலி ஏற்பட்டு விட்டது.

போ: உமக்கு உடம்பு வலியோடு போயிற்று. என் உடம்பு அப்பளத்துமாவு மாதிரி அமுங்கிப் போய் விட்டது.

பே: என்னவோ உளறுகிறீர்களே! ஸ்ரீரகுராமன் டயரி எழுதிக் கொண்டிருந்தபோது தான் அவள் வந்தாள். உடனே அவர் என்னைக் கீழே வைத்தார். அப்போது அவள் என்னை நாசூக்காக கையிலெடுத்தாள். பூப் போன்ற விரல்கள். என் உடம்பு புல்லரித்து விட்டது. அந்த இன்பத்திற்காகத் தானே மனிதன் பதினைந்து நாட்களாய் வரைந்து வரைந்து தள்ளினான் என்று நினைத்து மனதை சமாதானப் படுத்திக் கொண்டேன்.

கண்: உம்! எஜமான் மனைவி! ஜாக்ரதையாய்ப் பேசும்.

கேடி: மாமனார் கொஞ்சம் தாராள புத்திஉள்ளவர் போலிருக்கிறது. மாப்பிள்ளைக்கு செய்ய வேண்டிய சம்பாவனைகளிலும் உபசாரங்களிலும் தாராளமாயிருந்ததோடு அடிக்கடி தன் பெண்ணை மாப்பிள்ளையைப் போய் கவனிக்கும்படி தூண்டுவதிலும் தாராள மாயிருந்தார்.

பே அப்படியிருந்ததால்தான் தீபாவளி குஷியாக இருந்தது. நான் இவர் கைக்கு வருமுன் வேறொருவரிடம் இருந்தேன். அந்த மனிதன் கொஞ்சம் சங்கோஜ பிராணி. தலை தீபாவளிக்கு மாமனார் வீட்டிற்குப் போனார். பெண்ணும் அதே மாதிரி தான்.

கண்: இருவர் சங்கோஜமும் க்ஷண நேரத்தில் சௌஜன்யமாக மாறி விட்டதோ?

பே: அதுதான் இல்லை! அவர் மாடி வராண்டாவிலிருந்து அவளை எதிர்பார்த்துக் காத்திருப்பார்.

அவள் மாடிப் படிகளில் ஏறின தும், சங்கோஜப் பட்டுக் கொண்டு ஹாலுக்குள் போய் விடுவார். சிறிது நேரம் அந்தப் பெண் தயக்கத்துடன் மாடிப் படிகளில் நிற்பாள். உள்ளே போனவர் சிறிது தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, அவளை எதிர் கொண்டழைக்க வராண்டாவிற்கு வருவார். அவர் தலையைப் பார்த்ததும், அந்தப் பெண் இருந்த தைரியத்தையும் கைவிட்டு விட்டு மட மட வென்று கீழே இறங்கி உள்ளே ஓடி ஒளிந்து விடுவாள். கடைசி வரை அவர்கள் சந்திக்கவே இல்லை.

போ: சுத்தக் கர்னாடகம். அந்தக் காலம் மலையேறி விட்டது. இப்போது சந்திப்பு அளவுக்கு மீறி போய் விட்டதால் தம்பதிகள் கொஞ்சம் தனியாய்ப் பிரிந்திருக்கக்கூட விரும்புகிறார்கள்.

கேடி: ஸ்ரீமதி ரகுராமனின் பெயர் என்ன?

கன்: ஜானகி.

கேடி: என்னவோ ஜாங்கிரி! ஜாங்ரின்னு காதிலே விழுந்ததே!

கன்: ஜாங்கிரியுமில்லை. லட்டுவுமில்லை. செல்லமாக ஜானகி என்ற பெயரை ஜான்கி என்று கூப்பிடுகிறார்கள்.

கேடி: நல்ல வேளை இன்னும் செல்லமாக "ஜா" என்று கூப்பிடவில்லையே.

போ: அவளைப் பார்க்கறதுக்கு முன்னாலே மனது நூறு மைல் வேகத்தில் அடித்துக் கொண்டது, முதல் தடவையாக அவள் காப்பி கொண்டு கதவருகில் வந்ததும் வேகம் முன்னூறு மைல் ஆனது. அவள் அருகில் வந்தாள். அவள் கையைப் பற்றியதும் ஐந்நூறு மைல் வேகத்தில் ஓடியது. ஐந்தே வினாடிகள். வேகம் சம அளவிற்கு வந்து விட்டது. எப்படி வேகம் அவ்வளவு சீக்கிரம் குறைந்து விட்டது என்று எனக்கே ஆச்சர்யமாயிருந்தது.

பே: நந்தன் சிதம்பரம் போகும் முன் பக்தி பரவசத்தில் சிக்கித் தவித்து மனமுருகினான். பக்தியால் பிதற்றினான். சிதம்பரம் போன உடன் ஒரே வினாடியில் ஜோதிப் பிழம்புடன் கலந்து கொள்ள வில்லையா? அதே மாதிரித்தான் ரகுராமன் காதல் ஜோதியில் கலந்து விட்டார்.

(ரகுராமன் திரும்பிப் பார்த்துக் கொள்கிறான். கடிகாரம், பேனா, இவைகளின் தீபாவளி விமர்சனம் தடைபடுகிறது.)

பேனா மெதுவாக வாய்க்குள் பாடிக் கொள்கிறது:

காதல் வெளியினில் கலந்து கொண்டால்
அவர் கண்ணையும் விழிப்பாரோ!
பூதலத்தில் இது புதுமை இல்லையென்று
யாவரும் அறிவாரே.

வாழ்க்கை விசித்திரம்

[என். சுப்பிரமண்யம்]

மார்கழி மாதத்துப் பனி, படர்ந்து வந்தது. பனியின் கொடுமையும், பசியின் பிசாசுத் தனமும் சேர்ந்து பேச்சியம்மைக்கு கோபம் கோபமாய் வந்தால், அவள் என்ன செய்யமுடியும்? எதிரே ஓங்கி வளர்ந்த புங்க மரத்தின் வேர் முட்டு அடுப்பின் ஒரு பாகம்; இன்னொரு பாகம் மரத்தின் அடித்தண்டு; மூன்றாவது செங்கல் காரைக்கட்டி. இந்த விசித்திர அடுப்பை ஊதி ஊதி கண் புகைந்து விட்டது. உலையரிசி கொதிப்பதைக் காட்டிலும் உள்ளத்தில்தான் கொதிப்பு ஜுவாலை.

சற்று தூரத்திலே, பெருவியாதிக்காரன் உல்லாசமாக தகரக் குவளையைக் குலுக்கினான். கலகலவென நகைத்தன நாணயங்கள்! அவன் பார்வை, சற்று எட்ட இருந்த மலையாளத்துப் பிச்சைக்காரக் குட்டியின் வசீகர வடிவத்தின்மீது வட்டமிட்டது. அவள் உடலிலே யௌவனத்தின் தாண்டவம். கவர்ச்சி நிறைந்த கட்டழகு. ‘பனியால் நனைந்து வெயிலால் உலர்ந்து பசியால் அலைந்த’ அவன் உள்ளத்தைக் காதல் கொள்ளச் செய்தது. இன்னும் எழ்மையின் அபய வடுக்கள் விளையாட ஆரம்பிக்காத பருவம். நாகப்பாம்பின் கண்ணொளியில் இறங்கிவிடும் தவளைபோல், கலகலத்த நாணயங்களின் ஓசையில் தன் இளமையின் துடிப்பைப் பறிகொடுக்க இருந்தாள்.

இப்படி எவ்வளவோ அந்த ஸ்வர்க்க பூமியில் நடந்து கொண்டிருந்தன. மணிக்கூண்டுக்குத் தெற்கே, இரும்புக் கடைகளின் எதிரில் மசூதியின் சுவரையொட்டி பிச்சைக்காரர்களின் போக பூமியில் அன்றாட வாழ்க்கை போராட்டத்தில் அதுவும் ஒருநாள். இருள் கவிழ்ந்து, ஜனசந்தடியும் அடங்கிவிட்டது.

ஆனால், நூறடிக்கு அப்பால், சற்றைக் கொருதரம் ‘குப் குப்’ பென அணைந்து, திடீரென எரியும் குத்திருமல் ‘பெட்ரோ மாக்ஸ்’ விளக்கு. அது சாயாக்கடை என்பதற்கு விளம்பரம். அதிலிருந்து படர்ந்த வெளிச்சம், புழுதி மண்ணை, பகட்டாக மாற்றி ரம்யத் தோற்றம் கொடுக்கிறது. இரவுக்குத்தான் வசீகரம் அதிகம். நிழலும் ஒளியும் சேர்ந்தால் இன்பக் கலப்புகள் உண்டாகி விடுகின்றன.

பேச்சியம்மை தன் சகோதரத் தொழிலாளிகள் கூத்துக்களை லட்சியம் செய்யாமல், அடுப்பை மீண்டும் மீண்டும் ஊதினாள். தன் புருஷன் வருகிறானா என சற்றைக் கொருதரம் தூரத்தில் பார்ப்பாள். விறகு இருந்தால், என்ற நினைப்பு வரும். மர அகப்பையால் கொதியெடுத்த சாதத்தைக் கிளறிப் பார்த்தபோது மனித ஜாதியின் குணங்கள்போல, விந்தை விந்தையாகப் பச்சை, சிகப்பு, நீலம், ஊதா என இருந்த அரிசிகளில் கொஞ்சம் அரிசி குழைந்து கூழாகவும், மற்றவை திமிர்வாதம் பிடித்த மாதிரியும் விரைத்துக் கிடந்தன. ஊத ஊத சாம்பல் பறந்தது.



அவளுக்கும் ஓர் காதலன்
வந்து சேருகிறுன்

ஏனெனில், அவள் டாம்கோ கூந்தல் தேங்கா யெண்ணெயும் ஷாம்பூவும் உபயோகித்து வருகிறுள்.

தி டாடா ஆயில் மில்ஸ்
கம்பனி, லிமிடெட்.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்.

(தலைமை ஆபீஸ்: பம்பாய்)

தீ, ஆயுள், கப்பல், விபத்துகள்

முதலிய இன்ஷூரன்ஸ்கள் செய்யப்படுகின்றன.

தலைவர் :- ஸர். சுனிலால் வி. மேதா.

உபதலைவர் :- ஸ்ரீ ஜே. ஆர். டி. டாடா.

ஆயுள் இலாகா சம்பந்தமான விவரம்

1944-ம் வருஷத்தில் செய்யப்பட்ட புது பிஸினஸ்	ரூ. 6 கோடிக்கு அதிகம்.
1944-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ந் தேதி வரைக்கும் செய்யப் பட்ட பாலிஸிகளின் மொத்த தொகை	ரூ. 21 கோடிக்கு அதிகம்.

பொருளாதார புள்ளி விவரங்கள்

செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 71,21,055.
மொத்த நிதி	ரூ. 6 கோடிக்கு அதிகம்.
மொத்த இருப்பு (சுமார்)	ரூ. 8 கோடி
ஆரம்பம் முதல் கிடைத்த பிரிமியம் வருமானம்	ரூ. 22 கோடிக்கு அதிகம்.
கொடுக்கப்பட்ட மொத்த உரிமைத் தொகை	ரூ. 11 கோடிக்கு அதிகம்.

இன்ஷியூர் செய்வதற்கோ அல்லது பிரதிநிதியாக இருப்பதற்கோ சிறந்த இந்திய கம்பெனி.

சென்னை கிளைநிலையம்,
4 & 5 முதல் லைன் பீச்.

கே. கணபதி,
பிராஞ்சு மானேஜர்.

Vasantham, Feb. 1946.

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி

24/25. சைனு பஜார் :: மதருஸ்

வசந்தம் சந்தா விபரம்

வருஷ சந்தா	...	ரூ. 6 0 0
ஆறு மாத சந்தா	...	ரூ. 3 0 0
தனிப்பிரதி	...	ரூ. 0 8 0

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மானேஜர், வசந்தம் காரியாலயம்,
4/12 A, திருச்சிரோட், கோயமுத்தூர்.

அரவிந்த்

வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்:

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங், டுவில், கிரேப், பாப்ளீன், நயின்ஸுக், லான், மல், டோரியா, வாயில் முதலிய தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹமதாபாத்

எங்கும் விற்பனையாளர்கள் உள்ளனர்

Printed at the Vasanta Mills Press, and Published by K. P. Sundaram at 4/12 A. Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam.